கல்கி

KALKI 8.10.2000

ரூ. 5.00



அடக்கி வாசிக்கும் அழகிரி!



மம்மி, நான் இப்போ, தூங்க போகட்டுமா?
Funtime
Funsheets
இனி ஃபன்டைம். பாம்பே டையிங்கின் பெட்ஷீட்டுகளில், குழந்தைகளுக்கான புதிய அணிவரிசையில், உண்மையான விளையாட்டுகளும் உள்ளன. தாயக்கட்டம், பரமபதம் என்று எவ்வளவோ உள்ளன. உங்கள் குழந்தைகளை சீக்கிரம் தூங்கவைக்க சிறந்த வழி.
BOMBAY DYEING

'தினமும் ஏதாவது ஒரு பேட்டி அளித்து சேனல்களிலும் பத்திரிகைகளிலும் முகம் காட்டுபவர்' என்றழைக்கப்படும் பி.ஜே.பியின் பொதுச் செயலாளர் வெங்கையா நாயுடு, சமீபத்தில் சென்னை வந்திருந்தார். கல்கிக்காக அவரைச் சந்தித்தோம்.





"ஜெயலலிதா காலம் மாறிவிட்டது!"

– வெங்கையா நாயுடு பேட்டி

கேள்வி: தமக்கு வேண்டியவர்களைக் கட்சி நிர்வாகக் குழுவுக்கு நியமித்து கட்சியில் தமது நிலையை வாஜ்பாய் வலுப்படுத்திக் கொண்டுவிட்டார் என்று கூறப்படுவது குறித்து உங்கள் கருத்து என்ன?

வெங்கையா நாயுடு: வாஜ்பாய் கோஷ்டி – அத்வானி கோஷ்டி என்பதெல்லாம் மீடியாவின் கற்பனை. வாஜ்பாயும் அத்வானியும் இரட்டையர்கள் போல. கோஷ்டிகள் என்பது இங்கு இல்லை. கட்சியின் இரண்டு கண்கள். அவர்களுக்குள் எந்தப் பிரச்னையும் இல்லை. பங்காரு லட்சுமண் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், கட்சி மரபுப்படி பிரதமர், உள்துறை அமைச்சர், முன்னாள் தலைவர் தாக்ரே மற்றும் மூத்த தலைவர்களைக் கலந்து ஆலோசித்துதான் டீமை அழைத்துக் கொண்டிருக்கிறார்.

நிர்வாகக் குழுவில் இடம் பெறுவார்கள் என்று உறுதியாய் எதிர்பார்க்கப்பட்ட சிலர் இடம்பெறவில்லையே! இதுவே, பல்வேறு பிரச்னைகளுக்குக் காரணமாகி விட்டதல்லவா?

சுஷ்மா ஸ்வராஜ் போன்ற ஒரு சிலரைத் தானே குறிப்பிடுகிறீர்கள்? கட்சித் தலைமைப் பொறுப்புக்கு வந்தவுடன், தலைவர்தான் தன்னுடன் இணைந்து பணியாற்றப் போகும் குழுவினரை முடிவு செய்கிறார். தலைவர் முடிவு செய்தாலும், சம்பந்தப்பட்டவரும் சம்மதிக்க வேண்டும் இல்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

வையா? சுஷ்மா ஸ்வராஜ், தாம் கட்சிக்காக உழைப்பதாகவும் கட்சிப் பொறுப்புகள் ஏதும் வேண்டாம் என்றும் தெரிவித்துவிட்டார். தவிர, மொத்தத்தில் இருபது சதவீதம் புதிய முகங்களுக்கு வழி விட்டு, பழைய முகங்கள் ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்பது கட்சி விதிகளுள் ஒன்று. அதுவும் கடைபிடிக்கப்பட்டுள்ளது. எனவே இதுகுறித்து சர்ச்சைகள் தேவையில்லை.

தமிழக பி.ஜே.பியில் ரங்கராஜன் குமாரமங்கலத்தின் மரணம் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டது. அதனை நிரப்பும் விதமாய் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

ரங்கா, மிகவும் திறமைசாலி. பி.ஜே.பிக்கு வந்த மிகக் குறுகிய காலத்திலேயே தம்மை, கட்சியில் முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொண்டவர். அவரது மரணம், ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருப்பது நிஜம்தான். ஆனால், பி.ஜே.பி. வளர்ந்து கொண்டே இருக்கும் கட்சி. அதில் திறமைசாலிகளுக்குக் குறைவே இல்லை. தமிழகத்தைப் பொறுத்த வரை, பி.ஜே.பி. மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இங்கும் ஒரு தலித் தலைவராகியிருக்கிறார். அவர் திறமையானவர், அனுபவம் நிறைந்தவர் என்பதால் தான் தலைவராகியிருக்கிறாரே தவிர, தலித் என்கிற காரணத்துக்காக மட்டும் இல்லை. எனவே ரங்காவின் இடத்தை நிரப்ப இன்னார் என்று குறிப்பிடவேண்டிய அவசியமில்லை.

பா.ஜ.க. தலைமைப் பொறுப்புக்கு, உங்கள் பெயர் கூட பரிசீலிக்கப்பட்டது. ஆனால், கடைசியில் பங்காரு லட்சுமண் தலைவராகி விட்டார். உங்களைவிட அவர் எந்த விதத்தில் சிறப்பானவர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

கட்சித் தலைமைப் பதவி காலியாகும் போது, கட்சிக்குள் அதுபற்றி நிறைய ஆலோசனைகள், விவாதங்கள் நடக்கும். இதனால் பலவிதமான எதிர்பார்ப்புகள் ஏற்படும். வதந்திகள் பரவும். எல்லாம் சகஜம். என் பெயர் உட்பட சில பெயர்கள் தலைவர் பதவிக்குப் பரிசீலிக்கப்படுவதாக நான் அறிந்தவுடன் தாக்கரே, அத்வானி இருவரையும் சந்தித்து, என் பெயரை தயவு செய்து பரிசீலனை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். எனக்கு இப்போதுள்ள பொறுப்புகளை நான் திருப்திகரமாய் நிறைவேற்றி வருகிறேன். வேறு பொறுப்புகள் ஏதும் வேண்டாம்! நான் வயதில் இளையவன்; எனக்கு நீண்ட எதிர் காலம் இருக்கிறது. இன்னும் அனுபவம் பெற்று, புதுப் பொறுப்புகளை ஏற்கிறேன் என்று விளக்கினேன்.

பங்காரு லட்சுமணன் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், முஸ்லிம்களுடன் நெருக்கமாக வேண்டும் என்று பேசியிருக்கிறாரே! இதன் உள்நோக்கம் என்ன?

அவர் பேசியது புதிய விஷயமே இல்லை. 65ம் ஆண்டில், பண்டிட் தீனதயாள் உபாத்யாயா சொன்னது தான். "முஸ்லிம்கள், நம்முடைய ரத்தத்தின் ரத்தங்கள் என்று சொன்னார் அவர். அடல்ஜி, அத்வானி ஆகியோர் கட்சித் தலைவர்களானவுடனும் இதே பாயிண்ட்டை அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த சமயங்களில் முஸ்லிம்கள் மத்தியில் இது பரவலாகப் பேசப்படவில்லை. 'பி.ஜே.பி முஸ்லிம்களுக்கு எதிரானது, பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால், மதச் சண்டைகள் நிகழும், அவர்கள் இரண்டாம் தரக் குடிமகன்களாக நடத்தப்படுவார்கள் என்று பிரசாரம் செய்யப்பட்டது! ஆனால், பி.ஜே.பி. ஆட்சியில் அப்படி ஏதும் நிகழவில்லை. இதுவரை செய்யப்பட்ட பிரசாரம் பொய் என்று மக்கள் – குறிப்பாக முஸ்லிம்கள் – புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

இதுவரை, மற்ற கட்சிகள், முஸ்லிம்களை ஓட்டுவங்கிகளாகவே பார்த்தார்கள். இதனால் அக்கட்சிகளை முஸ்லிம்கள் வெறுக்கத் தொடங்கி விட்டார்கள்.

அப்படியானால், முஸ்லிம்களின் ஓட்டுவங்கி மீது பி.ஜே.பியின் பார்வை விழுந்துள்ளது. அப்படித்தானே?

அப்படிச் சொல்ல முடியாது. காரணம் நாங்கள் முஸ்லிம்களைத் திருப்திபடுத்து



''ஏம்பா, இன்னும் சாப்பிடவே ஆரம்பிக்கல, அதுக்கு முன்னாடியே டிப்ஸ் கேட்கறியே...''

''எங்க ஓட்டல் சாப்பாட்டைச் சாப்பிட்ட பிறகு உங்களுக்கு டிப்ஸ் தரவே தோணாதே. அதுக்குதான்!''

– வந்தவாசி பா. ஜெயக்குமார்

வதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. கடந்த ஐம்பது ஆண்டுகளில் மற்றவர்கள் ஆட்சி செய்தபோது, பொருளாதார ரீதியில், சமூக ரீதியில் அவர்கள் முன்னேறி விடவில்லை. மத ரீதியான மோதல்களைத் தான் கண்டார்கள். இதைத்தான் அவர் களுக்குப் புரிய வைக்க முயல்கிறோம். சென்ற வருடம், சென்னையில் நடந்த தேசியக் குழுவின் தீர்மானத்தின் அடிப் படையில்தான் பங்காரு லட்சுமண் இப் படிப் பேசியிருக்கிறார். பி.ஜே.பி. இதுவரைப் போய்ச் சேராத புதிய பிரிவினரிடத்தில் கட்சியைக் கொண்டு போகவேண்டும் என்பது அந்தத் தீர்மானம். ஆக, சென்னை யில் போட்ட பிள்ளையார் சுழியைத்தான் பங்காரு லட்சுமண் செயல்படுத்த வேண்டும் என்கிறார். பூகோள ரீதியில், சமுதாய ரீதியில் கட்சி எங்கெங்கெல்லாம் பின் தங்கியிருக்கிறதோ, அங்கேயெல்லாம் பலப்படுத்த வேண்டும். சிறுபான்மை மக்களின் வீட்டுக் கதவைத் தட்ட வேண் டாம். நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல் லாம் சென்று, மக்களைத் திரட்டி உங்கள் கொள்கைகளை, கருத்துக்களை எடுத்துச் சொல்லுங்கள் என்பதே இதன் பொருள்.

பி.ஜே.பி. தேசத்துக்காக பாடுபடும் கட்சி. இந்தத் தேசத்தில் பத்து சதவீதம் முஸ்லிம் களும் இருக்கிறார்கள் அல்லவா? இரண்டு சதவீதம் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்களே! இவர்களைத் தனிமைப்படுத்தி விட்டு, தேசத் துக்கு எப்படிப் பாடுபட முடியும்? பள்ளி யில், ஒரு பையன் எந்தப் பாடத்தில் 'வீக்'காக இருக்கிறானோ அந்தப் பாடத்தில் தனி கவனம் செலுத்தி ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதுபோல பி.ஜே.பி. எங்கேயெல் லாம் 'வீக்'காக உள்ளதோ, அங்கேயெல்லாம் பிரத்யேக கவனம் செலுத்தி பலப்படுத்து வதே எங்கள் நோக்கம்.

மைனாரிடிகள் ஆதரவு இல்லாமலேயே, எங்களால் ஆட்சிக்கு வர முடியும் என்பதை நிரூபித்து விட்டோம். ஆனால், தேச நலன் என்பது அனைவரையும் அரவணைத்துச் செல்வது; அனைவரது நலனுக்கும் உழைப் பதுதான். எனவே அவர்களுடனும் நெருக்க மாக இருக்கவேண்டும் என்று விரும்பு கிறோம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சி களின் ஆதரவால்தானே பி.ஜே.பி. ஆட்சிக்கு வர முடிந்துள்ளது. பி.ஜே.பி. தனித்து நின்றால் இது சாத்தியமில்லையே! ஆக, பி.ஜே.பியின் பலம் என்பது சொந்தக் காலில் நிற்கும் அளவுக்கு இல்லையே!

நீங்கள் சொல்லுவது சரிதான். தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறும் அளவுக்கு பலம் இருந்தால், கூட்டணியே அவசியமில் லையே! 96, 98, 99 தேர்தல்களில் மக்கள் ஆதரவு கூட்டணி ஆட்சிக்குத்தானே! எந்த ஒரு தனிக் கட்சிக்கும் இல்லையே! காங்கிரஸ் தேய்ந்து வருகிறது; பி.ஜே.பி. வளர்ந்து வருகிறது.

கூட்டணிக் கட்சிகளைத் திருப்திபடுத் துவதில் பி.ஜே.பி. பல பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியுள்ளதே! லேட்டஸ்டாக மே.வங்க அரசை டிஸ்மிஸ் செய்ய மம்தாவின் பிரஷர்?

எதிர்க்கட்சிக்காரர்கள் கொல்லப்படு கிறார்கள்; எதிர்க்கட்சியினர் மீது பொய் வழக்குகள் போடப்படுகின்றன. வன்முறை கட்ட விழ்த்து விடப்படுகிறது. இவை யாவும் நிஜம். அதனை அத்வானியோ, பெர்னாண்டஸோ, மம்தாவோ சுட்டிக் காட்டுவதில் தவறில்லையே! மூன்றில் இரண்டு பங்கு பலம் இல்லாததால் மே. வங்க அரசை டிஸ்மிஸ் செய்வதில் பிரச்னை இருக்கலாம். அதற்காக நிலைமையைப் பற்றிப் பேசுவது தவறா? கூட்டணி தர்மத்தை அனைவரும் கடைபிடிக்கிறார் கள். எனவே யாரும், யாருக்கும் எந்தவித பிரஷரும் தரவில்லை; பிரஷர் மூலம் தனக்கு வேண்டியதைச் சாதித்துக் கொள்ள முயலும் ஜெயலலிதா காலம் மாறிவிட்டது!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**


படங்கள்: **யோகா**



''ஆபரேஷன் செய்யறதுக்கு இன்னிக்கு டாக்டர் இப்படி பயந்து நடுங்குறாரே... ஏன்?''

''நரபலி ஆசாமிகளையெல்லாம் போலீஸ் புடிக்குறதா டீ.வி. நியூஸ்ல சொன் னாங்களாம் அதான்...!''

– தஞ்சை ராகவ், மகேஷ்



நெருப்பாற்றில்

தி.மு.க அமைச்சரவையில் மிகவும் ஜூனியராக இருந்தாலும், கதர்துறை அமைச்சர் அந்தியூர் செல்வராஜ் அவ்வப்போது செய்திகளில் அடிபட்டு வருகிறார். தி.மு.க ஆட்சிக்கு வந்த இரண்டாவது வருடம் சத்திய மங்கலம் அருகிலுள்ள பண்ணாரி அம்மன் கோயிலில் பக்தர்களோடு பக்தராக அமைச்சர் நெருப்பில் நடக்க, "அது ஒரு காட்டு மிராண்டித்தனமான செயல்" என்று கட்சித் தலைமை அவரைக் கண்டித்தது. அடுத்து சமீபத்தில், கதர் துறையில் நடந்த சில முறைகேடுகளைத் தொடர்ந்து அ.தி.மு.க பிரமுகர் பிலிப் தாமஸ் அமைச்சர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் போட்டிருக்கிறார். இந்த வழக்குப் பற்றி அமைச்சர் கவலைப்படவில்லை. "தலைவருக்கு எல்லா விஷயமும் தெரியுமுங்க. என் மேல ஒரு தப்பும் கிடையாதுங்க" என்று உறுதியாகச் சொல்கிறார் அமைச்சர்.

நெருப்பில் நடக்கும் அளவுக்கு ஆத்திகரா அமைச்சர்? "அப்படியெல்லாம் கிடையாது" என்கிறார் அவரது நண்பர் ஒருவர். அமைச்சரின் சொந்த ஊர் அந்தியூரிலிருந்து ஐம்பது கி.மீ தொலைவில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள நல்லான் தொழுவு கிராமம். படித்தது ஈரோட்டில் உள்ள கிறிஸ்துவ மிஷன் பள்ளியில். "ஒன்பதாவது படிக்கும்போதே உள்ளூர் பஞ்சாயத்துத் தலைவருக்கு உதவியாக ஓடியாடி வேலை செய்வார். அந்தத் தலைவர் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர். அதனால் அமைச்சருக்கும் முதலில் திராவிடக் கழகத்தின் மீது பிடிப்பு ஏற்பட்டது. அப்போது பெரியாரை அழைத்துக் கூட்டம் போட்டு எடைக்கு எடை வெங்காயமும் கொடுத்திருக்கிறார் அமைச்சர்" என்கிறார் அந்த நண்பர். அதன் பின் 1972ல் ஈரோட்டில் கலைஞர் பேச்சைக் கேட்டு தி.மு.க.வில் இணைந்து விட்டார். "அவர் படித்துக் கொண்டிருந்த மிஷன் பள்ளி கண்டிப்புக்குப் பேர் போனது. கலைஞர் கூட்டத்துக்குப் போனதால் ஹாஸ்டலில் இருந்து நீக்கி விட்டார்கள். அதன் பின் ஊரிலிருந்து சைக்கிளில் பள்ளிக்கு வந்து கொண்டிருந்தார். பிறகு அரசியல் ஆர்வம் மனத்தை ஆக்கிரமிக்க, படிப்புக்கு டாட்டா காட்டிவிட்டு முழு நேர அரசியல்வாதியாகிவிட்டார் என்றார் அவர்.

பிறகு மாவட்ட கழக அரசியலில் பல்வேறு பொறுப்புகள் இவரைத் தேடி வந்தன. 1992ல் வைகோ தி.மு.க வை விட்டுப் பிரிந்தபோது செயலாளர் உட்பட அனைத்து நிர்வாகிகளும் வைகோ பின்னால் போய்விட, மாவட்ட துணைச் செயலாளராக இருந்த இவர்மட்டும் கலைஞர் பின்னால் நின்றாராம்! உறுதியான

கட்சிக்காரராக இருப்பதால்தான் பல சர்ச்சைகளைச் சந்தித்தும் இவரால் பொறுப்பில் நீடிக்க முடிகிறது போலும்.

'நெருப்பில் நடந்த'தைப் பற்றி யாராவது கேட்டால் "அமைச்சர் என்ற முறையில் அந்த கோயில் திருவிழாவுக்குப் போனேன். பக்தர்கள் ஒவ்வொருவராக தீ மிதித்தார்கள். 'நீங்களும் வாங்க' என்று வற்புறுத்தினார்கள். நானும் இறங்கி நடந்துட்டேன்... அவ்வளவுதான். நான் கோயிலுக்குச் செல்வது கிடையாது. ஆத்திகனும் அல்ல... தலைவருக்கு என்னைத் தட்டிக் கேட்கிற உரிமை இருக்குங்க" என்கிறார் அமைச்சர் அடக்கமாக.

நீந்தி..!

அமைச்சர் தன் தொகுதியான அந்தியூருக்குச் செய்திருக்கும் பணிகளைப் பட்டியலிட்டார் உள்ளூர் உடன்பிறப்பு ஒருவர். எதைச் சொல்லுவது: எதை விடுவது என்ற படி துவங்கினார் அவர் - "ஐந்து கோடி செலவில் அந்தியூருக்கு இரண்டாவது குடிநீர் திட்டம் செயல்படத் துவங்கி விட்டது. சின்ன தம்பிபாளையம், மைக்கேல்பாளையம், நொய்யலூர் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் விநியோகிக்கக் கிட்டத்தட்ட ஏழு கோடி ரூபாய் செலவில் வேலைகள் நடந்து வருகின்றன. இவற்றைத் தவிர 126 கிராமங்கள் பயன்பெறத் தக்க வகையில் காவிரி ஆற்றிலிருந்து ஒரு கூட்டுக் குடிநீர் திட்ட வேலைகள் 21 கோடி ரூபாய் செலவில் நடந்து வருகின்றன. இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவேறினால் அந்தியூர் தொகுதியிலேயே குடிநீர் பஞ்சம் இருக்காது.

தவிர கீழ்பவானி - மேல் பவானி பாலம், வெள்ளி திருப்பூர் பாலம் ஆகியவை அமைச்சரின் பெயரை எப்போதும் சொல்லும். அந்தியூரில் தீ அணைப்பு நிலையம் கொண்டு வந்தது. கால்நடை மருத்துவ நிலையம் அமைத்தது. அந்தியூர் ஆஸ்பத்திரிக்கு ஆம்புலன்ஸ், ஸ்கேன் வசதிகள் செய்து கொடுத்தது ஆகியவற்றைத் தொகுதி மக்கள் ஒரு நாளும் மறக்க மாட்டார்கள்"

தொகுதியில் ரேஷன் கார்டு பிரச்னையே இல்லாத அளவுக்கு 65000 கார்டுகள் விநியோகிக்கப்பட்டிருக்கிறதாம். பல உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. 'நமக்கு நாமே' திட்டத்தின் அடிப்படையில் தொகுதியில் உள்ள எல்லா பள்ளிக் கட்டடங்களுக்கும் லோக்கலாக வசூல் செய்து சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. தொகுதியில் எண்பது சதவீத பகுதியில் தார்ச் சாலைகள் போடப்பட்டுவிட்டன. சென்னம்பட்டி பகுதியில் நான்கு கோடி ரூபாய் செலவில் துணை மின் நிலையம் கொண்டு வந்ததை பெரிய சாதனையாகச் சொல்கிறார்கள்.

"1977ல் இருந்து 1996 வரை அ.தி.மு.க. தாங்க இந்தத் தொகுதியில் வெற்றி பெற்று வந்தது. இருபது வருட இடைவெளிக்குப் பிறகு தி.மு.க. இந்தத் தொகுதியில் வெற்றி பெற்றது. அமைச்சர் இப்போது செய்திருக்கும் பணிகளைப் பார்க்கும் போது அவரைத்தான் இந்தப் பகுதி மக்கள் நிரந்தரமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள் உள்ளூர் கழகப் பிரமுகர்கள். தம் தொகுதியின் வளர்ச்சிப்



பணிகளுக்கு நிதி உதவி பெறுவதற்காக அமைச்சர் கொஞ்சமும் ப்ரோடோகால் கூடப் பார்க்காமல் எல்லா அலுவலகங்களுக்கும், நேரில் விஸிட் செய்து கோப்புகளை நகர்த்து வாராம். அதே போல மற்ற அமைச்சர்களை யும் நேரில் பார்த்து விரைவு படுத்துவாராம். "ரொம்பவும் செல்வாக்குள்ள சீனியர் அமைச் சர்கள் கூட இந்த அளவுக்கு வளர்ச்சிப் பணி களை தொகுதிக்குச் செய்திருக்க முடியாது" என்கிறார்கள் அவர்கள்.

அதே சமயம் தாம் பொறுப்பு வகிக்கும் கதர் துறையில் சொல்லிக் கொள்ளும் அள வுக்குச் சாதனை செய்யும் வாய்ப்புகள் இல்லை அமைச்சருக்கு. "கடந்த ஆட்சியில் போலி கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி வெளி மாநிலங் களிலிருந்து அதிக விலைக்கு கைவினை பொருட்கள் வாங்கி விநியோகித்து அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தி வந்தார்கள். அந்த வகையில் 126 சங்கங்களைக் கண்டுபிடித்து அவற்றை கலைத்தோம். பனை வாரியம் அமைச்சரின் பொறுப்பிலிருக்கிறது. இப்போது குளச்சல் துறைமுகத்திலிருந்து பனை தும்பு ஏற்றுமதி நடக்கிறது. நுங்கு, பனம்பழம் ஆகியவற்றைப் பாதுகாத்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமா என்று ஆராய்ச்சிகள் செய்து கொண் டிருக்கிறோம். வினோபாபாவேவின் பூமிதான இயக்கத்துக்கு 28000 ஏக்கர் நிலம் தமிழகத்தில் வழங்கப்பட்டது. அந்த நிலத்தை நிர்வகிக்க ஒரு வாரியம் இருக்கிறது. அந்த வாரியத்தின் தலைவரும் அமைச்சர்தான். சென்னைக்கு அருகில் உள்ள காட்டுப் பாக்கம் கிராமத்தில் சுமார் மூன்று கோடி மதிப்புள்ள பூமிதான நிலம் ஆக்கிரமிப்பில் இருந்தது. அதை மீட்டோம். பொது நன்மைக்காக இது போன்ற நிலங்களைப் பயன்படுத்துகிறோம். அமைச்சரின் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை மின் நிலையம் கட்ட இந்த பூமிதான நிலத்தை வழங்கியிருக்கிறோம்" என்று சொல்கிறார் அமைச்சரின் இலாகா வைச் சேர்ந்த ஓர் அதிகாரி.

அமைச்சரின் மீது போடப்பட்டுள்ள ஊழல் தடுப்பு வழக்கின் சாராம்சம் தான் என்ன?- கதர் துறையின் மிகப் பெரிய விற் பனை நிலையம் சென்னை குறளகம். பட்டுச் சேலைகள் மொத்தமாகக் கொள்முதல் செய்யப் பட்டு, குறளகத்திலிருந்து மற்ற சிறிய கிளை விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு செல்லப் படும். ஆனால் கடந்த பல வருடங்களாக தமிழ்நாட்டிலிருக்கும் வேறு விற்பனை நிலை யங்களுக்குப் புடைவைகள் அனுப்பப்படுவ தாக ரெகார்டுகள் இருந்தாலும், புடைவைகள் நிஜமாகவே அங்கு அனுப்பப்படுவதில்லை யாம். அதற்குண்டான பணம் அதிகாரிகளால் பெறப்பட்டு 'ஸ்வாஹா' செய்யப்பட்டதாம். இதில் அமைச்சருக்கும் பங்கு உண்டு என்று சொல் லித்தான் வழக்குப் போடப்பட்டுள்ளது. இதில் அடிபடும் தொகை இரண்டு கோடி ரூபாய்!

அமைச்சர் வட்டாரத்தில் இந்த வழக்கைப் பற்றி சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. "1994ல் இருந்தே இது போன்ற முறைகேடுகள் நடக்கின்றன. தணிக்கை அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். குறளகம் அதிகாரிகள் சில குறிப்பிட்ட தணிக்கை அதி காரிகளையே தணிக்கைக்குக் கூப்பிடும்போது சந்தேகம் வந்தது. எனவே வேறு தணிக்கை அதிகாரிகளை அனுப்பினோம். தில்லுமுல்லு அம்பலமானது. விஜிலன்ஸ் விசாரணை போட்டு ஒன்பது பேரை சஸ்பெண்ட் செய் திருக்கிறோம். எனவே தவறைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தது நாங்கள்தான். அப்படி யிருக்க எங்கள் அமைச்சரின் மீது வழக்குப் போடுவது எப்படி சரியாகும்" என்று கேட் கிறார்கள் அவர்கள். நீதிமன்ற தீர்ப்புக்காகக் காத்திருப்போம்.

அமைச்சரின் தொகுதி 'சந்தன' வீரப்பன் உலா வரும் ஏரியா. தொகுதிக்குள் போகும் போது அமைச்சருக்குக் கமாண்டோக்கள் பாதுகாப்பு கொடுக்கிறார்கள். "பர்கூர் மலைப் பகுதியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் சில வேலைகள் நடக்காம லிருக்கின்றன. இதற்குக் காரணம் வீரப்பன் தான். அவனுக்குப் பயந்து காண்ட்ராக்டர்கள் டெண்டர் போடாமல் இருக்கிறார்கள்" என் கிறார் அமைச்சர்.


1999ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர் தலில் கோபி பாராளுமன்றத் தொகுதியில், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் தான் தி.மு.க. வேட்பாளருக்கு அதிக ஓட்டு கிடைத் தது. "இதற்குக் காரணம் கழகத்தின் செல் வாக்கு மட்டுமல்ல, அமைச்சர் தொகுதிக்குச் செய்திருக்கும் நல்ல காரியங்களுக்காகக் கிடைத்த பாஸிடிவ் வோட்டும் ஆகும்" என்று சொன்னார் அமைச்சரின் உதவியாளர்.

— ப்ரியன்

"வீரப்பன் செய்தியை டி.வி.யில் வாசித்து வாசித்து அந்த அம்மாவுக்கு அலுத்துப் போய் விட்டதாம்"

"அதுக்காக 'மீண்டும் சலிப்பு செய்திகள்' என்று சொல்லணுமா?"

- எஸ். மோகன்



தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

பவர்ஃபைனான்ஸ்

நடத்தும்

உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்

டெபாசிட் திரட்டும் முகாம்

மும்பை

பம்பாய் ஆர்ய வைஷ்ய சங்கம் ஹால்,
கன்யகா பரமேஸ்வரி கோயில் வளாகம்
403, வாசவி நிலையம், டெலாங் சாலை,
மாதுங்கா, மும்பை - 400 019.
தொலைபேசி : 4021709
நாள் : 11 முதல் 13 அக்டோபர், 2000 வரை
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

12.12%

12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%.
24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10%
36, 48, 60 மாதங்களுக்கு மாதத்திற்கு 12.00%,
காலாண்டிற்கு 12.12%.

16.34%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 12.00%)

தூத்துக்குடி

ஹோட்டல் ஜானி இண்டர்நேஷனல் (பி) லிட்., அனிகா ஹால் (ஏ/சி) 264, V.E. சாலை,
தூத்துக்குடி - 628 003. தொலைபேசி : 328350, 328960.
நாள் : 3, 4 அக்டோபர், 2000. நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை.

ராஜபாளையம்

நேத்தாஜி அரங்கம் (1 தளம்), 1006-A, திரௌபதி அம்மன் கோவில் தெரு,
ராஜபாளையம் - 626 117. தொலைபேசி : 23468.
நாள் : 5 அக்டோபர், 2000. நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

பவர்ஃபின்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)
பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.

28-9-99 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

Visit us at www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com






அடக்கி வாசிக்கும் அழகிரி!

திருவனந்தபுரம் நோக்கிச் செல்லும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்து மதுரைக்கு 90 கி.மீ. முன்னால் மருங்காபுரி கல்லுபட்டியில் உள்ள சாலையோர உணவகத்தில் நிற்கிறது. பயணிகளில் ஒருவர் கண்டக்டரிடம் "ஏங்க, கோரிப்பாளையத்துல நிறுத்துவீங்களா?" என்று கேட்கிறார். "ஐயா. மதுரையை நெருங்கும்போதே நள்ளிரவு ஆகிவிடும். கடந்த ஒரு வார காலமாக பட, படக்கும் நெஞ்சுடன் நாங்கள் மதுரையைக் கடந்து போகிறோம். அதனால் எல்லா இடத்திலும் நிறுத்த முடியாது. பெரியார் பஸ் ஸ்டாண்டில் இறங்கிடுங்க" என்கிறார் கண்டக்டர். கண்டக்டரின் படபடப்பு முற்றிலும் நியாயமானதுதான். ஏனென்றால், 'உட்கட்சி விவகாரம்' என்று கலைஞரால் சொல்லப்பட்டாலும் அழகிரி பிரச்னை காரணமாக எட்டு பேருந்துகள் எரித்தும், கண்ணாடி உடைக்கப்பட்டும் மதுரையில் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றன.

பஸ்கள் உடைக்கப்பட்டது மட்டுமல்ல. குறிப்பாக இரண்டு நாட்கள் மதுரை மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தெருவில் நடந்தார்கள். 'எங்கள் தலைவர் மேல் கை வைத்தால் அவ்வளவுதான்' என்று தலைமைக்கு எச்சரிக்கை கொடுக்கும் விதத்தில் அழகிரியின்





ஆட்கள் வெறியாட்டம் ஆடினார்கள்.

இங்கு அரசு இயந்திரம் ஸ்தம்பித்து இருக்கிறது. பிரச்னையின் நாயகன் முதல்வரின் மகனாக இருப்பதால் எந்த நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு அதிகாரிகள் திணறுகிறார்கள். மதுரை மக்கள் இன்னமும் ஒரு பயந்த நிலையில் தான் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று நம்மிடம் சொன்னார் மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரான ராஜாங்கம்.



* காவேரி மணியம்


* ராஜாங்கம்


* வேலுச்சாமி


இப்படி மதுரையைக் கலக்கிய அழகிரி விவகாரத்தின் பின்னணிதான் என்ன? 1980களில் முரசொலியின் மதுரைப் பதிப்பை பார்த்துக் கொள்வதற்காக மதுரைக்கு அனுப்பப்பட்டார் அழகிரி. கட்சித் தலைவரின் மகனாக இருந்ததால் நாளடைவில் இயல்பாகவே கட்சிக்காரர்களின் 'இதய தெய்வம்' ஆகிவிட்டார்.

வைகோ கழகத்தைப் பிளந்த சமயம் அழகிரி செய்த பணி மகத்தானது என்கிறார்கள் உடன்பிறப்புகள். மாவட்ட செயலாளராக இருந்த பொன் முத்துராமலிங்கம், கிட்டத்தட்ட கட்சியையே காலி செய்து வைகோவிடம் ஒப்படைத்தபோது மிச்சம் மீதியிருந்த கட்சிக்காரர்களை வைத்து கட்சியைக் காப்பாற்றினார் அழகிரி. அந்தக் கால கட்டத்தில், கல்யாணம், காது குத்தல், என்று தொண்டர்கள் எந்த



நிகழ்ச்சிக்குக் கூப்பிட்டாலும் சென்று கலந்து கொண்டார். தலைவரே கலந்து கொண்டது போல திருப்தியடைந்தார்கள் அவர்கள். அது மட்டுமல்லாமல் தம்மைத் தேடி வந்த தொண்டர்களுக்கு நிதி வசதியும் செய்து கொடுத்தார். தென் பகுதியில் கட்சியைக் காப்பாற்றிய காரணத்தால் 1996ல் கழகம் மீண்டும் பொறுப்புக்கு வந்தபோது, மதுரையை மையமாக வைத்து கட்சி மற்றும் ஆட்சி அதிகாரங்கள், அழகிரி கைக்கு வந்து சேர்ந்தன.

எந்த போஸ்டர், பேனர் என்றாலும் கலைஞர் - அழகிரி படம் போடப்பட்டது. கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் தமக்கு வேண்டிய உடன்பிறப்புகள் எல்லோருக்கும் பதவிகளைப் பெற்றுத் தந்தார் அழகிரி. ஆனால் கட்சித் தேர்தல்களில் மதுரை மாநகரம், வடக்கு, தெற்கு மாவட்டங்களில் தாம் நினைத்தவர்களைச் செயலாளர்களாகப் போட்டாலும் சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் அழகிரி நினைத்ததற்கு மாறாக நடந்தது. உதாரணமாக சிவகங்கையில் சிவராமன் என்பவரை மாவட்டச் செயலாளராக ஆக்க முயன்றார் அழகிரி. ஆனால் சென்னையில் ஒயின் கடை நடத்திக் கொண்டிருந்த ஒருவருக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. இதற்கெல்லாம் உச்சமாக விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டங்களில் இளைஞர் அணி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டபோது தம்மை கலந்தாலோசிக்காமல் போஸ்டிங் போட்டதில் எரிச்சலாகிப் போனார் அழகிரி. சமீபத்தில் கட்சியில் இணைந்த கருப்பசாமி பாண்டியனுக்குத் தலைமை மிகவும் முக்கியத்துவம் தருவதும் அவருக்குக் கடுப்பை உண்டாக்கிறது. க. பாண்டியனும் கே.கே.எஸ்.எஸ். ஆரும் இணைந்து புது அதிகார மையத்தை தென் பகுதியில் ஸ்டாலின் ஆதரவோடு நிலைநாட்ட முயல்வதாய்க் கருதினார் அழகிரி. இவரது தயவில் அமைச்சரான சிலர் இவரைக் கண்டு கொள்ளாமல் இருந்ததும் அழகிரி எரிச்சலுக்கு ஒரு காரணம். இந்த நிலையில் கடுப்புற்ற பாண்டியராஜன் என்ற கழகத் தோழர் வீட்டில் நடந்த திருமண நிகழ்ச்சியின்போது "என்னை நம்பி வரும் கழகத் தொண்டர்களுக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆதலால் நான் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்கிறேன்" என்று அறிக்கை விட்டார் அழகிரி. அவ்வளவுதான்! தொண்டர்கள் ஆடிப் போனார்கள். உண்ணாவிரதம், சாலை மறியல் என்று இறங்கினார்கள். இதற்கிடையில் முப்பெரும் விழா வந்தது. அழகிரி விஷயத்தில் சோர்வாய் இருந்த தொண்டர்கள் முப்பெரும் விழாவைப் புறக்கணித்தார்கள். 'அழகிரி சொல்லித்தான் கட்சிக்காரர்கள் விழாவைப் புறக்கணித்தார்கள்' என்று கருதிய தலைமை, அழகிரியுடன் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று அறிக்கை விட்டது. மதுரையை கலவரம் தொற்றிக் கொண்டது.



கட்சித் தலைமை சொன்னபடி அழகிரியுடன் கட்சிக்காரர்கள் யாரும் தொடர்பு கொள்வதில்லையா? மதுரை ஜீவா நகரில் உள்ள அழகிரியின் வீட்டில் சீருடை மற்றும் மப்டியில் நிறைய காவலர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். 'அண்ணன் மூன்று நாளாக யாரையும் பார்ப்பதில்லை' என்று காவலர் ஒருவர் நம்மிடம் சொல்கிறார். வெறிச்சோடியிருக்கும் தெருவில் டாட்டா சுமோக்கள் அணிவகுக்கத் துவங்குகின்றன. "இந்தச் சமயத்துல தாங்க அண்ணனைப் பார்க்க வேண்டும். கட்சி விஷயமா பார்க்கறோமோ இல்லையா என்பது பிரச்னையில்ல, ஒரு நண்பனைப் பார்க்கறோம். 1992ல் தி.மு.க. தொண்டர்கள் வைகோ பிரிவின்போது ரத்தம் சொட்ட, சொட்ட ஓடியபோது காப்பாற்றியவர் அண்ணன்தாங்க." என்கிறார் நரிக்குடி ஒன்றியச் செயலாளரான நடராஜ். "எல்லாம் சரியாயிடும்" என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் மேலூர் நகரச் செயலாளரான தங்கபாலன். கட்சி எதிர்காலத்தில் உயிரோட்டமா இருக்கணும்னா இவர் தேவை என்கிறார் அவர். 'அண்ணன் இல்லாமல் கட்சியே இல்லீங்க.. எங்களுக்குப் பொறுப்பு கொடுத்தது 'ஸ்டாலின் ஸார்'தான் என்றாலும் அண்ணன் தாங்க எங்களுக்கு எல்லாம்' என்கிறார் மதுரை மாவட்ட இளைஞரணி செயலாளரான எம்.எல்.ராஜ்.

மதுரை மாவட்ட கூட்டுறவு வங்கியின் தலைவர் ஏ.ஆர். சந்திரன் அழகிரிக்கு மிகவும் வேண்டியவர். கட்சிக்காரர்களுக்கு அழகிரி உதவியுள்ளதை பட்டியல் போடுகிறார். சமீபகாலமாக அரசில் அண்ணன் சொல்லியும் சில காரியங்கள் நடக்கவில்லை. அதனால் அவரே சில நண்பர்களிடம் நிதியுதவி பெற்று அழகிரி டிரஸ்ட் என்று வைத்திருக்கிறார். அதிலிருந்து இப்போது ஏழைகளின் கல்விப் பணிக்கு உதவி செய்கிறார். ஸ்டாலின்தான் வாரிசு என்று பேராசிரியர் பேசியது பற்றி அண்ணனுக்கு வருத்தம் ஏதும் இல்லை. அப்படியிருந்தும்

> "என்ன! அதிசயமா வீட்டுப் பாடம் எழுதிட்டு வந்திருக்கே?"
>
> "நேத்து எங்க வீட்ல டீ.வி. ரிப்பேர் சார்..."
>
> - மலர் சூர்யா

ஸ்டாலினுக்காகத் தான் நான் பாடுபடுகிறேன் என்று கூட அவர் சொல்லியிருக்கிறார். அவருக்குத் தீவிர அரசியலில் ஆர்வம் கிடையாது. ஆனால் பழைய கட்சித் தோழர்கள் சிரமப்பட்டால் எப்படியும் உதவி செய்வார் என்கிறார் ஏ.ஆர்.சந்திரன். அழகிரி அதிகார மையமான காரணத்தால் மதுரையில் கட்டப் பஞ்சாயத்து, வட்டித் தகராறு ஆகியவைகள் குறைந்து வந்தனவாம்.

முப்பெரும் விழாவுக்கு மதுரை மாநகரம், மதுரை வடக்கு, தெற்கு ஆகிய மாவட்டச் செயலாளர்கள் செல்லவில்லை. இப்போது கட்சித் தலைமை அவர்களுக்கு Show cause நோட்டீஸ் விட்டிருக்கிறது. மத்திய வங்கி வளாகத்தில், நாங்கள் பத்திரிகைக்காரர்கள் என்று தெரிந்ததும் விடு, விடுவென்று சென்று காரில் ஏறிப் பறந்தார், வடக்கு மாவட்ட செயலாளரான மூர்த்தி. ஆனால் மாநகர செயலாளரான வேலுசாமி நம்மிடம் "ஸ்டிரிக்டா பார்த்தா இந்த விவகாரம் பற்றி நான் பேசக் கூடாதுங்க. ஆனால் அழகிரி எங்களுக்கெல்லாம் ஒரு உந்து சக்தியாக இருந்தார். தேர்தல் காலங்களில் அவர் காட்டும் உற்சாகம்தான் எங்களைச் சோர்வில்லாமல் வழி நடத்தும்" என்கிறார்.

மூத்த பிரமுகரான காவிரி மணியம் இந்தப் பிரச்னை குறித்து கலைஞரிடம் நீண்ட நேரம் பேசியிருக்கிறார். "விரைவில் சுமுக முடிவு ஏற்படும்" என்று நம்மிடம் சொன்னார் காவிரி மணியம்.

இப்போது மதுரையிலுள்ள கட்சிக்காரர்களின் கவலையெல்லாம் அழகிரி விவகாரத்தில் எப்படி நடந்து கொள்வது என்பது பற்றித்தான். கட்சித் தலைமை அறிவுரைப்படி அழகிரியோடு தொடர்பு வைத்துக் கொள்ளாமல் இருந்தால், நாளை தலைமைக்கும் அவருக்கும் சமாதானம் ஏற்பட்டவுடன் நமது நிலைமை தனித்துப் போய்விடுமே என்று கவலை அவர்களுக்கு. அப்பா-மகன் உறவு எப்படியும் சுமுகமாகிவிடும் என்று தீவிரமாக நம்புகிறார்கள் அவர்கள். இதன் காரணமாக, தலைமை உத்தரவை கண்டு கொள்ளாமல் தொடர்ந்து அழகிரியோடு தொடர்பு கொண்டு வருகிறார்கள். ஆனால் நாம் மதுரையில் சந்தித்த கழகத் தொண்டர்கள், பிரமுகர்கள் எல்லோரும் நம்மிடம் அடிக்கோடிட்டுச் சொன்ன ஒரு கருத்து எந்தச் சூழ்நிலை வந்தாலும் நாங்கள் தொடர்ந்து கலைஞரின் உடன் பிறப்புகளாக, உதயசூரியனுக்கு வாக்கு போடுபவர்களாகத் தான் இருப்போம் என்பதுதான்.

காவிரி மணியத்துக்கு ராஜ்ய சபை ஸீட் கொடுக்கப்படாதபோது அழகிரியின் ஆதரவாளர்கள் கட்சிப் பொறுப்புகளை ராஜினாமா செய்தார்கள். "இது அதிகாரத்தைப் பெறும் போராட்டம்தான். கடந்த காலத்தில் பலமுறை இதுபோல நடந்திருக்கிறது. ஒவ்வொரு முறையும் சில சலுகைகள் கொடுக்கப்பட்டும், எடுக்கப்பட்டும் இருக்கின்றன. கட்சியையும் ஆட்சியையும் பொறுத்தமட்டில் தென்பகுதி அதிகார மையம் தன்னிடம்தான் இருக்க வேண்டும் என்பது அழகிரியின் பிடிவாதம். அழகிரியின் சேவை கட்சிக்குத் தேவை என்பதையும் கட்சி தலைமை உணர்ந்திருக்கிறது. சுத்தமாக ஒதுங்கிவிட்டால் அதிகார மையம் கைநழுவி போய்விடும் என்பதும் அழகிரிக்கு நன்றாகத் தெரியும். எனவே விரைவில் சமாதானக் கொடி ஏற்றப்படும்" என்கிறார் சென்னையிலுள்ள மூத்த பிரமுகர் ஒருவர். அதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இரு தரப்புக்கும் வேண்டியவர்கள் பேச்சு வார்த்தையில் இறங்கியிருக்கிறார்கள். அழகிரியின் மகன் துரை என்கிற தயாநிதியின் பிறந்த நாளை சமீபத்தில் ஓட்டலில் விமரிசையாகக் கொண்டாடினார் அழகிரி. அன்று கோபாலபுரத்திலிருந்து பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தொலைபேசியில் பேரனுக்குச் சொன்ன மூத்தோர்கள் அப்படியே அழகிரியிடம் கொஞ்ச நாட்கள் அமைதி காக்கவும். நீரடித்து நீர் விலகாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். என்னை மதுரைக்கு அனுப்பிவிட்டு சுத்தமாக மறந்து விட்டீர்கள் என்று அவர்களிடம் குறைபட்டுக் கொண்டாராம் அழகிரி.

இந்த விவகாரத்தில் கலைஞரை மிகவும் கோபத்துக்குள்ளாக்கியது கட்சிக்காரர்களால் பேருந்துகள் எரிக்கப்பட்டதுதான். அழகிரியைச் சுற்றியுள்ள சிலர் தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ள அழகிரிக்குக் கொம்பு சீவுகிறார்களோ என்றும் அவர் சந்தேகப்படுகிறார். இதன் காரணமாக அழகிரிக்கு வேண்டிய அரசு அதிகாரிகள் இடம் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போதைய நிலையில் அடங்கிப் போவதுதான் புத்திசாலித்தனம் என்று அழகிரிக்கும் ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

- ப்ரியன்

படங்கள் : ராஜன்



● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? ஜெயலலிதாவைக் காணும்போது அவரிடம் பெரியாரையே வீரமணி காண்கிறாராமே! அவ்விதமே மூப்பனாருக்கு ஜெயலலிதா காமராஜராகவே காட்சி தருகிறாராமே?

! வீரமணிக்குப் பெரியாராகவும் மூப்பனாருக்குக் காமராஜாகவும் தெரியும் ஜெயலலிதா, மக்களுக்கு எப்படித் தென்படுகிறார் என்பதல்லவா முக்கியம்!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? தராசால் மறக்க முடியாதது எது?

! பத்திரிகையாளர் ரகமியின் தேசபக்தி. அண்மையில் 'பாரதி' திரைப்படம் பார்த்தவாறே அவர் காலமாகி விட்டார் என்று அறிந்த போது அதிர்ச்சியும் வேதனையும் ஏற்பட்டது. ரகமியிடம் இருந்த சுதந்தரப் போராட்டம் தொடர்பான அரிய புகைப்படங்களும் செய்திகளும் ஓர் அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படக்கூடியவை.

● ஆர். தங்கராஜ், திருப்பூர். *

? உடல், உள்ளம் இரண்டையும் கலங்கடிக்கச் செய்யும் பயங்கரக் கதைகள் படித்து உறக்கம் வராமல் இருந்ததுண்டா?

! கதையே படிக்க வேண்டாம். இந்தியன் ஏர்லைன்ஸ் விமானப் பயணம் என்று நினைத்துக் கொண்டாலே போதும். உடல், உள்ளம் எல்லாம் நடுங்கும்.

● பி.எம். வள்ளி, மதுரை – 16.

? நடிகர் ராஜ்குமார் கொட்டகஜனூர் வருவது பற்றி கர்நாடக அரசு முன்கூட்டியே தமிழக அரசுக்குத் தகவல் தெரிவிக்கவில்லை என தமிழக அரசு சுப்ரீம் கோர்டில் கர்நாடக அரசு மீது குற்றம்சாட்டியுள்ளதே?

! குற்றஞ்சாட்டவில்லை. தன்னிலை விளக்கம் அளித்தது. மத்திய அரசு, இரு மாநில அரசுகளின் கோரிக்கைக்கு ஆதரவாக உச்சநீதிமன்றத்துக்கு affidavit அளித்திருப்பது ஆறுதல்.

● வைகை வளவன், மதுரை – 17.

? தந்தை பெரியாரின் அரசியல் வாரிசு தி.மு.க. மட்டுமே என்று அடித்துச் சொல்கிறாரே கருணாநிதி!

! நிஜமான கம்யூனிஸ்ட் கட்சி தி.மு.க. தான் என்றும் சொல்கிறார். ஆன்மீகத்தின் எதிரி அல்ல என்கிறார். சிறு பான்மையினரின் நண்பர் என்கிறார். தி.மு.க.வின் தனித் தன்மை என்பதே எல்லோரையும் அணைத்துப் போக முயற்சி செய்வதுதான் போலும்... தேர்தல் வருகிறதே!

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை – 84.

? மறைந்த தலைவர்கள் யாருக்கும் இனிமேல் அரசு செலவில் சமாதி எழுப்பப்பட மாட்டாது என்று மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜக்மோகன் கூறியிருக்கிறாரே...

! சட்டமா கொண்டு வந்துவிட்டார்...? அவர் சொல்வதைச் சொல்லிக் கொண்டிருப்பார்; நடப்பது நடந்து கொண்டு தானிருக்கும். உங்க கொள்ளுப் பேரன் "கடற்கரையா, அப்

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஆர். கோபாலன்,
ஃபிளாட் III-C-B
'வக்ரதுண்டா'
லகம்பாலா, மிராமர்
பானாஜி, கோவா - 403 001.

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஆர். தங்கராஜ்,
8, பி.கே.ஆர். லே-அவுட்,
இரண்டாவது வீதி,
பெரிச்சிபாளையம்,
திருப்பூர் - 641 608.

படின்னா?" என்று கேட்டால் வியப்பதற்கில்லை.

● ஆர். கோபாலன், கோவா - 1. ❑

? உலக அழகிகளாகத் தேர்வு பெறுபவர்கள் தங்கள் 'மாடல்' அன்னை தெரஸா என்றும் மீண்டும் பிறந்தால் அவராகவே பிறக்க விரும்புவதாகவும் வாய்கிழியப் பேசிவிட்டு, அனைத்தையும் நடைமுறையில் மறந்து விட்டு, ஹீரோக்களுடன் மரங்களைச் சுற்றி டூயட் பாடி வருகின்றனரே.. விஸ்வ சுந்தரிகளின் இலட்சியங்கள் விசித்திரமாக இல்லையா?

! அழகிப் போட்டியில் ஜெயிப்பதற்காகவும், ஜெயித்த பின்னர் உற்சாகத்திலும் சொல்லும் பதில்களை யாரும் சீரியஸாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். மாடலிங், சினிமா என்று அவர்கள் கவனம் திசை திரும்பும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே. அதைத் தொடர்ந்து கறுப்புப் பணம், ரெய்டு என்று எல்லாமும் தொடர்வதில் வியப்பென்ன...?

● சுஜாப்ரியன், வந்தவாசி.

? நான் செய்த பாவங்களைப் போக்கவே அ.தி.மு.க.வில் சேர்ந்தேன் என்கிறாரே எஸ். எஸ். சந்திரன்?

! ஹைய்யோ, பாவம்!

● கே.வி. ராமன், சென்னை - 73.

? தமிழ்த் தியாகையாவுக்கு நூற்றிப் பத்தாவது பிறந்த தினத்தையொட்டி விழாவாமே...?

! நான்கு நாள் கோலாகலத் திருவிழாவாகவே நடந்தது. நிறைவு நாளன்று இல. கணேசன் பிரமாதமாகப் பேசியதோடு பாபநாசம் சிவனின் சினிமா பாடல்களைப் பாடிவேறு காண்பித்தார். 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து சுப்ரமண்ய சுவாமி உனை மறந்தேன்' பாடி 1998 அரசியல், டெல்லி டீ பார்ட்டி முதலான நிகழ்வுகளை அவர் நினைவூட்ட... ரசிகர்களின் கைதட்டல் பாபநாசம் சிவனுக்கே கூட கேட்டிருக்கும்!

விசித்திர லட்சியங்கள் பற்றி..?



• மக்கள் பார்வையில்...



• 'சமரச சன்மார்க்கம்'!



• மறக்க முடியாதவர்...



• பாபம் போக்க...!



• சொர்க்கத்தில் கேட்ட....



• ...'சொப்பன வாழ்வு'!

● நகை. தி. மகாராஜன், கடமலைக்குண்டு.

? பெட்ரோலை மிச்சப்படுத்த தாய்லாந்து பிரதமர் சைக்கிளில் அலுவலகம் சென்றாராமே?

! ரொம்பத்தான் ஆசைப்படாதீங்க. நம்ம ஊர்ல இதெல்லாம் நடக்காது.

● க. நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? சீனாவைப் போல் வீட்டுக்கு ஒரு குழந்தை திட்டத்தை நமது நாட்டிலும் அமுல்படுத்தினால் என்ன...?

! சர்வாதிகாரத்தையும் சேர்த்து அமுல்படுத்த வேண்டிவரும்... ஓகேவா?

● பி. ஜெயப்பிரகாஷ், பொள்ளாச்சி.

? 'திராவிடர் கழகம் ஓர் அரசியல் கட்சி அல்ல... ஆனால் பெரிய அரசியல் கட்சிகளையே வேலை வாங்கும் கட்சி' என்கிறாரே வீரமணி?

! பெருங்காயத்தைப் பிற கட்சிகள் எடுத்துச் சென்று பயன்படுத்த, டப்பா வாசனையோடு திருப்தி அடைந்து வருகிறார் வீரமணி.

அமிதாப் ஒரு கோடி! மாதுரி பத்து கோடி?





கோடீஸ்வரக் கனவுகள் மக்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, டி.வி. சானல்களுக்கு எக்கச்சக்கமாக இருக்கிறது. ஸ்டார் ப்ளஸில் குரோர்பதியைக் கண்டு, 'ஜீ'க்கும் 'ஸோனி'க்கும் வயிற்றில் ஆஸிட் கொதித்துக் கொண்டிருந்தது. 'கோலா வார்ஸ்'ஐத் தூக்கிச் சாப்பிடுமளவுக்கு 'சானல் வார்ஸ்' துவங்கி விட்டது.

'ஜீ'க்காரர்கள், 'ஜீ மாலாமால் உத்சவ்' கொண்டாடி, தினமும் சிலரை லட்சாதிபதியாக்கப் பார்த்தார்கள். நிகழ்ச்சிக்கு முன்பாகவே கேள்வி கேட்டு, அதன்பின் நிகழ்ச்சியை ஒளிபரப்பி, கேள்விக்கு விடை சொல்லச் சொல்லி... ஹூம்! எல்.கே.ஜி. குழந்தைக்கு 'ஸ்பூன் ஃபீடிங்' பண்ணுவது போல் நைச்சியம் செய்தும்... ப்ச்... குரோர்பதிக்கு முன் இந்த ஜாக்பாட்டெல்லாம் பிச்சைக்காரத்தனமாய்ப் பல்லிளித்தது.

'ஸோனி'க்காரர்கள் அமிதாப்பச்சன் ஃபிலிம் ஃபெஸ்டிவல் கொண்டாடி, அவர் படங்களை எல்லாம் அதே நேரத்தில் திரையிட்டுப் பார்த்தார்கள். ஊஹூம்... பார்வையாளர்களை 9லிருந்து 10 மணி வரை இந்தப் பக்கம் ஈர்க்கவே முடியவில்லை!

அதுவும், பாகிஸ்தானிலிருந்து வந்த செய்தி வேறு இவர்களை கதிகலக்கியது!

திடீரென்று பாகிஸ்தானிலிருந்து ரூபர்ட்மர்டாக்குக்குக் கோணி கோணியாகக் கடிதங்கள் வர ஆரம்பித்தனவாம். "கோன் பனேகா குரோர்பதி" ஷோவை எங்கள் ஊருக்குக் கொண்டு வாருங்கள்; இங்கே அதற்கு எக்கச்சக்க ஆதரவு உள்ளது; இந்திய எல்லைகளுக்குள் அதனை முடக்காமல் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கெல்லாம் அதை அறிமுகப்படுத்துங்கள்" என்று கெஞ்சிக்கூத்தாடினார்களாம். (ரூபர்ட் மர்டாக் ஸ்டார் டி.வி உரிமையாளர்.)

இந்திய-பாக. ஒற்றுமைக்கு இப்படி ஒரு பாலம் அமைப்போம் என்று அமிதாப் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்தான்.

இந் நிலையில்தான் அமிதாப், ஸ்டார் ப்ளஸுடனான கே.பி.ஸி. ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவில்லை என்ற செய்தி வெளியில் பரவியது. 130 எபிசோடுகளுக்கான காண்ட்ராக்ட் ஜனவரி 2001வுடன் முடிவடைவதாகவும், அதற்கான ஷூட்டிங் டிசம்பருடன் முடிந்து விடுமென்றும், தன்னை அத்துடன் விட்டு விடும்படி பச்சன் கேட்டுக் கொண்டதாகவும், நம்பத்தகுந்த வட்டாரங்கள் கசமுசத்தன. 'ஜீ' டி.வி. அதிபர் சுபாஷ் சந்திராவை அமிதாப் சந்தித்து, நெடுநேரம் 'டிஸ்கஷன்' செய்தது வேறு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது. அமிதாப் 'ஜீ' டி.வியில் இதுபோன்ற 'க்விஸ் ஷோ'வை ஏற்று நடத்தப் போகிறார் என்ற வதந்தி வலுத்தது.

நாளாக ஆக, ஜீ டி.வி. குரோர்பதி ஷோவைப் போல் பத்து மடங்கு பரிசு வைத்து சவால் விடப் போவதாகச் செய்திகள் வலுத்தன. இதை நடத்தப் போவது யார் என்பதில் பலத்த சந்தேகம். பல இழுபறிகளுக்குப் பின், கடைசியாக அந்த ரகசியம் அம்பலமாகியிருக்கிறது. சவாலைச் சமாளிக்கப் போகிறவர்... வேறு யாருமில்லை.. திருமதி நேனேதான்... அதாவது பழைய மாதுரி தீக்ஷித்!

அவரது காரியதரிசி சக்கு, இந்த விஷயத்தில் இன்னும் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருப்பதாகக் கூறி வந்தாலும், மாதுரிதான் 'ஷோ ஹோஸ்டஸ்' என்ற செய்தியை தினசரிகள் வெளியிட ஆரம்பித்து விட்டன.

ஆக, மாதுரிக்கு சவாலாக அமிதாப் கே.பி.ஸி. ஷோவை நடத்துவாரா, (அமிதாப் எங்கள் நண்பர் என்கிறார்களே ஸ்டார் டி.வி.காரர்கள்?) அல்லது, பத்து கோடிக்கு முன் இந்த ஒரு கோடி எந்த மூலை என்று ஒதுங்கி விடுவாரா... பதிலை சின்னத் திரையில் காண்க!


— ஜெயஸ்ரீ ராஜ்


இணையத் தூண்டும் இணையிலா பரிசுகள்!

நவராத்திரி நலன்களை அள்ளித் தரும் வசந்த விழா. வாழ்வில் பல படிகள் உயர்ந்து வளம் பெற, படிப்படியாய் கொலுவைத்து பராசக்தியை வணங்கும் விழா. இந்த நவராத்திரியில் ஈடு இணையற்ற தாய்மை உணர்வை ஸ்ரீராம் சிட்ஸ்- உடன் இணைந்து கொண்டாடுவோம். நம் இல்லம் உயர சீட்டுத் திட்டங்கள், உள்ளம் மகிழ பரிசுப் பொருட்கள் என இரட்டை சந்தோஷத்தை வழங்குகிறது ஸ்ரீராம் சிட்ஸ்.


ஸ்ரீராம் சிட்ஸ் மூலம் இதுவரை பரிசுப் பணமாக விநியோகிக்கப்பட்ட ரூ.7,000/- கோடியை, 30 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பகிர்ந்து கொண்டுள்ளன. 15 லட்சத்திற்கும் மேலானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். நாமும், நம் குடும்பமும் மேன்மை பெற மேன் மேலும் பொலிவு கொண்ட ஸ்ரீராம் சீட்டுத் திட்டங்களில் இன்றே இணைவோம்.



காப்பர் பாட்டம் சில்வர் பேன்



எஸ். எஸ். டிபன் பாக்ஸ்



ஸ்வாகத் 1000மி.லி. கேஸரோல்



எஸ். எஸ். ஜப்பான் டிஷ் மூடியுடன்


ஃபினிக்ஸ் சாஸ் பேன் செட்


3-இன்-ஒன் சி.பி. செட்


ஸ்ரீராம் ஸ்வாகத் ஃபேமிலி பேக்


காளி1லிட்டர் பஃப் கேஸரோல்


ஸ்வாகத் 4 செட் கேஸரோல்


டிராவல் சூட்கேஸ்

திட்டம்		சீட்டு மதிப்பு	சந்தாதாரர் பரிசு
ரூ. 250	X 40 மாதம்	ரூ.10,000	காப்பர் பாட்டம் சில்வர் பேன்
ரூ. 500	X 30 மாதம்	ரூ.15,000	எஸ். எஸ். டிபன் பாக்ஸ்
ரூ. 625	X 40 மாதம்	ரூ.25,000	ஸ்வாகத் 1000மி.லி. கேஸரோல்
ரூ. 500	X 60 மாதம்	ரூ.30,000	எஸ். எஸ். ஜப்பான் டிஷ் மூடியுடன்
ரூ. 1,000	X 50 மாதம்	ரூ.50,000	ஃபினிக்ஸ் சாஸ் பேன் செட்
ரூ. 2,500	X 30 மாதம்	ரூ.75,000	3-இன்-ஒன் சி.பி. செட்
ரூ. 2,500	X 40 மாதம்	ரூ.1,00,000	ஸ்ரீராம் ஸ்வாகத் ஃபேமிலி பேக்
ரூ. 5,000	X 30 மாதம்	ரூ.1,50,000	காளி1லிட்டர் பஃப் கேஸரோல்
ரூ. 5,000	X 40 மாதம்	ரூ.2,00,000	ஸ்வாகத் 4 செட் கேஸரோல்
ரூ. 10,000	X 30 மாதம்	ரூ.3,00,000	டிராவல் சூட்கேஸ்
ரூ. 12,500	X 40 மாதம்	ரூ.5,00,000	சேலம் ஸ்டீல் டின்னர் செட்

• நுழைவுக் கட்டணம் தனி. • முன் அனுமதி பெறப்பட்டது. நேரடியாக சீட்டில் சேருவோருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு.


30 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பயனடைந்த மகத்தான மக்கள் இயக்கத்தில் உடனடியாக நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ்

நவராத்திரி *2000*


செப்டம்பர் 27 - அக்டோபர் 7

அறிமுகப்படுத்துவோர் அனைவருக்கும் பிளாஸ்டிக் கண்டெய்னர் முதல் வெள்ளி குங்குமச்சிமிழ் வரையிலான அழகிய பரிசுகள் காத்திருக்கின்றன.



ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்
சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8461833 - 40. **www.shriramchits.com**

WORDCRAFTS





2000 அக்டோபர் 8
விக்ரம புரட்டாசி 22
மலர் : 59
இதழ் : 10

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




சிறை நிரப்பாத போராட்டம்!

சிறை நிரப்பும் போராட்டம் நடத்துகிற அளவுக்குத் தமிழ்நாட்டில் என்ன நடந்து விட்டது...?

த.மா.கா. இப் போராட்டத்தில் முன்வைத்துள்ள பதினைந்து அம்ச கோரிக்கைகளைப் பரிசீலித்துப் பார்த்தால், அவற்றுள் பெரும்பாலானவை வலுவற்றவையாகவே இருக்கின்றன. விவசாயிகள், தேயிலைப் பயிரிடுவோர், நெசவாளர்கள், கூலித் தொழிலாளர்கள், சராசரி தமிழ் மக்கள், அடித்தட்டு வர்க்கத்தினர், மீனவர்கள் என்று அனைவரது பிரச்னைகளையும் அரசு தனதாக்கிக் கொண்டு அனைவருக்கும் பிரச்னைகளற்ற வாழ்க்கையை உறுதிசெய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறது தமிழ் மாநில காங்கிரஸ்! இவர்களுடைய பிரச்னைகளில் ஆளும் கட்சிக்கோ ஆட்சிக்கோ அக்கறை இல்லாமல் போகவில்லை. அனுதாபத்துடன் அணுகி இயன்ற அளவு உதவி செய்துதான் வருகிறது. ஆனால், ஆட்சியில் இருப்போருக்குச் சில எல்லைகள் உண்டு. அது பொருளாதார ரீதியிலும் சட்ட - திட்ட அடிப்படையிலும் அமையும். அந்த எல்லைகளை மீறிச் செயல்பட்டால், பொதுநலனுக்குக் குந்தகமாகவே முடியும்.

எந்த அரசுமே, தொழில் வர்த்தகத்தைச் சுலபமாக்கும் சூழலை உருவாக்குவதில்




தான் தனது கவனத்தைச் செலுத்த வேண்டுமே தவிர, அனைத்துத் தரப்பினரின் நஷ்டங்களையும் தன் தலையில் எடுத்துப் போட்டுக் கொண்டு அவதியுறுவதில் அர்த்தம் இல்லை. அவ்வாறு இழுத்துப் போட்டுக் கொண்டால், கடன் ரத்துகளும் மானியங்களும் ஏற்படுத்தும் செலவு, நேர்முக, மறைமுக வரிகளாக மீண்டும் மக்கள் தலையில்தான் வடியும்.

இந்தப் பொருளாதார உண்மை த.மா.கா. தலைவர் மூப்பனாருக்குத் தெரியாது என்பது இல்லை; நிதியமைச்சராகவும் வர்த்தகத் துறை அமைச்சராகவும் இருந்த ப.சிதம்பரத்துக்குப் புரியாது என்பதும் இல்லை.

எனினும் த.மா.கா. சிறை நிரப்பும் போராட்டம் நடத்த முடிவெடுத்தது எனில், தி.மு.க.வை எதிர்ப்பது, அதன் மூலம் கவனத்தைக் கவர்ந்து பிராபல்யம் தேடுவது என்ற ஒற்றை நோக்கம்தான் அதற்குக் காரணம்.

இந்த எதிர்ப்பு முயற்சியை காங்கிரஸும் தி.க.வும் எட்டிப் பார்த்து ஆதரித்தன. அ.தி.மு.கவோ எட்டிக்கூட பார்க்கவில்லை. அக்கட்சியின் தலைவி ஜெயலலிதாவிட மிருந்து ஆதரவு கடிதம் வந்ததோடு சரி.

ஆனால் போராட்டம் மாபெரும் வெற்றி என்று அறிவித்துள்ளார் மூப்பனார். அதே சமயம், சிறைகளை நிரப்பும் ஆசையில் மண்ணைப் போடுவது போல, தொண்டர்களைக் கைது செய்யாமல், காவல் துறையினர் ஒருசில தலைவர்களை மட்டும் கைது செய் துள்ளனரே என்று கண்டனமும் தெரிவித்திருக்கிறார். போராட்டத்தில் பங்கேற்கவே செய்யாத தம்மை போலீஸ் கைது செய்யட்டும் என்று சவால் விட்டிருக்கிறார்!



இந்த முரண்பாடான பேச்சு ஒரு பக்கம் இருக்க, மக்களிடையே இந்தப் போராட்டம் ஏதேனும் சலசலப்பை ஏற்படுத்தியதா என்றால், அதுவும் இல்லை!

த.மா.காவின் சிறை நிரப்பும் போராட்டத்தினால் விளைந்த நன்மை ஒன்று உண்டு எனில், ப. சிதம்பரம் 'பி.ஜே.பிக்குச் செல்கிறார்' என்ற பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருப்பதுதான். பா.ஜ.கவின் துரதிர்ஷ்டம் தா.ம.கவின் அதிர்ஷ்டமாகியிருக்கிறது!

எதிர்க்கட்சியாக மாறி த.மா.கா. நடத்திய போராட்டம், தேர்தல் கண்கொண்டு திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால், ஆளுங்கட்சி கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய சில முக்கியமான கோரிக்கைகளும் வெளிப்பட்டன. அவற்றுள் ஒன்று - சிமெண்ட் விலை உயர்வு குறித்த குற்றச்சாட்டு, மற்றது கொப்பரை கொள்முதல் ஊழல் குற்றச்சாட்டு. பொதுப் பணித்துறை முதலானவற்றில் டெண்டர் முறைகேடுகளும் சுட்டிக்காட்டப்பட்டு, ஒப்பந்தங்கள் வெளிப்படையாக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லையெனில் அவற்றை வன்மையாக மறுப்பதுடன், நடுநிலையாளர் ஒருவரை நியமித்து, துரிதமாக விசாரித்துத் தீர்ப்பு வழங்குமாறு தி.மு.க. அரசு கோரலாம். மாறாக, உண்மை இருக்குமெனில் நிலைமையைத் திருத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கலாம். இரண்டுமின்றி அரசியல் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருப்பது, தேர்தல் நெருங்கும் கட்டத்தில் ஆபத்தானது. ●

நெல், கரும்பு வயல்களுக்கு நடுவே இப்படியொரு ஊரா என்று விழி விரிய வைக்கிற நாற்பத்திரண்டு வீதிகள். பழமைக்கும் புதுமைக்கும் பாலம் போடும் கட்டடக் கலையோடு, ஒவ்வொரு வீதியிலும் அணி வகுத்திருக்கும் பங்களாக்கள். 'அன்னியச் செலாவணி சேவைக் கிளை' என்ற விளம்பரப் பலகையோடு வங்கிகள். ஆட்டோ, கார், கூண்டு வண்டிகள் என வாகனங்களும்கூட பர்தா அணிந்திருக்கும் பாரம்பரியம். நீளும் பட்டியலைக் கொஞ்சம் நிறுத்தி இது எந்த ஊர் என்று கேட்பவர்களுக்கு 'சின்ன சிங்கப்பூர்' என்று சொன்னால் சட்டென விளங்கும்... சந்தேகமே வேண்டாம் கீழத் தஞ்சையில் கனவு பூமி போல் காட்சி தரும் அந்த ஊர், கூத்தாநல்லூர்.

ஊரில் உள்ள அத்தனை ஆண்களும், வாழ்நாளில் ஒருமுறையேனும் வெளிநாடு சென்று பொருளீட்டி வந்த பெருமைக்குரிய ஊர். ஒரு கிராமமாய் இருந்து இன்று நகராட்சியாய் வளர்ந்து, நாளை மாநகராட்சியாய் மலரத் தகுதி படைத்த இந்த ஊரில் உலா வந்தோம்.

'ஊரப் பத்தின விவரம் தெரிஞ்சுக்க 'பத்ரு சபைக்கு'த்தான் போகணும்' என்று ஆட்டோ ஓட்டுனர் சொல்ல, அடுத்த ஐந்தாவது நிமிடம், பல வீதிகளைக் கடந்து பத்ரு சபைக்கு வந்தோம். இளைஞர்கள், முதியவர்கள் என்று ஒரு இருபது பேர், மகிழ்ச்சியாய் எதையோ விவாதித்துக் கொண்டிருக்க இடையில் நாம் ஆஜர். அறிமுகம் முடிந்து அமான்கான் பேசத் தொடங்கினார்.



• பள்ளிவாசல்

''இருபத்து இரண்டாயிரம் இஸ்லாமிய மக்கள் வாழும் இந்த ஊர், திரை கடலோடி திரவியம் தேடிய ஊர். எங்களது முன்னோர்கள், தொடக்கத்தில் ரங்கூன் சென்று, அங்கு மளிகை வியாபாரமும் இரும்பு வியாபாரமும் செய்தவர்கள். பர்மாவில் பிரச்னை வந்த பிறகு, தமிழ்நாடு திரும்பி அவர்கள், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். அதற்கு அடுத்த தலைமுறையினர், அரபுநாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்லத் தொடங்கினர். ஆனால் நடப்புத் தலைமுறையில் வெறும் பத்து சதவீதம் பேர்தான், வெளிநாடு போகிறார்கள். காரணம் ஒரு காலத்தில் உடலுழைப்பை நம்பி வேலைக்குச் சென்றவர்கள் இப்போது இல்லை.



• மாளிகை வீடுகள்

சின்ன சிங்கப்பூர்!

இப்போது ஆங்கில மருத்துவர், அரபு பேராசிரியர், பொறியாளர், மென்பொருள் பொறியாளர் என்று மாறி விட்டது. முப்பது முதல் நாற்பது சதவீதம் பெற்றோர் வெளிநாடு சென்று திரட்டிய செல்வம் காரணமாகவும், நிறைய பேர் வெளிநாடு செல்ல விரும்புவதில்லை" என்ற அமான்கான், ஹேராம் படத்தைத் தணிக்கை செய்த மத்திய தணிக்கை குழுவில் முக்கிய உறுப்பினர். அகில இந்திய முஸ்லீம் – ஷரியத் வாரியத்தின் தலைவாராகவும் பொறுப்பு வகித்து வரும் இவர், பாரதிய ஜனதா கட்சியின் தீவிர ஆதரவாளர். "கார்கில் யுத்தம் நடந்தபோது மரணமடைந்த பாகிஸ்தான் வீரர்களின் உடல்களை ஏற்க பாகிஸ்தான் அரசே மறுத்து விட்டது. ஆனால் பிஜேபி அரசு, அந்த உடல்களை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல. இஸ்லாமிய முறைப்படி அடக்கமும் செய்து, அச்சடலங்கள் மீது பாகிஸ்தான் கொடியையும் போர்த்தியது. இந்த ஆண்டு ஒரு லட்சத்து இருபதாயிரம் முஸ்லீம்களை ஹஜ்யாத்திரைக்கு அனுப்பியது. எந்த ஆட்சியிலும் இத்தனை பேர் ஹஜ் சென்றதில்லை. ஹஜ் சென்றவர்களுக்குத் தலா 19 ஆயிரம் ரூபாய் மானியத் தொகையும் வழங்கியது" என்று அடுக்கிய அமான்கான், பத்ரு சபைப் பற்றி கூறினார்: "இங்கு கூடியிருக்கும் எல்லோரும் பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆனாலும் அரசியல் வேறுபாட்டை மறந்து எல்லோரும் இங்கே கூடி நற்பணி செய்கிறோம். அதற்காகத் திட்டமிடுகிறோம். பத்ரு என்றால் பௌர்ணமி என்று அர்த்தம்" என்றார்.



• ரெஹானா பேகம்



• குருஹாஜி

கூத்தாநல்லூரின் அரசியல்நிலவரம் குறித்து நம்மோடு பேசியவர், பத்ரு சபையில் கூடியிருந்த தி.மு.க முன்னாள் நகரச் செயலாளர் ஜக்காரியா. "ஜாதி கட்சிகளைத் தவிர இங்கே எல்லா கட்சிகளும் உண்டு. மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கூத்தாநல்லூர் வாக்காளர்கள், தொடர்ந்து தி.மு.க கூட்டணிக்குத்தான் வோட்டுப் போட்டு வந்திருக்கிறார்கள். மன்னார்குடித் தொகுதியில் எந்தக் கட்சிக் கூட்டணி ஜெயிக்கிறதோ அந்தக் கட்சிதான் ஆட்சி அமைக்கும். ஐம்பது வருஷமாக அதுதான் நடந்திருக்கிறது. வோட்டுப் போடுவதற்காகவே, வெளி நாட்டிலிருந்து, பயணம் போன எல்லோரும் வந்து போவார்கள்" என்கிறார்.

"கூத்தாநல்லூர் நகரசபைத் தலைவராக ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயச் சகோதரனைத்தான் நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம். இங்கே அரசியல் காழ்ப்புணர்ச்சி கிடையாது" என்றவர் அதிமுக சட்டமன்றக் குழு உறுப்பினரான ஹாஜிமுகமது அஸ்ரம்.

கவின்மிகு கட்டடக் கலையோடு பதினான்குப் பள்ளிவாசல்கள் உள்ள இந்த



யிருக்கிறார்கள். வெளிநாட்டிற்குப் பொருளீட்டச் செல்லும், கணவனைப் பிரிந்து சில காலம் வாழ்வதைப் பொறுமையாக சகித்துக் கொள்ளும் மனோபாவத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அது போன்ற நேரத்தில் வீட்டிற்குள்ளேயே முடங்கி விடாமல், கல்வித் தகுதியைக் கொண்டு, பிடித்த வேலையைத் தேடிக் கொள்ளவும் எங்களை அனுமதித்திருக்கிறார்கள்'' என்ற ரெஹானா பேகம், ஒரு முதுகலை பட்டதாரி. இதைக் கருத்தில் கொண்டு சர்ச்சைக்குரிய ஒரு விஷயத்தை அவரிடம் கேள்வியாக வைத்தோம். இந்திய குடிமக்கள் என்ற முறையில், நாட்டின் மக்கள் தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை உயர்த்தவும் இஸ்லாமிய பெருமக்களுக்குப் பெரிய பங்கு இருக்கிறது. எனவே பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் பட்சத்தில், அதை ஏற்று நடக்கும் தார்மீகப் பொறுப்பு இஸ்லாமிய சமுதாயத்திற்கும் இருப்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா? என்றோம்.

''நடைமுறையில் பொது சிவில் சட்டம் சாத்தியமில்லை. அதை அமலாக்குவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்று: இந்துக்கள் இறந்தால் உடலை எரிப்பார்கள். நாங்களோ நல்லடக்கம் செய்வோம். ஆனால் பொது சிவில் சட்டம் வந்தால் எங்கள் பிணத்தை எரிக்கத்தான் வேண்டும். இது இஸ்லாமிய சட்டத்திற்கு எதிரானது. இப்படி நிறைய உண்டு'' என்ற ரெஹானா பேகம் மதிய இடைவேளை முடிந்து பள்ளிக்குப் புறப்பட, நாம் ஊரை விட்டுப் புறப்பட ஆயத்தமானபோது கண்ணில்பட்டது, சன்மார்க்க தொண்டர் சபை நூலகம். இது கீழத்தஞ்சை மாவட்டத்தின் மிகப் பெரிய நூலகம் மட்டுமல்ல; இன்றைய தமிழக முதல்வர், தனது மாணவப் பருவத்தின்போது அடிக்கடி இங்கே வந்து, புத்தகங்களைப் படித்து, பேச்சுப் பட்டறைகளிலும் கலந்து கொண்ட நூலகம் என்றார்கள். திருக்குவளையிலிருந்து கால்நடையாக வந்தாரா? இல்லை மிதிவண்டியில் வந்திருப்பாரா என்று எண்ணியபடி பேருந்து நிறுத்தம் நோக்கி நடந்தோம்.

ஊருக்கு ''நாகூர் மஹான் ஷாகுல் ஹமீது நாயகம் வருகை வந்து, தங்கியிருந்து, பிரார்த்தனை செய்ததால்தான் இத்தனை செல்வப் பேரூராக விளங்குகிறது'' என்கிறார் மேலப்பள்ளி வாசலின் குருஹாஜி. ''சின்னக்கூத்தன், பெரியக் கூத்தன் என்ற இரண்டு இராஜ புத்திர சிற்றரசர்கள் ஆண்ட பூமியிது. அவர்களோடு தோழமையாக இருந்த பாத்திமா பீவி என்ற இஸ்லாமியப் பெண்ணுக்குக் கூத்தாநல்லூர் முழுவதையும் பட்டா எழுதிக் கொடுத்து விட்டனர். அதன் பிறகே இங்கு இஸ்லாமியர்கள் வந்து குடியேறினார்கள். மார்க்கத்திற்குக் கட்டுப்பட்டு, கடமையும் பக்தியும் மிக்கவர்களாக இங்கே இருக்கும் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள். பர்தா அணியும் பழக்கம் தொடர்ந்து இங்கே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் பெண்களுக்கு என்று பிரத்தியேகமாக இரண்டு கல்லூரிகளை உருவாக்கி இருக்கிறார்கள். பெண்கள் பட்டப்படிப்பு வரை அனுமதிக்கப்படுகிறார்கள். கலாசார ரீதியான கட்டுபாடுகளை, இஸ்லாமியப் பெண்களே இங்கே மீற விரும்புவதில்லை'' என்று ஹாஜி குறிப்பிட்டது உண்மையா என்று அறிந்துகொள்ள, உருது தொடக்கப் பள்ளியில் துணைத் தலைமையாசிரியராக பணியாற்றும் ரெஹானாபேகத்தைச் சந்தித்தோம்.

''இங்கே பெண்களுக்கு எல்லா உரிமையும் கொடுத்திருக்கிறார்கள். அரசியல் சட்ட முன் வடிவையே தாக்கல் செய்ய முடியாத போது, இங்கு முப்பத்து மூன்று சதவீத இடங்களை, நகரசபைத் தேர்தலில் ஒதுக்கி

— ஆர். சி. ஜெயந்தன்

படங்கள்: வெங்கடேஷ்



உங்களால் ஒரு மணி நேரம் செலவிட முடியுமா?

முடியும் என்றால் 45ந்தே நாட்களில் உங்களை இங்கிலீஷில் சரளமாகப் பேச வைக்க எங்களால் முடியும்!

பல்லாண்டு கால ஆராய்ச்சிக்குப்பின் விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் உருவாக்கியுள்ள ஸ்பீச் ஜெனரேட்டிங் ஃபார்முலா SGF™ இதுவரை 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களைச் சரளமாக இங்கிலீஷ் பேச வைத்துச் சாதனை படைத்துள்ளது!

உங்களது ஓய்வு நேரத்தில் தினசரி ஒரு மணி நேரம் செலவிட்டு எங்களது பாடங்களைப் படித்து பிராக்டிஸ் செய்து பாருங்கள். 45ந்தே நாட்களில் நீங்கள் மடமடவென இங்கிலீஷில் பேசத் தொடங்கிவிடுவீர்கள்!

என்ன.. தினசரி ஒரு மணி நேரம் செலவிடத் தீர்மானித்துவிட்டீர்களா? சபாஷ்! உங்களது முன்னேற்றத்தின் முதற்படியாக ஒரு நிமிடம் செலவிட்டுக் கீழ்க்காணும் கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். கோர்ஸ் பாடங்கள் V.P.P. மூலம் உங்களது வீடு தேடி வந்துவிடும். தபால்காரரிடம் ரூ. 395/- செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இலவசம்!

கூப்பனை 15 நாட்களுக்குள் அனுப்பி, பாடங்களுடன் 416 பக்கங்கள் கொண்ட இங்கிலீஷ்-தமிழ் டிக்ஷனரியை இலவசமாகப் பெறுங்கள்.

இதோ கூப்பன்

Yes, நானும் தினசரி ஒரு மணி நேரம் செலவிட்டு 45ந்தே நாட்களில் சரளமாக இங்கிலீஷ் பேச விரும்புகிறேன். எனக்குப் பாடங்களை உடனே அனுப்புங்கள். தபால்காரரிடம் ரூ. 395/- செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

பெயர்: ....

முகவரி: ....

....

....

.... PIN ....

VIVEKANANDA INSTITUTE

9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-600017.

DCKL

அருகிலுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து விவேகானந்தா இன்ஸ்டிட்யூட், 9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-600017 என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

E-Mail: vinglish@vsnl.com Visit us at: www.vivekin.com

விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்டின் நேர்முகப் பயிற்சி மையங்கள்: சென்னையில்: • திநகர் ☎ 4347034. • தாம்பரம் ☎ 2383152. • கீழ்ப்பாக்கம் ☎ 6447501. • பெரம்பூர் ☎ 4828210. • ஆதம்பாக்கம் ☎ 2456668. • தண்டையார்பேட்டை ☎ 5967484. • திருவல்லிக்கேணி ☎ 8442788. • மயிலாப்பூர் ☎ 4987303. • மதுரை ☎ 739974. • திண்டுக்கல் ☎ 431965. • திருச்சி ☎ 711007. • தஞ்சாவூர் ☎ 31753. • கோயம்புத்தூர் ☎ 234957. • திருப்பூர் ☎ 707331. • குன்னூர் ☎ 33792. • ஈரோடு ☎ 253533. • சேலம் ☎ 449552. • கிருஷ்ணகிரி ☎ 30012. • வேலூர் ☎ 227136. • சிதம்பரம் ☎ 22515. • பாண்டிச்சேரி ☎ 341486. • புதுக்கோட்டை ☎ 30795. • காஞ்சிபுரம் மற்றும் • ஓசூர்.

பதினாறில் தொடங்கி

"அப்பா! எனக்கு ஒரு பொற்கொல்லரைக் கல்யாணம் பண்ணி வைக்காதே! காரணம், தங்கத்தின் மீது எனக்கு ஆசையில்லை; எனக்கு வியாபாரம் செய்பவரும் வேண்டாம்; காரணம், எனக்குப் பணம் மீது ஆர்வமில்லை; எனக்கு அரசனும் வேண்டாம்; எனக்கு ஆட்சி அனுபவம் இல்லை; சாதாரண கொல்லனை எனக்குக் கல்யாணம் பண்ணிவை! அவன், என் சங்கிலிகளை வெட்டி, என் உணர்வுகளுக்கு விடுதலை தருவான்!"

– இப்படி ஒரு பாடல், விறுவிறுப்பாக விற்பனை ஆகிக் கொண்டிருக்கும் 'மான் ரீ மஞ்சிரே!' என்ற ஹிந்தி இசை ஆல்பத்தில் இடம் பெற்றிருக்கிறது.

'குளம் போல நான் தேங்கிக் கிடக்க விரும்பவில்லை; நதி போல பொங்கி ஓட விரும்புகிறேன்...' இது இன்னொரு பாடல். பாடுகிற குரலும் நதி போல் பொங்கித்தான் பிரவாகமாக ஓடுகிறது. அவ்வளவு கனத்திலும் அழகான ஒடுக்கல், சொன்ன பேச்செல்லாம் கேட்கும் ஒத்துழைப்பு!

பாடி இருப்பவர் பிரபல வட இந்தியப் பாடகியான சுபா முத்கல்.

கேஸட் அறிமுக நிகழ்ச்சிக்குச் சென்னை வந்திருந்தார் சுபா. 'லேண்ட் மார்க்' புத்தக நிலையத்தில் அவரைச் சந்தித்துப் பேசினோம்.

"பார்த்தால் டிபிகல் தென்னிந்திய மாமி போல இருக்கிறீர்களே! தெற்கே இருந்து வடக்கே போன குடும்பமா?"

"இல்லை. நான் உ.பி.யைச் சேர்ந்தவள். அலகாபாத் என் ஊர்."

"இசைப்பாரம்பரியத்தில் வந்த குடும்பமா?"

"இல்லை. (புன்னகை) என் அப்பா, அம்மா இரண்டு பேருமே, அலகாபாத் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியப் பேராசிரியர்கள். எங்கள் குடும்பத்தில் இசைக் கலைஞர்கள் யாரும் கிடையாது. ஆனால் நல்ல இசை ரசனை கொண்ட குடும்பம். இசையை மதிக்கத் தெரிந்த குடும்பம்."

"உங்களுக்கு எப்படி இசை ஆர்வம் ஏற்பட்டது?"

"சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்! நான் இசை கற்றுக் கொள்ள ஆரம்பித்தபோது எனக்கு வயது பதினாறு. நிறைய நல்ல இசையைக் கேட்டுப் பழகிய ஆர்வத்தில், நாமும் பாட்டு கற்றுக்



• சுபா முத்கல்

கொண்டால் என்ன என்று நினைத்தேன். கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். ஆனால் லேட்டாக கற்றுக் கொள்ள ஆரம்பித்ததால், கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. என் இசை ஆசிரியர்களின் ஆசியும், என் ஆர்வமும், உழைப்பும்தான் நான் சீக்கிரம் முன்னேற காரணம்.

"பாடகியாக வேண்டும் என்ற லட்சியம் இருந்ததா?"

"இல்லை. எனக்கு இசை சொல்லிக் கொடுத்த குரு கச்சேரிகளின் போது அவ்வப்போது பாடச் சொல்லுவார். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

பெருவாழ்வு!

அதன்பின், ஒரு கட்டத்தில் இசைதான் என் வாழ்க்கை என்று முடிவு செய்தேன்."

"கிளாசிகல், பக்தி என்று இருந்துவிட்டு, இந்தி பாப் பிரவேசம் செய்தது சரியா?"

"நான் எதைப் பாடினாலும் சிரத்தையுடன், முழு ஈடுபாட்டுடன், அனுபவித்துப் பாடுகிறேன். பாப் என்பது தரம் தாழ்ந்ததாக நான் நினைக்கவில்லை. அதன் மூலம் மனத்தின் உணர்வுகளை, நல்ல கருத்துக்களைச் சொல்ல முடியும். இதற்கு லேட்டஸ்ட் மான் கே மஞ்சிரே! ஆல்பம் ஒரு உதாரணம்."

"ஏ.ஆர். ரஹ்மான் இசையில் வந்தே மாதரம் பாடி இருக்கிறீர்கள். தமிழ் சினிமாவில் பாட வருவீர்களா?"

"எனக்குத் தமிழ் தெரியாது. ஓரளவாவது கற்றுக் கொண்டால்தான் நன்றாகப் பாட முடியும் என்பது என் கருத்து. உங்களுக்கு ஒன்று தெரியுமா? நான் ஏற்கெனவே ஒரு தமிழ்ப் படத்தில் வித்தியாசாகர் இசையில் பாடியிருக்கிறேன். என்ன பாட்டு என்று நினைவில்லை."

(வித்யாசாகரிடம் விசாரித்தபோது, 'அரசியல்' என்ற படத்தில் மணப்பெண் கனவுகாணும் வாராயோ தோழியே! என்ற பாடல் அது என்று தெரிகிறது)



டெயில் பீஸ்: இதே இசை ஆல்பத்தில், ருக்மாபாய் என்ற ஐம்பது வயது பெண்மணியும் ஒரு பாடல் பாடியிருக்கிறார். இவர், குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் வாழும் மங்கானியர் இனத்தைச் சேர்ந்தவர். இவர்கள் அரசவைகளில் பாடியவர்கள்.

ருக்மாபாய் பற்றிக் கேள்விப்பட்ட இசை அமைப்பாளர் சாந்தனு, அவரைத் தேடி ராஜஸ்தான் சென்றார். சரியான விலாசம் இல்லாமல் ஜெய் சால்மீரை ஒட்டிய கிராமப் பகுதிகளில் மூன்று நாட்கள் தேடினார். கடைசியில் கட்டட வேலை நடந்து கொண்டிருந்த ஓர் இடத்தில் ருக்மாபாயைக் கண்டுபிடித்தார். போலியோ தாக்கி, நடக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்தார் ருக்மாபாய். பேச்சுவாக்கில், தம் பழைய துணிப் பையிலிருந்து, அவர் ஒரு சிறு புத்தகத்தை எடுத்துக் காட்ட, அது அவரது பாஸ்போர்ட்!

ஆம்! லண்டன் பி.பி.சி. நிறுவனம் பத்தாண்டுகளுக்கு முன் இவரது திறமை பற்றிக் கேள்விப்பட்டு, 'உலக இசை' என்ற வரிசையில் இவரை லண்டனுக்கு வரவழைத்துப் பாடச் செய்தது!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படம்: **ஸ்ரீஹரி**

பெரியார் விழா :



வீரமணிக்கு வந்த கோபம்!

● பரபரப்பாகப் பேசப்பட்ட பெரியார் பிறந்த தின விழா மதச்சார்பற்ற அணியால் சென்னை பனகல் பார்க்கில் அட்டகாசமாகக் கொண்டாடப்பட்டது. மேடையில் எந்தக் கட்சியின் குறியீடுகளும் இல்லையென்றாலும், எதிர்ப்புறம் அ.தி.மு.க. கொடிகள், தோரணங்கள், ஜெ.வின் கட்-அவுட்கள். சோனியா கட்-அவுட்டுகள். தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கும் கட்-அவுட் வைக்க முயன்றனர் காங்கிரஸார். ஆனால் அ.தி.மு.கவினர் இளங்கோவனின் கட்-அவுட்டுக்கு 'நோ' சொல்லி விட்டனர். இதனால் காங்கிரஸாருக்கு எரிச்சல்; ஜெயலலிதாவுக்குத்தான் பாராட்டு விழாவோ என்று நினைக்கும் அளவுக்கு அந்த ஏரியாவை கலக்கியிருந்தார்கள் அ.தி.மு.க.வினர்.

● ஹர்கிஷன் சிங் சுர்ஜித்திலிருந்து உள்ளூர் பொன்குமார் வரை "பெரியார் விழாவுக்குத் தலைமைதாங்க ஜெயலலிதாவுக்கு முழுத் தகுதி இருக்கிறது" என்று வலியுறுத்திப் பேசினார்கள். ஊழல் குற்றச்சாட்டுக்களைப் பற்றி ஒருவரும் கண்டுகொள்ளவில்லை.

● திருமாவளவன் பேசும்போது மழை சற்று வலுத்தது. கூட்டம் முண்டியடித்து மேடையின் முன்னே அமர்ந்திருந்த பத்திரிகைக்காரர்களின் மேல் வந்து சாய்ந்தது. தொடர்ந்து முன்னேறி மேடையை அலாக்காகத் தூக்கி விடுவார்களோ என்று கூடத் தோன்றியது. வீரமணிக்குக் கோபம் வர, "இது பெரியார் விழா. கட்டுப்பாட்டோடு இருப்பவர்கள் இருங்கள். மற்றவர்களெல்லாம் வெளியேறுங்கள்" என்று மைக்கைப் பிடித்து ஆவேசமாகக் கூறினார். அவரது ஆவேசத்தைப் பார்த்துப் பயந்த ஜெ. தமது இருக்கையிலிருந்து எழுந்து சென்று அவரை அழைத்து வந்தார். முண்டியடித்து சலசலப்பை உண்டாக்கியது ரத்தத்தின் ரத்தங்கள்தான். "ஜெயலலிதா மைக்குக்கு வந்து பேசி அமைதிப்படுத்தியிருக்கலாம். அவர் ஏன் அவ்வாறு செய்யவில்லை?" என்று கேட்டார் ஒரு கூட்டணிப் பிரமுகர் ஒருவர்.

● "அடுத்து வரப் போகும் வெற்றிக்கு அச்சாரமாக இருக்கிறது இந்த விழா" என்று பூரிப்புடன் சொன்னார் வீரமணி. "உதிர்ந்தவர்களை ஒன்று சேர்க்கும் வேலை திராவிட கழகத்துக்கு ஏன் என்று சிலர் கேட்கிறார்கள். அவர்களுக்கு உதிர வைத்துப் பார்க்கும் குரங்கு புத்தி" என்று கலைஞரை அட்டாக் செய்தார் அவர்.

● "தமிழகத்தில் மதவாதம் வேரூன்றி பிடித்துக்கொள்வதை தடுக்கத்தான் இந்த அணி அமைக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னார் மூப்பனார். "மழை பெய்தால் யாரும் எழுந்து வெளியேறக் கூடாது. அப்படிச் செய்தால் நான் வந்து எதிரில் அமர்ந்து கொள்வேன்" என்று எச்சரித்தார் மூப்பனார். அப்புறம் ஜெ. பேசும் போது தூறல் போட்டது. கூட்டம் அசையாமல் நின்றது.

● ஜெயலலிதா பேசும் போது கொஞ்சம் கூட வார்த்தைகளை முழுங்காமல் முதல்வரைத் தாக்கினார். "அழகிரி விவகாரத்தை உள்கட்சி விவகாரம் என்கிறார் கருணாநிதி. அண்ணா அறிவாலயத்துக்குள் நடந்தாலோ அல்லது கோபாலபுரத்தில் நடந்தாலோ உட்கட்சி விவகாரம் என்று விட்டு விடலாம். தெருவுக்கு வந்து விட்ட விஷயம் உட்கட்சி விவகாரமா?" என்று ஆவேசமாகக் கேட்டார் ஜெ.

● "லட்சியச் சின்னமான பெரியாரை தேர்தல் சின்னமாக மாற்றாதே!" என்று வீரமணிக்கு அட்வைஸ் செய்து போஸ்டர் ஒட்டியிருந்தார்கள் எதிர் கோஷ்டியான பெரியார் திராவிட கழகத்தினர்.

— கௌசி

படம் : ராஜன்

ஸ்ரீராம பக்த ஹனுமான்

10

அங்கதனுடன் ராமகாரியமாகப் புறப்பட்டு வந்த வானர சேனை, ஸ்வயம் பிரபையின் குகையிலிருந்து வெளியேறி திக்குத் திசை புரியாமல் நின்றது. அடுத்து என்ன செய்வதென்று யாருக்கும் தெரியவில்லை. சுக்ரீவன் விதித்திருந்த ஒரு மாத கெடுவோ முடிந்து போய் விட்டது.

அங்கதன் மிகவும் பயந்தான். இந்த ஒரு மாத காலமாக சீதையைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாமலிருந்துவிட்டுத் திரும்பிப் போனால் சுக்ரீவன் கரை காணாத கோபம் கொள்வானல்லவா! எல்லோரையும் சிரச்சேதம் பண்ணினாலும் ஆச்சர்யமில்லை!

அங்கதனின் இந்தப் பயம் எல்லோருக்கும் பரவ, தாரன் என்பவன் சொன்னான்:

"மறுபடியும் இந்த ஸ்வயம் பிரபையின் குகைக்குள்ளேயே போய்விடுவோம். சுக்ரீவனாலும் நம்மைக் கண்டுபிடிக்க முடியாது; வேறு யாராலும் கண்டுபிடிக்க முடியாது. அங்கேயே - உள்ளே - நமக்கு வேண்டிய உணவும் - பழங்களும் தண்ணீரும் எல்லாம் கிடைக்கும். அப்படியே உண்டு மகிழ்ந்து இருந்து விடலாமல்லவா!"

எல்லோரும் இதைக் கேட்டு யோசித்த நேரத்தில் நெஞ்சுரத்தோடு பேசியவன் ஹனுமான் மட்டுமே.

அவன் என்ன சொன்னான்...?

"இந்தக் குகையில் ஒளிந்துகொண்டால் சுக்ரீவனுடைய கோபத்திலிருந்து தப்பித்து விடலாம் என்று கனவு காண்கிறாயே...! அது எங்கேயாவது நடக்குமா? பாதாளத்தில் போய் ஒளிந்துகொண்டால்கூட கண்டு பிடித்து விடக் கூடியவன் சுக்ரீவன். மேலும், பலம் பொருந்தியவர் ஒருவரோடு பலம் குறைவானவர்கள் விரோதம் கொள்வது எப்படி சம்மதத்துக்குரியதாகும்? உலக நியதிக்கே பொருந்தாத ஒரு யோசனையைச் சொல்கிறாயே! யுவராஜாவான நீ இப்படிப் பேசலாமா? எல்லோருக்கும் நீயல்லவா வழிகாட்டியாயிருக்க வேண்டும். உற்சாகப் படுத்தி காரியத்தைச் சாதிப்பது அல்லவா உன் வேலை!"

ஆஞ்சனேயன் இவ்வாறு தலைமைக் குணத்துக்கு உரிய பண்புகளை எடுத்துச் சொல்லி அங்கதனுக்கு நினைவூட்டினான். யுவராஜா என்பதற்காக அங்கதனைக் கண்டும் ஹனுமான் அஞ்சவில்லை; சுக்ரீவனின் சீற்றத்துக்கும் அவன் பயப்படவில்லை, பாருங்கள்.

ஆனால் அங்கதன் மசியவில்லை. தர்பையைப் பரப்பி அதன் மீது உட்கார்ந்து

இடம் மாறிய ஹனுமான்!

சென்னை, திருவல்லிக்கேணி பகுதியில் ஆஞ்சநேயருக்குப் பல ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று குறிப்பிடத்தக்க விசேஷம் பொருந்தியது. அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி கோவில் குளத்தின் கிழக்குக் கரையில் எழுந்தருளியிருக்கும் ஹனுமார் - இவர் வரப்பிரஸாதி என்று கருதப்படுபவர். முதலில் குளத்தின் மேற்குக் கரையில் இவர் வீற்றிருந்தாராம். பிறகு, தமது சக்தியைச் சந்தேகித்து, கிண்டல் செய்து வந்தவர்களும் வியக்கும் விதமாக இரவோடிரவாக கிழக்குக் கரைக்கு எழுந்தருளிவிட்டாராம்!


சென்னை, கொரட்டூரில் பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள ஆஞ்சநேயர் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. அருகேயே உள்ள பாடி பகுதியின் டி.வி.எஸ் நிறுவன பணியாளர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் இந்த ஹனுமார் கோயில் நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆலயத்தில் உள்ள ராமபிரான் முதலில் திருநின்றவூரில் பிரதிஷ்டை ஆனவர். பின்னர் இங்கே கோயில் கொண்டார்.

கல்யாணபுரம்
ஆரவமுதன்

ப்ராயோபவேசம் செய்ய ஆரம்பித்து விட்டான்! 'பிராயோபவேசம்' என்றால் உண்ணாவிரதம்... சத்தியாகிரஹம் என்று சொல்லலாம்.

அந்தச் சமயத்தில்தான் அங்கே வந்தது சம்பாதி என்ற கழுகு. ஜடாயுவின் சகோதரன் இந்த சம்பாதி. இந்த வானரக் கூட்டத்தின் அருகே வந்து பேச்சுக் கொடுக்கலாயிற்று.

வந்திருந்த கூட்டம், ராம காரியமாக வந்திருப்பது தெரிந்ததும்



சம்பாதிக்கு ஏகப்பட்ட சந்தோஷம். உடனே தனது கதையைச் சொல்ல ஆரம்பித்தது அவர்களிடம்!

சகோதரன் ஜடாயுவும் தானும் ஆகாய மார்க்கத்தில் வெகு உயரம் பறந்து சென்றபோது, சகோதரனுக்கு எந்தத் தீங்கும் நேரக் கூடாது என்பதற்காக, சிறகினால் ஜடாயுவை அணைத்துக் காத்ததைச் சொல்கிறான். அந்தப் பயணத்தின்போது தான் அக் காட்சியைக் கண்டார்கள் ஜடாயுவும் சம்பாதியும் –

ராவணன் என்ற அசுரன் ஒரு ஸ்த்ரீயைப் பலவந்தமாக அபகரித்துச் செல்வதைக் கண்டார்கள். அந்தப் பெண்மணி "ராமா! லக்ஷ்மணா!" என்று கதறி அழுது கொண்டிருந்தாள். ராவணன் அவளை இலங்கை மார்க்கமாக எடுத்துச் சென்றான் என்பதைக் கூறி, இலங்கையை அடைய நூறு யோஜனை தூரம் கடலைக் கடந்து சென்றாக வேண்டும் என்று திசையையும் காட்டியது சம்பாதி!

"எல்லீருஞ்சேரவென்பது எளிதன்று" என்று கம்பர் இந்த இலங்கைப் பயணம் குறித்து வர்ணிக்கிறார்.

நூறு யோஜனை தூரம் என்பது சுமார் ஆயிரம் மைல்! அத்தனை தூரம் கடந்து போய் சீதையைக் கண்டு திரும்ப யாரால் முடியும்!

யோசித்த வண்ணமாக வானர வீரர்கள் அனைவரும் தெற்கு சமுத்திரக் கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

வந்து சேர்ந்ததும் விவாதம் ஆரம்பித்தது. சமுத்திரத்தை எப்படித் தாண்டுவது? யார் தாண்டுவது...?

"நான் பத்து யோஜனை தூரம் தாண்டுவேன்" என்றான் ஒருவன்.

"என்னால் இருபது தாண்ட முடியும்" என்றான் மற்றொருவன். "முப்பது" என்றான் மூன்றாமவன்.

தலைவன் அங்கதனோ, தன்னால் கடலைத் தாண்டிப் போய் விட முடியும்; ஆனால் திரும்பி வர முடியுமா என்பது சந்தேகமே என்றான்.

அந்த வேளையில்தான் ஜாம்பவான் ஹனுமானைப் பார்த்துச் சொன்னார்:

"ஆஞ்சநேயா! இந்த அரிய காரியத்தை உன்னால் மட்டும்தான் செய்து முடிக்க முடியும். ஆனால் உனக்கிருக்கக் கூடிய வலிமை உனக்கே தெரியாது. அது எத்தகைய வலிமை என்று நான் சொல்கிறேன். கேட்டுக் கொள்வாயாக..."

"வானரர்களுள் சிறந்து விளங்கக் கூடியவன் நீதான். தேஜஸ்ஸிலும் பலத்திலும் ராம – லக்ஷ்மணர்களுக்கும் சுக்ரீவனுக்கும் கூட ஈடானவன் நீ. உன்னுடைய வேகமும் பராக்கிரமமும் கருடனுடையதைவிட என் அளவும் குறைந்து போய்விடவில்லை. உன் கதையை உனக்கு நினைவூட்டுகிறேன்.

"உன் அம்மா யார்...? புஞ்சிகஸ்தலை

அருள்வாக்கு

"**தா**ன் சுத்தமாவதுதான் ஸர்வ தர்மமும்" என்றால் இது ஸ்வயநலம் மாதிரி அல்லவா இருக்கிறது என்று தோன்றலாம், ஆனால் இது நாம் லோக ரீதியில் நினைக்கிற மாதிரியான ஸ்வயநலம் இல்லை. பிறத்தியாரைக் கஷ்டப்படுத்தியாவது நம் இந்திரிய ஸுகங்களைப் பூர்த்தி பண்ணிக் கொள்வதுதான் தப்பான ஸ்வயநலம். மனஸை சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டுமானால் நாம் கஷ்டப்பட்டாவது நல்லதே பண்ண வேண்டியதாகிறது. சுயநலம்


திருவண்ணாமலையில் உள்ள மலைமீது காணப்படும் செப்புக் கொப்பரையில் இருபத்து நான்கு முழம் துணி திரியாகப் போட்டு, ஒரு மணங்குக் கற்பூரம் அதனுடன் சேர்த்து



சுற்றப்பெற்றிருக்கும். இருபது மணங்கு நெய் ஊற்றி தீபம் ஏற்றுவார்கள். இந்த ஜோதியைக் காண்பதற்குப், பஞ்ச மூர்த்திகளும் எழுந்தருளுவதாக ஐதீகம். ஜோதியை சேவிக்கும் பக்தர்கள், பஞ்சமூர்த்திகளின் அருளால் பஞ்சேந்திரியங்களை அடக்கும் ஆற்றல் பெற்று மெய்ஞ்ஞானவடிவினராய் விளங்கலாம் என்பது உட்பொருள்.

– 'ஒரு இந்து அறிந்து கொள்ள வேண்டியவை' நூலிலிருந்து

தகவல்: பா. குணா



கூடாதுதான்; பிறருக்கு உதவ
வேண்டியதுதான். ஆனால்
'உபகாரம்' என்றால்
பிறத்தியாருக்குச் செய்தால்
மட்டும் போதுமா? இதோ
நமக்கென்று ஈச்வரன் ஓர்
உயிரைக் கொடுத்த மாதிரி
கொஞ்சம் வெளியே
அவிழ்த்து விட்டிருக்கிறானே...
மனஸ் என்ற ஒன்றைக் கொடுத்து
அதை நல்லது கெட்டது இரண்டிலும்
ஆடுகிற மாதிரி விட்டிருக்கிறானே! இந்த
நம் உயிருக்கு, ஜீவாத்மா என்கிறார்களே,
அதற்கு மட்டும் நாம் உபகாரம்
பண்ணாமல் இருக்கலாமா? மனஸை
நல்வழியிலேயே செலுத்தி, பகவான்
தந்திருக்கிற வாக்கு, சரீரம்
எல்லாவற்றையும் நல்ல
பேச்சு, நல்ல காரியங்கள்
இவற்றிலேயே
பிரயோஜனப்படுத்தி
இந்த உயிரைப் பேரின்ப
நெறியில் சேர்க்க நாம்
கடமைப்பட்டிருக்கவில்லையா?
சின்னதான ஸ்வய
நலத்தைவிட்டு, இந்தப் பெரிய
'ஸ்வயநல'த்துக்கு எல்லோரும்
பாடுபடத்தான் வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

என்ற அழகான அப்ஸரஸ்த்ரீ அவள். அவளுக்கு நேர்ந்த சாபத்தினால் குஞ்சரன் என்கிற வானர தேவனுக்கு அவள் பெண்ணாகப் பிறக்க வேண்டியதாயிற்று. அஞ்சனை என்ற பெயருடன் அவள் விளங்கினாள்.

"ஒருநாள் அவள் பலவிதமான ஆடை ஆபரணங்களும் மாலைகளும் தரித்து, மலைச்சாரலில் உலாவிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே வாயுதேவன் வேகமாக வீசியபடி வந்தான். அஞ்சனையின் அழகில் மோகித்து அவளைக் கட்டி அணைத்தான்.

"பதறிப் போனாள் அஞ்சனை. தனது கற்பைக் களங்கப்படுத்த வேண்டாம் என்று கெஞ்சினாள்.

"வாயு பகவான் அவளைத் தேற்றி ஆறுதல் கூறினான். 'பெண்ணே உன் கற்பு கெடவில்லை; கலங்காதே! என் அருளினால் உனக்கு மகா வீரனான, புத்திமானான ஒரு மகன் பிறப்பான். என்னைப் போலவே ஆகாய மார்க்கமாகப் பறக்கும் வல்லமையை அவன் பெற்றிருப்பான்...' என்று அஞ்சனையிடம் சொன்னான்.

"ஆஞ்சநேயா! அந்த வாயுகுமாரன், அஞ்சனை புத்திரன் நீதானப்பா!" என்று ஜாம்பவான் வெகு பொறுமையாக அனைத்தையும் நினைவூட்டிச் சொன்னார்.

"நீ குழந்தையாக இருந்தபோது, சூரியனைப் பழம் என்று எண்ணிக்கொண்டு தட்டிப் பறிக்க முயன்றதையும் நினைவுபடுத்திக் கொள். அப்போது கிட்டிய சாபத்தினால்தான் உன் சக்தி உனக்கே மறந்து போயிற்று.

"வாயு புத்ரா! குழந்தையிலே சூரியனையே பிடிக்கப் போன உன்னால் மட்டும்தான் இந்த நூறு யோஜனை விஸ்தீரணமுள்ள சமுத்திரத்தைத் தாண்ட முடியும்."

– இவ்வாறு ஜாம்பவான் சொல்லி முடித்தார்.

இந்தக் கட்டத்தை – ஜாம்பவான் ஆஞ்சநேயனுக்கு அவரது சக்தியை நினைவூட்டியதை– கம்பர் எத்தனை அழகாய்ச் சொல்கிறார்!

நீதியில் நின்றீர் வாய்மை அமைந்தீர்
நினைவாலும்
மாதர் நலம் பேணாது வளர்ந்தீர்
மறையெல்லாம்
ஓதியுணர்ந்தீர் ஊழி கடந்தீர் உலகினும்
ஆதி அயன்தானே என யாரும்
மறைகின்றீர்

நீதி, வாய்மை எல்லாம் அமையப் பெற்றவன் மட்டுமல்ல, நினைவாலும் மாதரை விழையாத பிரும்மசாரி ஆஞ்சநேயன். 'ஊழி கடந்தீர்' என்றால் மரணத்தை வென்ற சிரஞ்சீவி என்று அர்த்தம். ஆதி அயன் அதாவது பிரும்மாவாகவே யாவரும் அவனைச் சொல்கிறார்கள் என்கிறார் கம்பர்!

இத்தனையையும் ஜாம்பவான் சொல்லக் கேட்டதும், ஹனுமார் உடனே தன் சரீரத்தை பிரும்மாண்டமாக்கிக் கொண்டு மகேந்திர மலை மீது ஏறி நின்றாராம். மனத்தாலேயே ஒருமுறை இலங்கைக்குப் போய் வந்தாராம்!

(வளரும்)

தீபாவளி கோலாகலம் ஆரம்பம்

இளமை! புதுமை! இனிமை!

ரெடிமேட் ஆடைகளின் சங்கமம்.

தீபாவளியை முன்னிட்டு ஏராளமான புடவைகள் பாண்ட், சர்ட்டுகள் மற்றும் ரெடிமேட் ஆடைகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன.



ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ்

27, ரங்கநாதன் தெரு
(மாம்பலம் ரெயில் நிலையம் அருகில்)
தி.நகர். சென்னை — 600 017.
போன்: 4339971 / 4334660

ஞாயிறும் விற்பனை உண்டு



அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஆலயம்
24–வது தெரு, தில்லை கங்கா நகர், நங்கைநல்லூர், சென்னை - 600 061

ஸ்ரீதேவி கருமாரி அம்மன் திருக்கோயில் இராஜகோபுரம் திருப்பணியும், திருக்கோயில் கும்பாபிஷேகமும்

அன்புடையீர்,

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் பரிபூர்ண அனுக்கிரஹத்துடன் ஸ்ரீலஸ்ரீ தவத்திரு ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் உபாசகர் ஸ்ரீ இராமதாஸ் சுவாமிகள் முன்னிலையில், இப்பகுதி வாழ் பக்தகோடிகள் அளித்த நிதி, பொருளுதவியுடன் நங்கைநல்லூரிலுள்ள, தில்லை கங்காநகர், ஸ்ரீதேவி கருமாரி அம்மன், ஸ்ரீ ப்ரசன்ன வேங்கடேசப் பெருமாள், மற்ற சன்னதிகளுக்கு 04.09.1987 அன்று மிக விமரிசையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது யாவரும் அறிந்ததே.

மேற்படி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் எதிரில் இராஜகோபுரம் அமைத்து, மஹா கும்பாபிஷேகம் நடத்த, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் 30.6.2000 அன்று திருக்கோவிலுக்கு விஜயம் செய்து, நல்லாசியும் வழங்கினார். அன்றே ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் சன்னதி அமைக்கவும் ஆசி வழங்கினார்.

இப்பணிகளின் முதல் கட்டமாக 27.8.2000 ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீதேவி கருமாரி அம்மனின் நேர் கிழக்கில் இராஜகோபுரம் அமைக்க பூமி பூஜை நடைபெற்றது.

இராஜகோபுரம் கட்டுமானப் பணிக்கு கதை வேலைகள், கட்டுமானப் பொருட்கள் கூலி உட்பட செலவு சுமார் ரூபாய் 6, 00,000/- (ஆறு லக்ஷம்) என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இராஜகோபுரம் மற்றும் எல்லா சன்னதிகளுக்கும் கும்பாபிஷேகம் 06.04.2001ல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு சுமார் 3,00,000/- ரூபாயும் (மூன்று லக்ஷம்) மற்றும் கட்டுமானப் பணி, பெயிண்டிங் (வர்ண பூச்சு) வேலைகளுக்காக சுமார் 6,00,000/– (ஆறு லக்ஷம்) ரூபாயும் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நமது ஆலயத்தின் அருகாமையில் உள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்து அதில் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர் சன்னதி நிர்மாணிக்க சுமார் 20,00,000/- (இருபது லக்ஷம்) ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பக்த கோடிகள் அனைவரும் மேற்படி திருப்பணிகளுக்கு, செங்கல், மணல், இரும்பு கம்பிகள், சிமெண்ட், ஜல்லி, மரம் போன்ற பொருட்களும், பண உதவியும், இவைகளுக்கும் மேலாக சரீர உதவியும் செய்து இறைவனின் அருள் பெற்று சகல நன்மைகளையும் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளை செக்/டிராப்ட் மூலமாக 'ஸ்ரீதேவி கருமாரி அம்மன் டிரஸ்ட்' என்ற பெயரில் எடுத்து சென்னையில் மாற்றக் கூடியதாக அனுப்பவும்.

இங்ஙனம்,
C.J. விஜயகுமார்
நிர்வாக அறங்காவலர் மற்றும் திருப்பணி கமிட்டியினர்

குறிப்பு: ரூபாய் 2000/- அதற்கு மேலும் நன்கொடை கொடுப்பவர்களின் பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்படும்.





* ராணி பீட்டர்

* மையத்தில் சிறார்கள்



* சுதந்திர தின விழாவில் குழந்தைத் தொழிலாளர்கள்

காலையில் கட்டிங் மாலையில் கல்வி!

"பட்டறையில உக்காந்தா பணம் கெடைக்கும்! பள்ளிக்கூடம் போனா என்ன கெடைக்கும்?"

- இப்படித்தான் கேட்டார்கள் திருச்சியிலிருந்து முப்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வாழ்மால்பாளையம் கிராமத்து மக்கள். இங்கு வசிக்கும் பெரும்பாலானவர்களுக்குச் செயற்கை வைரங்களுக்குப் (ஜெம் கட்டிங்) பட்டை தீட்டும் வேலை!

'பள்ளிக்கூடம்னா என்ன?' என்று கேள்வி கேட்ட இவர்களின் குழந்தைகளால் இப்போது கடிதம் எழுத முடிகிறது. பேப்பர் வாசிக்க தெரிகிறது. காரணம் - குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படும் கல்வி மையம்!

மதியம் வரை, ஜெம் கட்டிங். மாலை நான்கு மணிக்குக் கல்வி மையம். இரவு வீட்டுக்குச் சென்றவுடன் பத்து மணி வரைக்கும் வைரக் கற்களை குச்சிகளில் (ஆணிகளில்) ஒட்டி வைத்து மறுநாள் வேலைக்கு ஆயத்தம் செய்துவிட்டுத்தான் படுக்கைக்குச் செல்கிறார்கள் இவர்கள்.

பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர்களிடம் பேசிப் பார்த்ததில், "அம்மா, அப்பா ரெண்டு பேரும் பட்டறையிலே வேல பாக்குறாங்க. அம்மாவோட கூலி மட்டும்தான் வூட்டுக்கு வரும்!'' என்றனர். அப்பாக்களின் வருமானம் சாராயக் கடைக்கே சரியாய்ப் போய்விடுமாம்!

"வருமானம் சோத்துக்குப் பத்தாது. ஸ்கூலுக்கு அனுப்பாம சின்னப் புள்ளைங்களா இருக்கற எங்களுக்கும் அவுங்க வேலையைக் கத்துக் குடுத்துடுவாங்க. படிச்சி என்னா கிழிக்கப் போறீங்கன்னு பட்டறையில அவுங்க கைக்குப் பக்கத்திலேயே வேலைக்கு வெச்சிக்குவாங்க!'' என்கிறான் ஒரு சிறுவன்.

"பேச மட்டும்தாங்க தெரியும்! என்ன எழுத்து... என்ன உச்சரிப்பு எதுவும் தெரியாது. இங்க சேந்த பிறகு இப்ப தமிழ்ல எது தந்தாலும் வாசிச்சு காட்டிடுவேன். தபால்கூட எழுதுவேன் சார்!" என்று சொல்லும் சரோஜாவுக்கு வயது பதினான்கு. இப்பொழுதும் அந்தப் பெண் ஒரு ஜெம் கட்டிங் தொழிலாளி.

இந்த மையத்துப் பிள்ளைகளைப் போலவே, இவர்களுக்குப் பாடம் சொல்லித் தர வரும் ஆசிரியர் கணேசன் என்பவரும் காலையில் ஜெம் கட்டிங் வேலை, மாலையில் மையத்தில் ஆசிரியர், இரவில் ஜெம் கட்டிங் வேலை என்று செயல்பட்டு வருகிறார்!

திருச்சி மாநகரில் வாமடம் என்கிற பகுதியில் ஒரு மையம். அதில் நாற்பது பிள்ளைகள். பீடி சுற்றிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்ட குடும்பங்கள். இந்தச் சிறார்களை அவர்களிடமிருந்து மீட்டு பள்ளிக்கு அழைத்து வருவதற்குள் பெரும்பாடாகி விட்டது என்கிறார்கள் ஆசிரியைகள்.

"முதலில் இந்தப் பகுதியில் குழந்தைத் தொழிலாளர்கள் எத்தனை பேரென ஒவ்வொரு வீடாகச் சென்று புள்ளிவிவரம் எடுத்துக் கொண்டோம். அவர்களுக்குக் கல்வியறிவு எந்தளவுக்கு இன்றியமையாதது என்று ஒவ்வொரு தாய், தந்தையரிடமும் எடுத்துச் சொல்வோம். சில இடங்களில் குழந்தைகளின் அம்மாக்கள் எங்களை அநாகரிகமாகத் திட்டி அனுப்பிய சம்பவங்களும் உண்டு." என்கிறார் ஆசிரியை ஜெயலட்சுமி.

பன்னிரண்டு வயதாகும் லட்சுமி வீட்டு வேலை பார்க்கிறார். அரை மணி நேரப் பெர்மிஷனில்தான் வீட்டு வேலைகளை முடித்து விட்டு பள்ளிக்கு வர முடிகிறதாம் இவருக்கு. இதே மையத்தில் பயிலும் அவளது பத்து வயது தங்கை மகேஸ்வரி தங்கள் தகப்பன் நிலை குறித்து சோகம் நிறைந்த ஒரு ராகப் பாட்டில் கேள்விக் குறிகள் நிறைய போட்டு வைக்கின்றாள்.

"நடிகரை கடத்தினது தப்பாப் போச்சு..."
"ஏண்டா?"
"அவரை கடத்திநூறு நாள் ஆனதும் வெற்றி விழா நடத்தணும்கிறாரு!"
- வந்தவாசி பா. ஜெயக்குமார்



கீழ அம்பிகாபுரத்தில் இருக்கிறது இன்னொரு மையம். இது மற்றவற்றை விட சற்றே மாறுபட்டது. மொத்தம் நூற்றியிருபத்தைந்து குழந்தைத் தொழிலாளர்கள். உணவு, தங்குமிடம் அனைத்தும் இலவசம். இங்கு பத்தாம் வகுப்பு வரை கல்வி போதிக்கப்படுகின்றது. பாடங்கள் சொல்லித் தரப்படும் நேரம் காலை பத்து மணி முதல் மூன்று வரை.

வெளி மாணவனாக வந்து போகும் பதினாறு வயது சதீஷ்குமார் படிப்பது பத்தாம் வகுப்பு. இரவு எட்டு மணியிலிருந்து இரண்டு மணி வரை கண் விழித்து அவன் பார்க்கும் வேலை தட்டு ரிக்ஷா மிதிப்பது..! "பிவிசி பைப் லோடும் அடிக்கிறேன். முப்பது ரூபா கெடைக்கும்!" என்கிறான் அவன்.

இதர பள்ளிகளில் படித்தபோது படிப்பைத் தொடராமல் விட்டு விட்டவர்கள், வறுமை மற்றும் குடும்பத் தொல்லை காரணமாக சின்னச் சின்ன வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட சிறுமிகளும் சிறுவர்களும் 'கொஞ்சமாவது படிச்சிக்கணும்'ங்கிற ஆர்வத்தில் இந்த மையத்தில் வந்து சேர்ந்துள்ளனர். பெண் பிள்ளைகளுக்குத் தையல் பயிற்சியும் தரப்படுகின்றது.

இரண்டு பையன்கள், ஐந்து பெண்கள் ஆக ஏழு பேர் நடனத்திலும், வாய்ப்பாட்டில் இரண்டு பெண்கள், ஆர்மோனியத்தில் ஒரு பையன் என பத்து குழந்தைத் தொழிலாளர்களுக்குத் திருச்சி, கலைக் காவேரி நுண்கலைக் கல்லூரியில் இலவசப் பயிற்சி தரப்பட்டு வருகின்றது.

மாவட்ட நிர்வாகத்தின் தலைமையின் கீழ் "சியர்ஸ்" (CHEERS) எனும் பெயரில் இயங்கி வருகின்றது குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்ட அலுவலகம்.

வருமானத்தை இழக்க மறுக்கும் பெற்றோர்களிடம் சகிப்புத் தன்மையுடன் பேசி, அந்த இளஞ்சிறார்களை அழைத்து வந்து அவர்களுக்கும் எழுதப் படிக்க, புரிந்து கொள்ளக் கற்றுத் தருகின்ற பணியில் ஆசிரியைகளும், இதன் அலுவலர்களும் முழு ஈடுபாட்டுடன் செயல்புரிந்து வருகின்றனர்.

"அனைவரது ஒத்துழைப்பாலும், கூட்டு முயற்சியாலுமே இதனை வெற்றிகாரமாகச் செயல்படுத்த முடிந்துள்ளது. குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டத்தில் திருச்சி மாவட்டத்தை இந்தியாவிலேயே முன்மாதிரி மாவட்டமாக மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்கிற ஊக்கம் உண்டாகிறது" என்று சொல்கிறார் குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்ட இயக்குனர் ராணி பீட்டர்!

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு.



பவளம்
பச்சை
ரூபி
முதன் முறையாக அறிமுகபடுத்துகிறோம்
2-in-1 Reversible
Meenakari Necklaces
ஒரே நகையை இரண்டு பக்கமும் உங்கள் விருப்பம் போல் அணியலாம்
10% முதல் 20% சிறப்பு தள்ளுபடி
நகைகள், Coral Flower Sets, Polki Sets (Uncut Diamond Workmanship), Oxidised Jewellery, Gold Wax Jewellery, Imported Beads in all Colours, Hyderabad Gold Foil Beads, Jade, Ruby, Emerald & Blue Sapphire Necklace sets, இவை அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.
all major Credit Cards accepted
ரூ-1000க்கு மேல் நகை வாங்குவோருக்கு
coral flower studs
அல்லது
பஞ்சலோகம் கொலுசு
இலவசம்
கோமேதகம்
புஷ்பராகம்
NARAYANA pearls & gems
MAIN SHOWROOM
Basement, KASI ARCADE, (Boag Road Junction), Next to G.R.T Hotel, 116, Sir Thyagaraya Road, T.Nagar, Chennai - 17. Ph: 825 8714 / 8213457.
SUNDAYS OPEN 11 A.M TO 8 P.M
(TILL DIWALI)
PONDY BAZAAR
FATHIMA PLAZA, (Singapore Plaza) 78, Pondy Bazaar (Between Hotel Hameedia & Blue Star Opticals), Chennai - 17. Ph: 821 6394.
SUNDAYS OPEN 11 A.M TO 8 P.M
PURASAWALKAM
Basement, WAIKIKI COMPLEX, Doveton Signal, Purasawalkam, Chennai - 7. Ph: 532 8011.
SUNDAYS OPEN 11 A.M TO 8 P.M
(TILL DIWALI)
Visit us at www.indiayellowpagesonnet.com/narayanapearls
E Mail: narayanapearls@yahoo.com
நீலம்
முத்து
வைடூரியம்

செக்கில்



கோமதி தன் கணவனை எதிர்பார்த்து வாசலில் நிற்கத் தொடங்கி அரைமணி நேரத்திற்கு மேலாகிவிட்டது.

"சரியா ஆறு மணிக்கெல்லாம் வந்திருவேன்னு சொன்னவரு மணி ஏழாகப் போவுது. இனி எப்ப வந்து எப்ப போவதோ?" கோமதிக்கு ஒரு பக்கம் வருத்தமும், இன்னொரு பக்கம் கோபமும் எழுந்தன. அவள் உள்ளே சென்று உட்கார்ந்து கொண்டாள்.

"ஏண்டி! லட்சுமி!... சட்டையெ மாத்திட்டு போய் வெளையாடு... அழுக்கானா வேறெ இல்லே.." என்று சத்தம் போட்டுச் சொன்னாள்.

எதுவும் கேட்காதது போல் தெருவில் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள் லட்சுமி.

மேலும் ஒரு பதினைந்து நிமிடம் கழிந்திருக்கும்.

''அம்மா!... அம்மா... அப்பா வரு... சைக்கிள்லே வந்திட்டிருக்கு'' என்று மகிழ்ச்சியோடு ஓடி வந்து சொன்னாள் லட்சுமி.

கோமதி பேசாமல் இருந்தாள். உள்ளே நுழைந்த பரமசிவம் கையிலிருந்த பொட்டலத்தை லட்சுமியிடம் கொடுத்தான். அவள் ஆவலோடு பிரித்துப் பார்த்தாள்.

"ஹய்...! பக்காவடை!" என்று சொல்லிக் கொண்டு வாசலில் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினாள்.

"கோமு..." பரமசிவம் மெல்ல அழைத்தான்.

"மணி இன்னும் ஆறாகலியோ...?" என்று சொல்லிக் கொண்டு கண்களைத் துடைத்தாள் கோமதி.

"நான் சொல்லதெ மொதல்லே கேளு" என்று தாழ்ந்த குரலில் பேசினான் பரமசிவம்.

"எனக்கு ஒண்ணும் கேக்காண்டாம்... பல தடவை இப்படி ஏமாத்தியாச்சு... சாரி வாங்கித் தாங்கன்னு நான் ஒண்ணும் கேக்கல்லியே... சொன்னா சொன்ன சொல்லுக்கு ஒரு வெலெ வேணும்... இல்லேன்னா சொல்லப்படாது." கோமதிக்கு அழுகை வந்தது. முந்தானையில் மூக்கைச் சிந்தினாள்.

பரமசிவம் எதுவும் பேசவில்லை. குழந்தை லட்சுமி வாசலில் இருந்த சைக்கிளின் பின் சக்கரத்தைச் சுழலவிட்டு விளையாடிக் கொண்டிருந்தாள்.

"லட்சுமி... சைக்கிளைத் தள்ளிப் போட்டுராதே... மேலே விழுந்திரும்" என்று எச்சரித்தான் பரமசிவம்.

கோமதி விளக்கைப் பொருத்தி வைத்தாள். காப்பி போட்டு பரமசிவத்தின் பக்கத்தில் கொண்டு வைத்தாள்.

இருவரும் மௌனமாக இருந்தனர்.



நகர எல்லையில் அகழிபோல் பெரிய சாக்கடைக் கால்வாய். அதைத் தாண்டினால் புதர்க்காடு. இடையே ஒற்றையடிப் பாதை. அந்தப் பாதை வழியே கொஞ்ச தூரம் நடந்தால் 'கண்டை விளை' குடியிருப்பு வந்து விடும். நூற்றுக்கும் குறைவான வீடுகளைக் கொண்ட ஒரு சிறிய குடியிருப்பு. பலரும் புதிதாக இடம் வாங்கி வீடு கட்டிக் கொண்டு வந்தவர்கள்தான். பெரும்பாலும் ஓலைக் குடிசைகள். வளர்ச்சி கொஞ்சம்கூட எட்டிப் பார்க்காத கிராமம். மின்சார வசதியோ குடிநீர் வசதியோ எதுவும் கிடையாது.

புதர் மண்டிக் கிடந்த நிலத்தை வெட்டித் திருத்தி 'பிளாட்' போட்டு விற்றபோது சிலர் வாங்கிக் கொண்டனர்.

கண்டை விளையிலிருந்து பஸ்ஸ்டான்ட் கடைத் தெருவுக்கு ஒன்றரை மைல் தூரம். ஆனால் நடந்தே தான் போக வேண்டும். கால்வாய்க்குக் குறுக்கே பாலம் இல்லை. ஒரு பனை மரத்தை இரண்டாக வெட்டி இணைத்துப் பாலமாகப் போட்டிருந்தார்கள். அதில் நடந்து போகும்போது பயமாகத் தான் இருக்கும். ஆனால் கண்டை விளை மக்களுக்குப் பழக்கம் ஆகிவிட்டது. சர்க்கஸில் கயிற்றின் மேல் நடக்க பயிற்சி பெற்றதுபோல் கிராமத்து மக்களும் தங்களைப் பழக்கிக் கொண்டனர்.

போட்டிக் கதை - 7

மா. நயினார்

பெண்கள் இடுப்பில் குடமும் கையில் வாளியுமாகத் தண்ணீர் எடுத்துக் கொண்டு மிகவும் லாவகமாகப் பாலத்தைக் கடந்து விடுவர். பெரிய தலைச் சும்மாடுகளைச் சுமந்து கொண்டு வயதானவர்களும் எந்தவிதச் சிரமமும் இல்லாமல் கால்வாயைத் தாண்டி விடுவர். சில இளைஞர்கள் கையில் சைக்கிளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டே நடந்து விடுவார்கள். குழந்தைகள் புத்தகப் பையுடன் ஓடியே வந்துவிடும்.

சுண்டைவிளை குடியிருப்பில் ஒரே ஒரு பெட்டிக் கடைதான். அதுதான் குடியிருப்பின் "சூப்பர் மார்க்கெட்". சிகரெட், பீடி, தீப்பெட்டி, மெழுகு திரி, வெற்றிலை, பாக்கு, புகையிலை, மூக்குப்பொடி, ஊசி, நூல், சலவை பார் சோப்பு, சிறிய தேயிலைக் கூடு, சிறிய பிளாஸ்டிக் கவரில் ஊறுகாய், கண்மை, பொட்டு, பின், ரிப்பன், அரைஞாண் கயிறு, மஞ்சள் நூல், விளக்கெண்ணெய், கடலைமிட்டாய், பொரி உருண்டை, அலுப்பு மருந்து, சிலேட்டு குச்சி இத்யாதி பொருட்கள் அங்கு கிடைக்கும். சில சமயங்களில் ஒரு பழக்குலை தொங்கும். வெயில் காலத்தில் மோர் தண்ணீர் கிடைக்கும். மற்றபடி எந்தப் பொருள் வாங்க வேண்டுமானாலும் ஒன்றரை மைல் நடந்து கடைத் தெருவுக்குத்தான் போக வேண்டும்.

தினமும் குடியிருப்புக்கு வந்து போகிற ஒரே வியாபாரி - மீன்காரி மட்டும்தான். மாதத்திற்கு ஒரு முறை அலுமினியப் பாத்திரக்காரனும் வந்து போவான். பாத்திரங்களையும் பழைய துணிமணிகளையும் பண்டமாற்று செய்வதுதான் அவனது வியாபாரம். பழைய பாத்திரங்களைக் கொடுத்து பழைய துணிகளை வாங்கிக் கொள்வர் குடியிருப்பு மக்கள்.

ஏதோ ஒரு தைரியத்தில் சென்டுக்கு ஆயிரம் ரூபாய் விலையில் பரமசிவம் ஐந்து சென்டு நிலம் வாங்கினான். ஆபீஸ் லோனில் சிறியதாக ஒரு வீடும் கட்டினான். அதன்பின் பலரும் அங்கு இடம் வாங்கி வீடு கட்டினர். எல்லோருமே கூலி வேலைக்காரர்கள். பரமசிவனின் வீட்டிற்கு ஐந்து வயதாகிவிட்டது.

பரமசிவம் பஞ்சாயத்து அலுவலகத்தில் பியூனாக வேலை பார்க்கிறான். பல ஆண்டுகளாக அலுவலகத்தில் டீ வியாபாரம் செய்து வந்தவன். மனிதாபிமானம் கொண்ட ஒரு அரசியல்வாதியின் சிபாரிசில் அவனுக்குப் பியூன் வேலை கிடைத்தது. இப்போது பத்து வருடம் சர்வீஸ் ஆகிவிட்டது. வயது சுமார் நாற்பத்தைந்து ஆகியிருக்கலாம். வேலை கிடைத்து இரண்டு ஆண்டுகளில் திருமணம் செய்து கொண்டான். ஒரே குழந்தை லட்சுமி.

"ஏட்டி... லட்சுமி... காப்பி ஆறிப் போவும் எடுத்து குடிக்கச் சொல்லு" என்றாள் கோமதி.

பரமசிவம் காப்பியை எடுத்துக் குடித்தான்.

"ஆபீசிலெ எங்ககூட வேலை பார்க்கிறவன் 'டி.வி.எஸ்.50' எடுத்திருக்கான். அதனாலெ அவன் சைக்கிளெ விக்கப் போறதாச் சொன்னான். ரொம்ப பழைய சைக்கிளுதான். எனக்கானா நூத்தி அம்பது ரூபாய்க்குத் தாறேன்னு சொன்னான். வேறயும் ரெண்டு மூணு பேரு கேட்டா. அவனுக்கு உடனே பணம் வேணுமாம். ஒனக்கு சாரி வாங்க வச்சிருந்த காசைக் கொடுத்தேன். மீதி அம்பது ரூபா அடுத்த மாசம் தரலாம்னு சொல்லியிருக்கேன்.'' பரமசிவம் அமைதியாகச் சொல்லிமுடித்தான்.

"ஏண்டி... லட்சுமி! வெளையாடினது போதும். வந்து கைகாலு மொகத்தை கழுவிட்டு ராம ராம சொல்லு" என்றாள்



எல்லா மனிதர்களும் நிச்சயம் திருமணம் செய்து கொண்டே ஆக வேண்டும். ஏனென்றால் சந்தோஷம் மட்டுமே வாழ்க்கை ஆகி விடாது.

— மங்கை

கோமதி.

அவள் உள்ளத்தில் பலவிதமான எண்ணங்கள் அரங்கேறின.

'நான் கோபப்பட்டிருக்கக் கூடாது தான். கூலிக்காரன்கூட பத்தாயிரம் கொடு, பத்து பவுனுக்கு உருப்படி போடுன்னு, சொல்லப்பட்ட காலத்திலெ ஒண்ணுமே கேக்காம என்னெ கட்டிக்கிட்டாரு. அனாவசியமா ஒரு காசு கூட செலவழிக்கமாட்டாரு. ஏறிக் கெடக்க இப்படி ஒரு வீடு அமஞ்சதே அவருக்க சாமர்த்தியத்தாலெதான். தெனமும் மூணு மைலு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நடக்காரு. அதுக்கு மேல பஸ்ஸுக்கு மூணு ருவா... கடைத் தெரு பஸ் எப்போதாவது தான் வரும். ஆபீசுக்கும் நேரமாயிடும். அதனால எத்தனை நாளு காலம்பற காப்பிகூட குடிக்காம போயிருக்காரு. சாயங்காலம் வரும்போதும் இப்படித் தானே. ஒரு சைக்கிளு வாங்கினது நல்லதுதான். ரெண்டு மாசம் பஸ்ஸுக்குக் கொடுக்கும் காசுதானே. காலம்புற அடிச்சு பெரண்டு ஓடாண்டாம். பிள்ளையையும் பள்ளிக் கூடத்திலெ கொண்டு விட்டுட்டுப் போகலாம்'- அவள் தன் ஆள்காட்டி விரலால் தரையில் வெறுங் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

குழந்தை லட்சுமி விளக்கின் முன்னால் கண்ணடைத்து கைகூப்பியிருந்து கொண்டு, ஸ்ரீராம மந்திரம் உருவிட்டுக் கொண்டிருந்தாள்.

'பாவம்! கல்யாணமாகி எட்டு வருஷமாச்சு. இதுவரெ ஏதாவது ஆசப்பட்டு கேட்டிருக்காளா...! ஒரு தீபாவளி உண்டா..? பொங்கலு உண்டா...? காதுலெ கழுத்திலெ கெடந்ததையும் வீடு வைக்க வாங்கியாச்சு. நல்ல உடு துணிகூட இல்லே.. எங்க போனுமின்னாலும் அந்தப் பழைய கல்யாணப் பட்டுதான். வீட்டெ விட்டு அவளெ எங்கதான் கூட்டிட்டுப் போயிருக்கேன்? எல்லாம் வீட்டு லோன் அடச்சு தீத்ததுக்குப் பொறவு தான்னு அவதி வச்சிட்டுருக்கேன். அவளா கேட்டா? நான்தானே சொன்னேன். இந்த மாச சம்பளத்திலெ ஒரு சாரி வாங்கித் தாரேன்னு... ஏமாத்தியிருக்கக்கூடாதுதான்.. பரமசிவமும் தன் மனைவியின் நிலையை எண்ணி வருத்தப்பட்டான்.



"ஒரே ஆளுக்கு ரெண்டு இன்லண்ட் எழுதறீங்களே.. எதுக்கு"

"ஒண்ணு லெட்டர்... மற்றது பின் குறிப்பு!"

— அம்பை தேவா


"கோமதி... நாளைக்கே சைக்கிளைத் திருப்பிக் கொடுத்திடறேன். நாளைக்கு சாயங்காலம்போய் சாரி எடுக்கலாம். வருத்தப்படாதே. நீபோய் ராத்திரிக்கு ஏதாவது செய்." என்று அன்போடு சொன்னான் பரமசிவம்.

கோமதி எழுந்திருந்து அடுக்களைக்குப் போனாள். சில நிமிடங்களில் கையில் ஒரு காய டப்பாவுடன் திரும்பி வந்தாள்.

"பாருங்கோ... நீங்க செலவுக்குத் தரப் பட்டதில் மிச்சம் பிடிச்சு வச்சிருந்த சில்லறை காசு இதுல இருக்கு... எல்லாமா முப்பத்தேழு ரூபா. தீவாளிக்கு லட்சுமிக்கு ஒரு சோடி செருப்பு வாங்கலாம்னு நெனச்சேன். சாம்பலு வித்த ஆறு ரூபாயும் இருக்கு. எல்லாமா சேத்து அம்பது ரூபா தெகச்சு சைக்கிளுக்குப் பாக்கியெ குடுத்திருங்கோ... யாருட்டையும் கடன் வைக்க வேண்டாம்." என்று சொல்லிக் கொண்டே காய டப்பாவைக் கணவனிடம் நீட்டினாள் கோமதி.

பரமசிவன் தன் கைகளை அவளது தோளின் மேல் வைத்தான்.

"இப்ப ரெண்டு பேருக்கும் சண்டெ தீந்தா?" என்று சிரித்துக் கொண்டே பக்கத்தில் வந்து நின்றாள் லட்சுமி.



பொன்னியின் செல்வன்

முப்பத்து இரண்டாம் அத்தியாயம்

இறுதிக் கட்டம்

அமரர் கல்கி

நந்தினி திரும்பிச் சென்று தனது அறைக்குள் வருவதற்காக ஏற்பட்ட பிரதான வாசலின் கதவைச் சாத்தித் தாளிட்டு வந்தாள். பின்னர், கையில் தீபத்துடன் வேட்டை மண்டபத்தின் இரகசியக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே பிரவேசித்தாள்.

மந்திரவாதி ரவிதாஸன் முன்னமே கோரமான முகமுடையவன். முகத்திலும் தலையிலும் புதிதாக ஏற்பட்டிருந்த காயங்களினால் அவனுடைய தோற்றம் மேலும் கோரமடைந்திருந்தது.

நந்தினி அதைப் பார்த்துவிட்டு, "மந்திரவாதி! இது என்ன, உன் உடம்பெல்லாம் புதுக்காயங்கள்?" என்றாள்.

"ராணி! இதிலே தங்களுக்கு வியப்பு என்ன? தங்களைப் போல் நாங்கள் அறுசுவை உண்டி அருந்திப் பஞ்சணை மெத்தையில் சொகுசாய்ப் படுத்துக் காலங் கழிப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? நானும் பரமேசுவரனும் இன்று பிழைத்து வந்திருப்பதே பெரிய காரியம். இறந்து போன பாண்டியச் சக்கரவர்த்தியின் ஆவிதான் எங்களை இன்று உயிரோடிருக்கும்படி காப்பாற்றியது..."

"இல்லை, ரவிதாஸா! இல்லை! அவருடைய ஆவி என்னுடனேயே சதா சர்வ காலமும் இருக்கிறது. ஒரு நாழிகைக்கு முந்திக்கூட என் முன்னால் தோன்றிச் சபதத்தை நிறைவேற்றப் போகிறாயா! இல்லையா?' என்று கேட்டது."

"ராணி! அதற்குத் தாங்கள் என்ன பதில் சொன்னீர்கள்?"

"சபதத்தை இன்று நிறைவேற்றுவேன்; இல்லாவிடில் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று சொன்னேன்."

"அப்படியானால் நாங்கள் ஓடோடியும் வந்ததே நல்லதாய்ப் போயிற்று. இத்தனை காலங் கழித்து நீங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதில் யாருக்கு என்ன லாபம்? எடுத்த காரியம் அல்லவோ முடிவு பெற வேண்டும்? தங்களால் முடியாது என்றால்..."

"முடியாது என்று யார் சொன்னார்கள்? சபதத்தை நிறைவேற்றுவேன்; அதற்குப் பிறகு என்னுடைய உயிரை மாய்த்துக் கொள்ளுவேன்..."

"வேண்டாம், வேண்டாம், சபதத்தை நிறைவேற்றிய பிறகு தாங்கள் செய்யக் கூடிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. மதுரையில் வீரபாண்டியனுடைய திருக்குமாரனுக்கு உலகமறியப் பட்டாபிஷேகம் செய்தாக வேண்டும்..."

"அதையெல்லாம் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். இன்று இரவு என் வேலை முடிந்து விடும்; என் வாழ்வும் முடிந்து விடும்..."

"ராணி! பழுவேட்டரையருடைய பொக்கிஷத்தில் உள்ள திரவியங்கள் எல்லாம் மலைநாட்டுக்குப் போய்ச் சேர வேண்டும். அதற்குத் தங்கள் உதவி தேவையாயிருக்கிறது!"

"சபதம் முடிந்த பின்னரும் என் கணவரை ஏமாற்றிக்கொண்டு உயிர் வாழச் சொல்கிறாயா, மந்திரவாதி!"

"அம்மணி! தங்கள் கணவர் யார்?"

"உலகறிய என்னை மணந்து, நாடு நகரங்களில் உள்ளவர்களின் பரிகாசங்களையெல்லாம் பொருட்படுத்தாமல், என் ஒவ்வொரு சபதத்தையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிற உத்தமரைத்தான் சொல்கிறேன்..."

"ராணி! பழுவேட்டரையர் தங்கள் கணவர் அல்ல. ஒவ்வொரு நாள் இரவும் வீரபாண்டியர் என் கனவில் வந்து தங்களை அவருடைய பட்டமகிஷியாக நடத்தும்படி கட்டளையிடுகிறார்..."

"மந்திரவாதி! அவர் பேச்சு வேண்டாம். இந்தக் காயங்களெல்லாம் உனக்கு எப்படி ஏற்பட்டன என்று சொல்லவில்லையே?"

"நேற்றிரவு கொள்ளிடக்கரைக் காட்டில் எங்களை ஒரு கிழப்புலி தாக்கியது. கிழப் புலியானாலும் பற்களும் நகங்களும் மிக்க கூராயிருந்தன..."

"எப்படித் தப்பி வந்தீர்கள்?"

"பாண்டிய குமாரருக்குப் பட்டாபிஷேகம் நடத்தினோமே? அந்தப் பள்ளிப்படைக் கோபுரத்தில் இடிந்திருந்த பகுதியை அந்தப் புலியின் பேரில் தள்ளி விட்டுத் தப்பித்து வந்தோம்..."

"ஐயோ! பாவம்! கிழப் புலியைக்கூட நீங்கள் நேர் நின்று சண்டையிட்டு ஜயிக்க முடியவில்லை...!"

"ஆம், ராணி! ஒப்புக் கொள்கிறோம். அப்படியிருக்கும்போது இளம் புலியாகிய ஆதித்த கரிகாலனை நேருக்கு நேர் எதிர்ப்பது எப்படி? அதனாலேதான் தந்திர மந்திரங்களைக் கையாள வேண்டியிருக்கிறது. தேவி! இன்றிரவு தப்பினால் அப்புறம் நமக்குச் சந்தர்ப்பம் கிட்டப் போவதில்லை. சுந்தரசோழனையும் அருள்மொழி வர்மனையும் பற்றிச் செய்தி வந்து விட்டால், பிறகு ஆதித்த கரிகாலன் நம்மிடம் அகப்படப் போவதில்லை..." என்றான் ரவிதாஸன்.

"மந்திரவாதி! அவர்களைப் பற்றி என்ன? ஏதாவது நிச்சயமாகத் தெரியுமா?" என்று கேட்டாள் நந்தினி.

"இத்தனை நேரம் அவர்களுடைய ஆயுள் முடிந்திருக்கும், சந்தேகமில்லை..."

"நீயும் தேவராளனும் ஈழத்துக்குப் போனபோது இப்படிச் சொல்லி விட்டுத்தான் போனீர்கள்."

"அங்கே அந்த ஊமைப் பைத்தியம் ஓயாமல் எங்களைப் பின் தொடர்ந்து வந்து தொல்லை கொடுத்தது. அதனால்தான் முடியவில்லை..."

"வாணர் குலத்து வீரன் கடலில் மூழ்கி இறந்து விட்டதாகச் சொன்னீர்கள். அவனும் தப்பிப் பிழைத்து வந்து விட்டான்..."

"பள்ளிப்படைக் காட்டில் அவனை வேலை தீர்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. தாங்கள் தடுத்து விட்டீர்கள்."

"அதற்கு முக்கிய காரணம் இருப்பதாகச் சொன்னேன்..."

"அது என்ன முக்கிய காரணமோ தெரியாது. அவன் இங்கே வந்து ஆதித்த கரிகாலனை இரும்புக்கவசம் போல் பாதுகாத்து வருகிறான்."

"அதைப் பற்றி நீ சிறிதும் கவலைப்

பட வேண்டாம்."

"கவலைப்பட்டே தீர வேண்டியிருக்கிறது. இன்று இல்லாவிட்டால் என்றைக்கும் இல்லை. தேவி! என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

"இந்தச் சமயத்தில் நீங்கள் ஒருவரும் இங்கு வராதிருந்தாலே எனக்குப் பெரிய உதவியாயிருக்கும்..."

"அது ஒருநாளும் முடியாத காரியம்."

"என்னிடம் உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை..."

"நம்பிக்கை இருப்பதினால்தான் வந்திருக்கிறோம். சபதம் முடிந்த பிறகு தங்களைப் பத்திரமாக அழைத்துக்கொண்டு போவதற்காக வந்திருக்கிறோம். எதிர்பாராத தடங்கல் ஏதாவது ஏற்பட்டால் அதற்கும் தயாராயிருப்போம். எந்த நிமிஷமும் தாங்கள் எங்களை உதவிக்கு அழைக்கலாம்."

"நான் போட்டிருக்கும் திட்டத்தில் தடங்கல் எதுவும் ஏற்படாது. சபதம் முடிந்த பிறகு நான் உயிரோடிருக்கவும் விரும்பவில்லை."

"கூடவே கூடாது! தாங்கள் எங்களுடன் வந்தே தீர வேண்டும். இல்லையென்றால்..."

"மந்திரவாதி! சபதம் முடிந்த பிறகு ஒரு நிமிஷமும் நான் பெரிய பழுவேட்டரையர் வீட்டில் இருக்க மாட்டேன்..."

"அப்படியானால் நீங்கள் எங்களுடன் வந்து விடுங்கள்!"

"என்னை எப்படி அழைத்துக்கொண்டு போவீர்கள்?"

"இந்தச் சுரங்கப் பாதையின் முடிவில் ஐயனார் கோவில் இருக்கிறது. அதன் அருகில் உள்ள காட்டில் பழுவூர் ராணியின் பல்லக்கைத் தயாராக வைத்திருக்கிறோம். இடும்பன்காரி பல்லக்கைச் செப்பனிடுவதற்கென்று முன்னமே வெளியிலே கொண்டு வந்து விட்டான். வீர பாண்டியனின் தலையைக் கொய்தவனைப் பழி வாங்கிய தேவியை நாங்களே பல்லக்கில் வைத்துத் தூக்கிச் செல்வோம். பொழுது விடிவதற்குள் கொல்லி மலைக்குப் போய் விடுவோம்."

"நீங்கள் எத்தனை பேர் இந்த இடத்தில் இருக்கிறீர்கள்?"

"இங்கே நாலு பேர் இருக்கிறோம்!" என்று கூறி விட்டு ரவிதாஸன் மெதுவாகக் கையைத் தட்டினான்.

அந்த மண்டபத்தில் இருந்த பயங்கரமான செத்த மிருகங்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்தவர்கள் சிறிது வெளிப்பட்டு முகத்தைக் காட்டினார்கள்.

"பரமேசுவரன் எங்கே?" என்று நந்தினி கேட்டாள்.

"அவனை வெளியில் நிறுத்தியிருக்கிறேன். ஐயனார் கோவிலில் காளாமுகன் ஒருவன் நிஷ்டை செய்து கொண்டிருந்தான். அவனை அங்கிருந்து போகச் சொல்வது பெரிய தொல்லையாய்ப் போய்விட்டது. மறுபடியும் அவன் அங்கு வந்து விடாமல் பார்த்துக் கொள்ளும்படி தேவராளனைக் கோவில் வாசலில் நிறுத்திவிட்டு வந்திருக்கிறேன்..."

"காளாமுகனைப் பற்றி நமக்கு என்ன கவலை? மந்திரவாதி! பெரிய பழுவேட்டரையரைப் பற்றிய செய்தி தெரியுமா?" என்று நந்தினி கேட்டாள்.

ரவிதாஸன் சிறிது திடுக்கிட்டு, "என்ன செய்தி?" என்றான்.

"அவர் தஞ்சாவூருக்குப் பிரயாணப்பட்டுப் போனார் அல்லவா? வழியில் கொள்ளிடத்தைப் படகில் கடக்கும்போது புயல் அடித்துப் படகு கவிழ்ந்து விட்டதாம். பழுவேட்டரையர் கரையேறவில்லையென்றும், தண்ணீரில் முழுகிப் போய் விட்டதாகவும் சம்புவரையனுக்கு இன்று சாயங்காலம் செய்தி வந்திருக்கிறதாம்!"

"தெய்வமே! அவர் கதி அப்படியா ஆயிற்று? இத்தனை நேரம் தாங்கள் இந்த முக்கிய விவரத்தைப் பற்றிச் சொல்லவில்லையே?"

"அதை நான் நம்பவில்லை, மந்திரவாதி! பழுவேட்டரையர் கொள்ளிடத்தில் முழுகி இறந்திருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை."

"எனக்கும் அந்தச் செய்தியில் நம்பிக்கை இல்லை, ராணி!"

"அவர் கொள்ளிடத்தின் இக்கரைக்கு நீந்தி வந்திருந்தால் என்ன செய்கிறது? ஒருவேளை இன்றிரவு இங்கு வந்து விட்டால்...? இதைப் பற்றித் தான் சிறிது கவலைப்படுகிறேன்..."

"ராணி! அதைப் பற்றித் தங்களுக்குத்

கவலை வேண்டாம். இப்போது தான் எனக்கும் நினைவு வருகிறது. கொள்ளிடத்துக்கு அக்கரையில் தஞ்சாவூர்ச் சாலையில் ஆஜானுபாகுவான மனிதர் ஒருவரை நேற்றிரவு பார்த்தேன். ஆடை ஆபரணம் ஒன்றும் அவர் அணிந்திருக்கவில்லை. இருட்டாகவும் இருந்தபடியால் அடையாளம் தெரியவில்லை. இப்போது யோசித்தால், அந்த வழிப்போக்கர் ஒரு வேளை பெரிய பழுவேட்டரையராகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது!''

''அப்படியானால், நிச்சயமாக இன்றிரவு அவர் இங்கே வந்து விட மாட்டார் அல்லவா?''

''மாட்டவே மாட்டார்! அதைப் பற்றித் தாங்கள் தைரியமாக இருக்கலாம். இப்பொழுது எங்களுக்கு என்ன கட்டளையிடுகிறீர்கள்?''

''மந்திரவாதி! நீங்கள் இங்கேயே பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். என்னுடைய அறையில் என்ன நடப்பதாகத் தோன்றினாலும், எத்தனை பேருடைய பேச்சுக் குரல் கேட்டாலும் அவசரப்பட்டு உள்ளே வர வேண்டாம். வந்தால் காரியம் கெட்டுப் போகும். நான் குரல் கொடுத்த பிறகு நீங்கள் வந்து சேருங்கள்!''

''ராணி! தாங்கள் எப்படிக் குரல் கொடுப்பீர்கள்?''

''மந்திரவாதி! நான் கலகலவென்று



சிரித்துப் பல வருஷம் ஆயிற்று என்று தெரியும் அல்லவா? நான் சிரித்து நீ கேட்டேயிருக்க மாட்டாய்!"

"தேவி! ஒரே ஒரு சமயம் அந்தத் துஷ்ட வாலிபன் வந்தியத்தேவனுடன் பேசிக் கொண்டிருந்தபோது நீங்கள் சிரிக்கக் கேட்டேன்..."

"ஆகா! அதைக்கூட ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாயா? நல்லது! இன்றைக்கு நான் கலகலவென்று உரத்துச் சிரிக்கும் சத்தம் கேட்டால் நீங்கள் இரகசியக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வாருங்கள். காரியம் முடிந்து விட்டதற்கு அது அடையாளம். இப்போதும் வந்தியத்தேவனைப் பார்த்தே நான் சிரித்துக் கொண்டிருந்தாலும் இருப்பேன். அதைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்..."

"தேவி! தங்களுடைய உத்தேசம் என்னவென்பது ஒருவாறு இப்போது எனக்குத் துலங்குகிறது..."

"கொஞ்சம் பொறுத்திருந்தால், எல்லாம் துலாம்பரமாகிவிடும். எதிர்பாராத தடங்கல் ஏதாவது ஏற்பட்டு விட்டால், அப்போது, என் அழுகைக் குரல் கேட்கும். உடனே வந்து சேருங்கள்..."

"அப்படியே செய்வோம், ராணி! ஆனால் தங்கள் அழுகைக் குரலைக் கேட்க நான் விரும்பவில்லை. சிரிப்புக் குரலைக் கேட்கத்தான் விரும்புகிறேன்" என்றான் மந்திரவாதி ரவிதாஸன்.



முப்பத்து மூன்றாம் அத்தியாயம்

"ஐயோ! பிசாசு!"

அதே சமயத்தில் வந்தியத்தேவன் மிக்க மனச் சோர்வுடன் கடம்பூர் மாளிகையைச் சேர்ந்த நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அந்த நந்தவனம் மாளிகையின் வெளி மதில் சுவர் ஓரமாக அமைந்திருந்தது. இரவில் மலரும் புஷ்பங்கள் அப்போது தான் மடலவிழ்ந்து கொண்டிருந்தன. பன்னீர், பாரிஜாதம், மல்லிகை, முல்லை முதலிய மலர்களின் நறுமணத்தை ஐப்பசி மாதத்தின் வாடைக் காற்று அவன் பக்கமாகக் கொண்டு வீசியது. "ஆகா! இந்த நேரத்தில் பழையாறை அரண்மனை நந்தவனத்தில் நாம் இருக்கக் கூடாதா? அப்படியிருக்கும்போது திடீரென்று குந்தவை தேவியின் பாதச் சிலம்பு ஒலிக்கக் கூடாதா?" என்று அவன் மனம் எண்ணமிட்டது. "இங்கே வந்து இந்தக் கடம்பூர் அரண்மனையில் அடைபட்டுக் கிடக்கிறோமே? வெறி பிடித்த இளவரசரிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறோமே?" என்று நினைத்தான். ஆதித்த கரிகாலர் என்றுமில்லாத வண்ணம் அன்று மாலை அவன் மீது சீறி எரிந்து விழுந்ததும் "இனி இன்றைக்கு என் முகத்தில் விழிக்காதே! நாளைய பொழுது விடிந்தபிறகு உன்னைப் பற்றி என் முடிவைத் தெரிவிக்கிறேன்" என்று கூறியதும் அவன் மனத்தைப் புண்படுத்தியிருந்தன. ஒரு நாளுமில்லாத விதமாக அவர் இன்று கோபித்துக்கொண்டு விட்டார்! பாவம்! அவர் மீது குறைபட்டு என்ன பயன்? அவர் உள்ளம் அவ்விதமாகக் குழம்பி விட்டிருக்கிறது. அவர் நிலையை நினைத்துப் பார்க்கும்போது வந்தியத் தேவனுக்கு அவர் மீது பரிதாபமே உண்டாயிற்று.

அன்றெல்லாம் ஆதித்த கரிகாலரின் உன்மத்தம் உச்ச நிலையை அடைந்திருந்தது. உற்சாகமும் சோர்வும் கோபமும் குதூகலமும் சிநேகப்பான்மையும் கொடூரப் பகைமையும் மாறி மாறி அவரைப் பிடித்து ஆட்டி வைத்தன. அவரும் தம்மைச் சுற்றியிருந்தவர்களை அம்மாதிரி ஆட்டி வைத்துக்கொண்டிருந்தார். அடுத்த நிமிஷம் அவருடைய போக்கு எப்படியிருக்குமோ, என்ன செய்வாரோ என்று அருகிலிருந்தவர்கள் கதி கலங்கிக் கொண்டிருந்தார்கள்.

அன்றைக்குச் சூரியன் உதயமானதிலிருந்து வந்து கொண்டிருந்த செய்திகள் அவருடைய உன்மத்தத்தை அதிகமாக்க உதவி செய்து கொண்டிருந்தன.

சம்புவரையர் முதன்முதலாக அவரிடம் வந்து, திருக்கோவலூர் மலையமான் படை திரட்டிக் கொண்டு வருகிற செய்தியைத் தெரிவித்தார். அதைப் பற்றித் தமது ஆட்சேபத்தையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

"மலையமான் தொண்டு கிழவர்; வயது எண்பதுக்கு மேலாகிறது. அவர் வருவதைக் குறித்து உங்களுக்கு என்ன பயம்?" என்றார் இளவரசர்.

"ஐயா! கொல்லிமலைத் தலைவன் வல்வில் ஓரியின் வம்சத்தில் வந்தவர்கள் நாங்கள். பயம் என்றால் இன்னதென்றே அறியாதவர்கள். தாங்கள் இங்கு விஜயம் செய்திருப்பதை முன்னிட்டே தயங்குகிறேன், தாங்கள் மட்டும் அநுமதி கொடுத்தால்..."

"கிழவரோடு போர் புரிவதற்கு உடனே புறப்பட ஆயத்தமாயிருக்கிறீர்கள். அவ்வளவுதானே! சம்புவரையரே! என் பாட்டனைப் படையுடன் புறப்பட்டு வரும்படி நான்தான் செய்தி அனுப்பினேன்!"

"எதற்காக, இளவரசே?"

"நான் இங்கே உங்களிடம் தனியாக

அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன் அல்லவா? இங்கே இருக்கும்போது எனக்கு ஏதாவது நேர்ந்தால்..."

"கோமகனே! அப்படிப்பட்ட சந்தேகம் அணுவளவும் தங்கள் மனத்தில் இருந்தால், இந்தக் கணமே..."

"இங்கிருந்து என்னைக் கிளம்பி விடச் சொல்கிறீர்களாக்கும்!"

"ஐயா! இது தங்களுடைய இராஜ்யம்; இது தங்களுடைய அரண்மனை. இதன் உச்சியில் புலிக்கொடி பறக்கிறது. இங்கிருந்து தங்களைப் போகச் சொல்வதற்கு நான் யார்? தாங்கள் அநுமதி கொடுத்தால் நானும் என் குடும்பத்தாரும் இங்கிருந்து போய் விடுகிறோம். மிலாடுடையார் மலையமானை வரவழைத்து வைத்துக் கொண்டு தாங்கள் நிர்ப்பயமாக இங்கே இருக்கலாம்..."

"ஓகோ! வல்வில் ஓரியின் வம்சத்தில் பிறந்த நீங்கள் பயமறியாதவர்கள் என்றும் விஜயாலய சோழரின் குலத்தில் பிறந்த நான் பயங்கொள்ளி என்றும் சொல்லிக் காட்டுகிறீரா?"

"இளவரசரின் வைர நெஞ்சமும், வீர தீரமும் உலகம் அறிந்தவை. பன்னிரண்டாம் பிராயத்தில் தாங்கள் சேவூர்ப் போர்க்களத்தில் புகுந்து பகைவர்களைச் சின்னாபின்னம் செய்து வீராதி வீரன் என்று பெயர் பெற்றீர்கள். பதினெட்டாம் பிராயத்தில் மறுபடியும் போருக்கு வந்த வீர பாண்டியனைத் தொடர்ந்து துரத்திச் சென்று ஒளிந்திருந்த இடத்தில் அவனைக் கண்டுபிடித்து, அவன் சிரத்தைத் துணித்துக் கொண்டு வந்தீர்கள்..."

இதைக் கேட்ட ஆதித்த கரிகாலன் "தெரியும், ஐயா! தெரியும்! ஓடியவனைத் துரத்திய வீரப்புலி நான் என்றும், செத்துப் போன வீர பாண்டியனுடைய தலையை வெட்டிக் கொண்டு வந்தவனென்றும் நீங்கள் எல்லாரும் என்னைப் பரிகசித்துப் பேசுவது எனக்குத் தெரியும்; அந்தப் பழுவூர் மோகினிப் பேய் அத்தகைய வதந்திகளைக் கிளம்பி விட்டிருக்கிறாள் என்பதும் எனக்குத் தெரியும்!" என்று கூறிவிட்டுப் பயங்கரத் தொனியில் சிரித்தார்.

சம்புவரையருக்கு ஏன் இந்த வெறி கொண்ட இளவரசரிடம், பேச்சுக் கொடுத்தோம் என்று ஆகிவிட்டது.

"கோமகனே! நான் எது சொன்னாலும் தவறாகப் போய் விடுகிறது. தங்கள் உசிதம் எப்படியோ அப்படிச் செய்யுங்கள். நான் போய் வருகிறேன்."

"போய் வருவது சரிதான்; ஆனால் இந்தக் கோட்டையை விட்டுப் போகும் எண்ணத்தை மட்டும் விட்டு விடுங்கள். இந்த அரண்மனையில் நான்கு மாதங்களுக்கு முன்னால் நடந்த சதியாலோசனையைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ளும் வரையில் நானும் இந்த இடத்தை விட்டுப் போகப் போவதில்லை; நீங்கள் போவதற்கும் விடப் போவதில்லை!" என்றார் ஆதித்த கரிகாலர்.

சம்புவரையரின் உதடுகள் துடித்தன. உடம்பு நடுங்கியது. அவருடைய கண்களில் கண்ணீர் ததும்பியது.

இந்த நிலையைப் பக்கத்தில் இருந்த பார்த்திபேந்திரன் பார்த்தான்.

"கோமகனே! சோழ குலத்தவர் வீரத்திற்குப் புகழ் பெற்றது போலவே நீதிக்கும் பெயர் பெற்றவர்கள். இந்தப் பெரியவருக்குத் தாங்கள் நீதி செய்யவில்லை. தங்கள் வார்த்தைகளினால் அவருடைய மனத்தைப் புண்படுத்துகிறீர்கள். இங்கு நடந்த சிற்றரசர் கூட்டத்தைப் பற்றிச் சம்புவரையர் முன்னமே தக்க சமாதானம் சொல்லித் தாங்களும் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். தாங்கள் இராஜ்யம் வேண்டாம் என்று கொண்டிருப்பதாலும், தஞ்சாவூருக்குப் போகவே மறுப்பதாலும், சிற்றரசர்கள் சோழ ராஜ்யத்தின் நன்மையைக் கருதி அடுத்த பட்டத்துக்கு யார் என்பதைப் பற்றி யோசித்தார்கள். தாங்கள் இராஜ்ய பாரத்தை வகிக்க இசைந்தால், அவர்கள் ஏன் வேறு யோசனை செய்ய வேண்டும்? உலகமெல்லாம் வீரப் புகழ் பரப்பிய ஆதித்த கரிகாலர் இருக்கும்போது, போர்க்களத்தையே பார்த்தறியாத மதுராந்தகத் தேவனைப் பற்றி இவர்கள் கனவிலும் கருதுவார்களா...?

ஆதித்த கரிகாலர் குறுக்கிட்டு, "ஆமாம், ஆமாம்! நான் உயிரோடிருக்கும்போது இன்னொருவன் சோழ சிங்காதனம் ஏறுவது இயலாத காரியந்தான். அதற்காகத்

தான் என்னை வேலை தீர்த்து விடப் பார்க்கிறீர்கள்!'' என்று கூறிவிட்டு மறுபடியும் ஹா ஹா ஹாவென்று உரத்துச் சிரித்தார்.

"பார்த்திபேந்திரா! நீயும் இவர்களுடன் சேர்ந்து கொண்டதை நான் அறியவில்லையென்றா நினைத்தாய்? கந்தமாறனும் நீயும் அன்று நாம் வேட்டைக்குப் போனபோது என் பின்னாலேயே வேலைக் குறி பார்த்துக்கொண்டு வந்தது எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்? என் உண்மை நண்பனாகிய இந்த வந்தியத்தேவன் மட்டும் தெய்வாதீனமாக இங்கு வந்து சேர்ந்திராவிட்டால், இதற்குள் என்னை யமனுலகத்துக்கு அனுப்பியிருக்க மாட்டீர்களா?'' என்று சொன்னார்.

பார்த்திபேந்திரன் வந்தியத்தேவனைக் கண்ணாலேயே கொன்று விடுகிறவனைப் போல் பார்த்துவிட்டு, "ஐயா! இந்தப் பாதகன் ஏதேதோ சொல்லித் தங்கள் மனத்தைக் கெடுத்துவிட்டான். தங்களுக்கு நான் மனத்தினாலும் துரோகம் எண்ணியதாக இவன் நிரூபித்து விட்டால், இந்தக் கணமே...'' என்றான்.

"அப்பனே! உன் மனத்தில் எண்ணிய துரோகத்தை யார் எப்படி நிரூபிக்க முடியும்? நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்! நீயும் கந்தமாறனும் பழுவூர் இளையராணியின் பேச்சைக் கேட்டு மயங்கித்தானே என்னை இங்கே அழைத்து வர இவ்வளவு பிரயத்தனம் செய்தீர்கள்? இதை இல்லையென்று நீ மறுக்க முடியுமா?''

"அதை மறுக்கவில்லை, இளவரசே! மறுக்க வேண்டிய அவசியமும் இல்லை. பழுவூர் ராணி மிக நல்ல நோக்கத்துடனே இந்தக் காரியத்தில் தலையிட்டிருக்கிறார் என்பதை நான் நிச்சயமாய் அறிவேன். தங்களை இங்கு தருவித்துக் கந்தமாறனுடைய சகோதரியைத் தங்களுக்கு மணம் புரிவித்துச் சோழ நாட்டில் எவ்வித உட்கலகமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே அவருடைய நோக்கம். தங்களுடைய சிரஸில் சோழ குலத்து மணி மகுடத்தை அணிந்து பார்ப்பதைக் காட்டிலும் எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரக் கூடியது வேறு ஒன்றுமில்லை. என்னை யாராவது குறை கூறினாலும் பொறுத்துக் கொள்வேன்; பழுவூர் ராணியைப் பற்றி நிந்தை சொன்னால், அவனை அக்கணமே இந்த வாளுக்கு இரையாக்குவேன்!'' என்று பார்த்திபேந்திரன் வந்தியத்தேவனைப் பார்த்துக்கொண்டே கூறி, அதே சமயத்தில் வாளையும் உறையிலிருந்து உருவினான்.

"ஆகா! என் வீர நண்பா! வாளை உறையிலே போட்டு வை! நல்ல சமயம் வரும்போது சொல்கிறேன். அப்போது வெளியில் எடுக்கலாம். வந்தியத்தேவன் பழுவூர் ராணியைப் பற்றி ஒன்றும் குறை கூறவில்லை. அவனும் உங்களைப் போலத்தான் மதி மயங்கி நிற்கிறான். உண்மையில், பழுவூர் இளையராணி என் உடன் பிறந்த சகோதரி என்று சத்தியம் செய்து கொண்டிருக்கிறான். அதைச் சொல்வதற்காகவே ஓடோடியும் வந்தான். உன் பேரில் அவன் வேறு குற்றம் சாட்டுகிறான். என் சகோதரனை நீ ஈழ நாட்டிலிருந்து உன் கப்பலில் அழைத்துக் கொண்டு வந்து வழியில் கடலில் தள்ளி மூழ்க அடித்து விட்டாய் என்று அவன் சொல்கிறானே? அதற்கு உன் பதில் என்ன?'' என்றார் ஆதித்த கரிகாலர்.

அந்தச் சமயத்தில், "நான் அதற்குப் பதில் சொல்கிறேன்!'' என்று கூறிக் கொண்டே கந்தமாறன் அங்கு வந்தான்.

"கோமகனே! மிகச் சந்தோஷமாக செய்தி கொண்டு வந்திருக்கிறேன். சின்ன இளவரசர் கடலில் முழுகிச் சாகவில்லை. பொன்னியின் செல்வர் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் இத்தனை நாளும் மறைந்து இருந்து வந்தாராம். புயல் அடித்துக் கடல் பொங்கி நாகைப்பட்டினம் நகரில் புகுந்தபோது அவர் வெளிப்பட நேர்ந்ததாம். லட்சக்கணக்கான ஜனங்கள் புடை சூழ இப்போது தஞ்சாவூரை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறாராம்!'' என்று கந்தமாறன் குதூகலத்துடன் கூறினான்.

இந்தச் செய்தியினால் கரிகாலர் உற்சாகமடைவார் என்று எதிர்பார்த்ததில் அவன் பெரும் ஏமாற்றமடைந்தான். கரிகாலருடைய குரோதம் இப்போது வேறு திசையில் திரும்பியது.

"என்ன? என்ன? அருள்மொழி தஞ்



சாவூரை நோக்கிப் போகிறானா? லட்சக் கணக்கான ஜனங்கள் புடை சூழப் போகி றானா? எதற்காக? வல்லவரையா! நீ என்ன சொன்னாய்? இப்போது நடப்ப தென்ன? என்னுடைய கருத்தை அறிந்து கொள்ளும் வரையில் அருள்மொழி நாகைப்பட்டினத்திலேயே இருப்பான் என்று சொன்னாய் அல்லவா? இப்போது ஏன் தஞ்சாவூரை நோக்கிப் போகிறான்...?"

வந்தியத்தேவன் குறுக்கிட்டுப் பேசினான்:- "ஐயா! இளையபிராட்டி அவ்வாறுதான் உறுதியாகக் கூறினார். அதற்குப் பின்னர் என்ன காரணம் நேர்ந்ததோ தெரியவில்லை. நான் வேணுமானால் போய்..."

"ஆகா! நீயும் போய் விடுகிறேன் என்கிறாயே? நல்லது, நல்லது! எல்லாருமே என் விரோதிகள் ஆகிவிட்டீர்கள். உங்கள் சூழ்ச்சியெல்லாம் எனக்குத் தெரிகிறது. அருள்மொழி ஏன் தஞ்சாவூரை நோக்கிப் போகிறான் என்று எனக்குத் தெரியும். அது அந்தக் கொடும்பாளூர்ப் பெரிய வேளானின் சூழ்ச்சி. அவனுடைய தம்பி மகளை என் சகோதரன் கழுத்தில் கட்டி அவர்களைச் சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்க வேண்டுமென்பது அக் கிழவனுடைய விருப்பம். கொடும்பாளூர் வேளானும் தென்திசைப் படையுடன் தஞ்சையை நோக்கி வருவதாகக் கேள்விப்பட்டேன். என் சகோதரி இளையபிராட்டியும் இந்தச் சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கிறாள். ஆமாம்; நீயுங்கூடத்தான்..."

வந்தியத்தேவன் "இளவரசே! மன்னியுங்கள்! பொன்னியின் செல்வருக்காவது இளையபிராட்டிக்காவது அத்தகைய எண்ணம் சிறிதும் கிடையாது. இது சத்தியம். நான் வேணுமானால் போய் உண்மையை அறிந்து வருகிறேன்!" என்றான்.

"ஆமாம்; நீயும் போய் அவர்களுடைய சூழ்ச்சியில் கலந்து கொள்கிறேன் என்கிறாய்! கந்தமாறா! இவனை உடனே பிடித்து... இந்த அரண்மனையில் சுரங்கச் சிறை ஏதாவது இருந்தால் அதில் அடைத்து விடு!" என்றதும் கந்தமாறன் வெகு குதூகலத்துடன் வந்தியத்தேவனை அணுகினான்.

உடனே கரிகாலர் தமது கட்டளையை மாற்றிக்கொண்டு, "வேண்டாம், வேண்டாம்! சோழர் குலத்தவர்கள் நீதி தவறாதவர்கள். குற்றம் நிச்சயமாகிற வரையில் தண்டிக்க மாட்டார்கள். வல்லவரையா! இனிமேல் இன்று முழுவதும் என் முகத்தில் விழிக்காதே! அதுதான் உனக்குத் தண்டனை! உன்னைத் தஞ்சைக்கு அனுப்புகிறேனா, சிறைக்கு அனுப்புகிறேனா என்பதைப் பற்றி நாளைக்குச் சொல்லுகிறேன்! போ! போ! இனி ஒரு கணமும் இங்கே நில்லாதே! போய்விடு" என்றார்.

கரிகாலருடைய முகத்தை அப்போது வந்தியத்தேவன் பார்த்தான். அவருடைய கடைக்கண்ணின் சமிக்ஞை "இதெல்லாம் விளையாட்டு!" என்று குறிப்பிடுவது போல் தோன்றியது. ஆயினும் உன்மத்தம் கொண்டிருந்த இளவரசர் பக்கத்தில் இல்லாமலிருப்பதே நல்லது என்று ஒரு நொடியில் தீர்மானித்துக் கொண்டு வந்தியத்தேவன் "ஐயா! தங்கள் சித்தம் என் பாக்கியம்!" என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

பின்னர் அன்று பிற்பகலில் இளவரசரின் கட்டளையின் பேரில் சம்புவரையரும் பார்த்திபேந்திரனும் திருக்கோவலூர்க் கிழாரை எதிர்கொண்டு அழைத்து வருவதற்காகப் போனார்கள் என்று வல்லவரையன் வந்தியத்தேவன் தெரிந்துகொண்டான்.

இளவரசரும் கந்தமாறனும் நெடுநேரம் அந்தரங்கமாக வார்த்தையாடிக் கொண்டிருந்ததையும் அறிந்தான்.

இந்தச் சம்பவங்களெல்லாம் வந்தியத்தேவனுக்கு மிக்க மனச் சோர்வை உண்டாக்கியிருந்தன. மறுநாள் காலையில் இளவரசர் தனக்கு என்ன கட்டளை பிறப்பிப்பார்? தஞ்சாவூருக்குப் போகும்படி பணிப்பாரா? வழியில் பழையாறைக்குப் போகும்படியும் சொல்வாரா? சொன்னால் எவ்வளவு நன்றாயிருக்கும்...? இந்தக் கடம்பூர் மாளிகை வாழ்வு அவனுக்குப் பிடிக்கவே இல்லை. இங்கே யாரும் உற்சாகமாக இருப்பதில்லை. இங்கே உள்ளவர்கள் எல்லாரும் எப்போதும் எதையோ பறிகொடுத்தவர்களைப் போலிருக்கிறார்கள். அஸ்தமித்து விட்டால் இந்த மாளிகை மனிதர்கள் வாழும் மாளிகையாகவே தோன்றவில்லை. பேய் பிசாசுகள் குடிகொண்டிருக்கும் பாழடைந்த மாளிகையாகத் தோன்றுகிறது. இங்கேயிருந்து

எப்போது எப்படிக் கிளம்பப் போகிறோம்...?

இப்படி வந்தியத்தேவன் எண்ணமிட்டபோது ஒரு பெண்ணின் குரல், "ஐயோ! பிசாசு!'' என்று அலறியது அவன் காதில் விழுந்தது.

(தொடரும்)



காஞ்சி மு



• சிந்து நதி





• லடாக் பகுதியில் விமானப் படையினருடன்

''ஹனுமான் புத்திமான்; பலசாலி; ஹனுமானுக்கு ராமாயணத்தில் முக்கிய மான பங்கு உண்டு. நீங்கள் எல்லோரும் அந்த ராமபக்த ஹனுமான் போல தேசபக்த ஹனுமான்கள். நீங்கள் இங்கே கண் விழித்து இரவு, பகலாக பாதுகாப்புப் பணியில் இருப்பதால்தான், இந்த தேசத்து மக்கள், தங்கள் பாதுகாப்பு பற்றிய கவலை இல்லா மல் இருக்கிறார்கள். உங்களுடைய சேவை யும் தியாகமும் அபாரமானது; உங்கள் அனைவருக்கும் என் ஆசிர்வாதம்'' - இப்படி உரையாற்றியவர் காஞ்சி மடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்தான்.

இவரது உரையை மெய்சிலிர்த்தபடி கேட்டவர்கள் இந்திய விமானப் படை வீரர்கள்.

நம் நாட்டில் உள்ள நதிகளில் கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி ஆகிய ஏழும் புனித மானவை. இவற்றில் நீராடுவது புண்ணியம். ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், சிந்து தவிர மற்ற ஆறு புண்ணிய நதிகளிலும் நீராடியவர். சிந்து நதியிலும் புனித நீராட கடந்த இருபதாம் தேதி பிற்பகலில் பயணம் புறப்பட்டார்.

சென்னையிலிருந்து புறப்பட்ட தனி விமானம், பதினெட்டு சீட்கள் கொண் டது. சண்டிகர் சென்று அங்கு இரவு தங்கி விட்டு,

காஷ்மீர்!

மறுநாள்காலை ஆறு மணிக்குப் பயணம். சண்டிகரின் விமானப் படைத் தளத்தை அடைந்த பின், எல்லாம் விமானப் படை வசம்தான் அங்கே.

பிரம்மாண்டமான விமானம் காத்துக் கொண்டிருந்தது. உள்ளே ராணுவத்தினருக்குத் தேவையான ஏராளமான சாமான்கள் அடங்கிய பாக்கிங்குகள். விமானத்தின் உள்ளே கீழேயும், மேலேயுமாக இரண்டு அடுக்குகளில்




• சிந்து நதிக்கரையில்



• ஜெயந்திர சரஸ்வதி

ராணுவத்தினர்.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானி அமரும் 'காக்பிட்' பகுதிக்கே சென்றுவிட்டார் காஞ்சிப் பெரியவர். விமானியிடம் நிறைய கேள்விகள் கேட்டு, விஷயங்கள் தெரிந்துகொண்டார். சுமார் ஒரு மணி நேரத்தில் காஷ்மீரின் ஒரு பகுதியான லடாக்கின் முக்கிய ராணுவத் தளமான 'லே' விமானத் தளத்தில் விமானம் தரையிறங்கியது.



• சண்டிகர் ஐயப்பன் கோயிலில்...

அங்கிருந்து ஏழெட்டு நிமிட கார் பயணம், 'சிந்து வியூ' என்கிற விருந்தினர் மாளிகை, அதனை ஒட்டி அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது சிந்து நதி. ரொம்ப அகல மில்லை. 'கொஞ்சம் ஆழம் அதிகம்' என்று தகவல் சொன்ன விமானப் படையினர் காஞ்சிப் பெரியவர் புனித நீராட சௌகரியமாய், தற்காலிகமாக தடுப்புக் கம்பிகள் போட்டு, படித்துறை அமைத்திருந்தார்கள்.

லடாக் பற்றி விவரித்தார்கள் விமானப் படை அதிகாரிகள். வருடத்தில் ஏழு மாதங்கள் இந்தியாவுடனான தரை வழிப் போக்குவரத்துத் தடைபட்டுவிடும். கடல் மட்டத்திலிருந்து சுமார் பதினோராயிரம் அடி, உயரம். தரை மட்டத்தை விட, காற்றில் ஆக்சிஜனின் அளவு சுமார் இருபது சதவீதம் குறைவு. நவம்பர் முதல் மார்ச் வரை ரொம்ப, ரொம்ப குளிர் இருக்கும். அப்போது மைனஸ் இருபது, இருபத்தைந்து என்று தட்ப வெப்பம் குறைந்துவிடும். மணற்பாங்கான மலைப் பகுதி என்பதால், எவ்வளவு குளிர் என்றாலும் பனி படர்ந்த மலையைக் காண முடியாது.

"நிதானமாக இருங்கள். வேகமாக நடப்பதைக் கூடத் தவிர்த்து விடுங்கள்" என்றார்கள். காரணம், ஆக்சிஜன் குறைவு என்பதால், சீக்கிரமே களைப்பு ஏற்பட்டு விடும். இங்கே வரும் ராணுவ வீரர்கள் கூட, முதல் இரண்டு நாட்களுக்கு முழு ரெஸ்ட்தான். அதன்பின் இரண்டு நாட்களுக்கு ஒரு கி.மீ போல நடக்க அனுமதிக்கப்படுவார்கள். அடுத்த இரண்டு நாட்களுக்கு மலைப் பகுதியில் ஏறி, இறங்குதல். இப்படி படிப் படியாக பயிற்சியளித்து, பழக்கப்படுத்தப்

ராமருக்குப் புதுவீடு!

சண்டிகரில் தங்கி இருந்தபோது ஹரியானா முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலாவின் வீட்டுக்கும் விஜயம் செய்தார் ஸ்ரீ ஜெயேந்திரர். காலில் அடிபட்டிருப்பதால் நடக்க சிரமப்படும் சௌதாலா, "நீங்கள் வந்திருப்பதன் காரணமாக, புனிதத்தன்மை இழந்திருந்த இந்த வீடு, பவித்திரமாகிவிட்டது" என்றார். அதற்கு, ஸ்ரீ ஜெயேந்திரர் "இது உங்கள் சொந்த வீடா? அரசாங்க வீடா?" என்று கேட்க, சௌதாலா, "இது அரசாங்க வீடு" என்றார். "அப்படியானால், அப்படித்தான் இருக்கும்" என்று ஸ்ரீ ஜெயேந்திரர் அர்த்தத்துடன் சொன்னவுடன், சௌதாலாவே சிரித்துவிட்டார்.

தன் முகாமுக்குத் திரும்பிய காஞ்சிப் பெரியவரிடம் ஒரு பத்திரிகையாளர் : "சௌதாலா ஒன்னாம் நெம்பர் ஊழல் அரசியல்வாதி. அவர் வீட்டுக்கு நீங்கள் போனது எப்படிச் சரியாகும்?" என்று காரசாரமாய்க் கேட்க, "தலைமைச் செயலகத்தில்தான் அவர் ஒரு முதலமைச்சர். வீட்டிலோ ஒரு மனிதர். அவர் எப்படிப்பட்ட மனிதரானாலும், உடல் நலம் குன்றி இருக்கும்போது என்னிடம் பேச விரும்பினால், அவரது வீடு தேடிச் சென்று பேசுவதில் தவறு எதுவுமில்லை. அதுமட்டுமின்றி ஊழல்காரர்களை மக்கள் ஆதரிக்கக்கூடாது என்று பிரசாரம் செய்து, அவர்களை தோற்கச் செய்வது பத்திரிகைகளின் பணி! ஒட்டு இல்லாத சன்யாசியின் வேலை இல்லை" என பதிலளித்தார்.

இன்னொரு பத்திரிகையாளர், "அயோத்திப் பிரச்னைக்கு என்ன தீர்வு?" என்று கேட்டபோது, "குடிசையில் வாழும் ஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது, அரசாங்கங்களின் குடிசைமாற்று வாரியத்தின் பணி! இப்போது அயோத்தியில் ராமர் சாதாரண குடிலில்தான் இருக்கிறார். அவருக்கென்று புதிய வீடு கட்டித்தர வேண்டியது அரசின் கடமை என நினைக்கிறேன்!"

- மௌலி

பட்ட பின்னர்தான் ராணுவ உடற்பயிற்சி மற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்'' என்றார் ஒரு ராணுவ அதிகாரி.

'லே' இருபதாயிரம் மக்கள் வாழும் பகுதி. லடாக்கின் ஜனத்தொகை இரண்டு லட்சம். 'லே'வுக்கு மிக அருகில் உள்ள சென்சிடிவ் ஆன மற்ற ராணுவப் பகுதிகள்: கார்கிலும், சியாச்சினும். மக்கள் தொகையில் சுமார் இருபது சதவீதம் புத்த மதத்தினர். மீதி முஸ்லிம் கள். லடாக் பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை, ராணுவத்தினர்



• சண்டிகர் சிவன் கோயிலில் பூஜை

சந்திக்கும் சவால்கள் ஆகியவை பற்றி நுணுக்க மாய்க் கேட்டுத் தெரிந்து கொண் டார் காஞ்சிப் பெரியவர்.

மணி சுமார் பத்தரை, ஸ்ரீஜெயேந்திரர், சிந்து நதியில் இறங்கி மூன்று முறை முழுகி எழுந்து புனித நீராடினார். தெளிவான தண்ணீர். அனை வரும் ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர என முழக்கமிட்டனர்.

தொடர்ந்து, சிந்து நதிக்குப் பிரத்யேக பூஜை செய்தார் பெரியவர். குங்கும அர்ச் சனையுடன், தங்கம் மற்றும் விலையுயர்ந்த மணி வகைகள் சிந்து நதியில் அர்ப்பணிக் கப்பட்டன.

பூஜை முடிந்த பின், அவர் அளித்த சிறப்புச் செய்தி :

"சிந்து நதி, தற்போதுள்ள சீனாவில் தோன்றி, பாரத நாட்டின் வழியாக ஓடி, பாகிஸ்தானில் நுழைந்து, கராச்சியில் கடலில் சங்கமமாகிறது. காலப்போக்கில், சரித்திரத்தில் மாற்றங்கள்பல நிகழ்ந்துவிட் டாலும், நதியின் போக்கில் மாற்றம் ஏது மில்லை. இது போன்ற புண்ணிய நதிகளை நினைத்துக் கொண்டு, வீட்டில் நீராடினால் சிறிது புண்ணியம். ஆனால், அவற்றிலேயே நீராடுவது ரொம்ப விசேஷம். அதுவும் இந்த சிந்து நதியிலேயே, நீராடுவது மிக மிக விசே ஷம். அதுதான் இன்று நிகழ்ந்திருக்கிறது."

சிந்து நதியில் நீராடிய அனு பவம் எப்படி இருந்தது?

தண்ணீர் சலசலத்து ஓடினா லும், கால் பட்டவுடன் சில் ரென்றது. அதில் அமர்ந்து கொண்டு, மூன்று முறை மூழ்கி எழுந்த போது, பனிக்கட்டிப் பாறை மீது புரட்டி எடுத்தாற்போல ஒரு அனுபவம். நீராடி முடித்து, கரை ஏறின பின்னரும்கூட, உடல் கிடுகிடு வென்று நடுங்கிக் கொண்டிருந்தது. நன்கு துடைத்துக் கொண்ட பின், வெயில் சுரீரென்று உறைத்தது. கசக்கிப் போட்ட துணிகள், கால் மணி நேரத்தில் உலர்ந்து போகும் படியான சுட்டெரிக்கும் வெயில்.

அங்கே கூடியிருந்த ராணுவத்தினர் மத்தியில் காஞ்சிப் பெரியவர் அருள்உரை வழங்கினார். குங்குமம், கல்கண்டு பிரசாத மும் கொடுத்தார். மறுபடி ஒரு மணி நேர விமானப் பயணம். எங்களுடன் விமானத் தில் வந்தவர்களில் இரு ராணுவ வீரர்களுக் குத் எதிரிகளுடனான மோதலில் தலையில் அடி. சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டனர். விமானத்தில் கூரைப் பகுதியிலிருந்து தொங் கிய சலைன் வாட்டர் புட்டி: அவர்களை விமான அதிர்வு பாதிக்காதபடி பிடித்துக் கொண்டு பக்கத்தில் தலா இரண்டு பேர். உடன் வந்த ஒருவர், பெரியவரிடமிருந்து குங்குமப் பிரசாதம் வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்தார். விமானம் தரையிறங் கியபோது அதிலிருந்து இரண்டு ராணுவ வீரர்களது உடல்களும் இறக்கப்பட்டன என்பது தனிச் சோகம்!

கட்டுரை, படங்கள்: **எஸ். சந்திரமௌலி**



ஆங்கிலமே அருகில்

ஒன்றை அல்லது ஒருவரை நாம் விரும்புவதைத் தெரிவிக்க 'like' என்ற வார்த்தை பயன்படுகிறது.

'I like coffee' என்றால் எனக்கு காப்பி பிடிக்கும். அதாவது காப்பியை நான் விரும்புகிறேன். 'I like you very much. உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும். இந்த 'like' என்ற வார்த்தைக்கு வேறு சில அர்த்தங்களும் உண்டு.

ஒவ்வொன்றாக உதாரணத்துடன் சொல்கிறேன். கவனியுங்கள்.

'like' என்ற வார்த்தைக்கு 'போல, மாதிரி' என்ற அர்த்தம் உண்டு.

He likes his father very much என்றால், 'அவன் தனது தந்தையை மிகவும் விரும்புகிறான்' என்று அர்த்தம்.

ஆனால் He is like his father என்றால் அவன் தனது தந்தையைப் போலவே இருக்கிறான் என்று அர்த்தம்.

குணத்தில் அல்லது உருவ ஒற்றுமையில் ஒரே மாதிரி இருப்பதைத் தெரிவிக்க 'like' என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம்.

அம்மாவைப் போலவே அந்தப் பெண்ணும் இருக்கிறாள் என்பதை 'She is like her mother' என்று



வி. ராஜகோபாலன்

லை

சொல்லலாம்.

'என்னப்பா, உனக்கு டீ order பண்ணட்டுமா? இல்லே காபியே order பண்ணலாமா?' என்று உங்கள் நண்பர் உங்களிடம் கேட்கிறார்.

உன் இஷ்டம் போல எதை வேண்டுமானாலும் order செய், என்பதை 'as you like' என்று சொல்லலாம். 'உனது விருப்பம் போல' என்பது இதன் அர்த்தம். இதையே 'as you wish' என்றும் சொல்லலாம்.

'Wish' என்ற வார்த்தைக்கு 'விருப்பம்' என்று அர்த்தம்.

'உன்னுடைய காரைப் போலவே என் மாமாவிடமும் ஒரு கார்



இருக்கிறது' என்பதை

"My uncle has a car like yours" என்று சொல்லலாம்.

'இதற்கு ஈடாக வேறு எதுவும் இல்லை' எனக் குறிப்பிடும்போது 'there is nothing like' என்ற வார்த்தைத் தொடரை use பண்ணலாம்.

'There is nothing like a nice cup of tea'.

நல்ல தேனீருக்கு இணையாக வேறு எதுவும் இல்லை என்பது இதன் அர்த்தம்.

புதுசா வந்திருக்கற மானேஜரை meet பண்ணினாயா, ஆள் எப்படி? (எந்த மாதிரி ஆளு) என விசாரிக்கும்போது Have you met the new manager? what is he like? என்று கேளுங்கள்.

'என்னதான் இருந்தாலும் நீ அதுபோல பேசியிருந்திருக்கக் கூடாது'

அதெல்லாம் இருக்கட்டும். நீ இதுபோல செஞ்சிருக்கக் கூடாது என்று நாம் அடிக்கடி மற்றவர்களுக்கு உபதேசம் செய்வதுண்டு.

'இது போல'

'அது போல' என்பதை like this, like that என்று சொல்லலாம்.

What ever it may be, you should not have talked like that.

என்னதான் இருந்தாலும் நீ அதுபோல பேசியிருக்கக் கூடாது.

What ever it may be you should not have talked like this. என்னதான் இருந்தாலும் நீ இது போல பேசியிருக்கக் கூடாது என்று மற்றவர்களுக்கு உபதேசம் செய்யலாம்.

'like' என்ற வார்த்தையின் மற்ற உபயோகங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.



மூப்பனார்-70

மூப்பனாரின் எழுபதாவது பிறந்த நாளையொட்டி 'மக்கள் தலைவர் மூப்பனார்' என்ற மலரை (அதைப் புத்தகம் என்கிறார்கள்! விலை ரூபாய் 150) தொகுத்து வெளியிட்டிருக்கிறார் த.மா.கா செய்தி தொடர்பாளர் ஏ. கோபண்ணா. அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள் என்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த 128 பிரமுகர்களிடம் மூப்பனார் பற்றிய கட்டுரைகளை வாங்கி வழ, வழா தாளில் வண்ணமயமாக வெளியிட்டிருக்கிறார். 'மலரி'லிருந்து சில 'இதழ்'கள்.

● விதம், விதமான சூட்கேஸ்"களை வாங்கிப் பயன்படுத்துவார். சூட்கேஸில் பொருட்களை அழகாக அடுக்கி வைத்திருப்பார். எதையுமே ஒருவிதமான அழகுணர்ச்சியுடன் செய்வார். தமது அறையில் உள்ள பொருட்களைத் திருப்பி அடுக்கிக் கொண்டே இருப்பார். இருக்கும் அறை சுத்தமாக இருக்க வேண்டும்.

● சில மாதங்களுக்கு முன்புவரை செயின் ஸ்மோக்கர். 555 கிளாஸிக் சிகரெட்டுகள் மீது ரொம்பக் காதல். சமீபகாலமாக வெற்றிலை, பாக்குக்கும் சிகரெட்டுக்கும் டாக்டர்கள் தடை விதித்து விட்டார்கள். இப்போதெல்லாம் வாய் மணக்க வெறும் ஏலக்காய், கிராம்புதான்.

● பிளாக் காபிதான் பிடிக்கும். காலையில் இட்லி, ரொட்டி, ஆம்லெட், பகலில் சாப்பாடு, இரவில் இட்லி, தோசை (சின்ன ஊத்தப்பம்) அரிசி உப்புமா, பூரி மிளகாய்ப் பொடி மிகவும் பிடிக்கும். அசைவ உணவை விரும்பிச் சாப்பிடுவார். ஏரியில் பிடித்த வரால் மீன், சுறா புட்டு, இறால் ஆகியவை மிகவும் பிடித்தமானவை. கோவை ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் மைசூர் பாகு மிகவும் பிடிக்கும்.

● குளிப்பது வெந்நீர். ஆனால் சோப், பவுடர் பயன்படுத்த மாட்டார். எண்ணெய் தேய்த்து குளிக்க மாட்டார். வாசனை பொருட்களைப் பயன்படுத்துவது கிடையாது.

● காலையில் ஐந்து மணிக்கு எழுந்து விடுவார். ஆனால் இரவு ஒரு மணிக்கு முன்பு தூங்குவதில்லை. காலையில் எல்லா தமிழ், ஆங்கில தினசரிகளையும், சில வார இதழ்களையும் படித்து விடுவார். இரவில் நிறைய புத்தகம் படிப்பார்.

● நெற்றியில் குங்குமம் இட்டுக் கொள்வது மிகவும் பிடிக்கும். விபூதி, குங்குமம் பிரசாதம் யார் கொடுத்தாலும் செருப்பை கழற்றி விட்டுத்தான் வாங்குவார்.

● விதவிதமான மூக்கு கண்ணாடிகள் வாங்கி வைத்துக் கொள்வார். கண்ணாடி கூடு இல்லாமல் பயன்படுத்துவார். புதுதில்லி லாரன்ஸ் மேயோவில் அவரே சென்று மூக்கு கண்ணாடிகள் வாங்குவார்.

● தில்லியில் இருந்தால் வழிபடச் செல்வது மலைமந்திர் (சுப்பிரமணியசாமி திருக்கோயில்) குறிப்பாக கிருத்திகை நாளில் தவற மாட்டார்.

● புதுதில்லியில் இவர் காரை தாமே ஓட்டிக் கொண்டு செல்லுவார். காரை மிக நன்றாக, வேகமாக ஓட்டுவார். நம்மூர் அரசியல் தலைவர்களிடம் இல்லாத பழக்கம் இது. தில்லியில் தாமே காரோட்டும் தென்னிந்தியத் தலைவர் இவர் ஒருவர்தான்.

● வாரிசு அரசியலில் இவருக்கு நம்பிக்கை இல்லை. யாரையும் தம் வாரிசாக முன் நிறுத்தியது இல்லை. இவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்ளை நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக்க முயற்சித்தது இல்லை. அதை விரும்பவும் மாட்டார். எல்லாம் ஒரு அளவோடு இருக்க வேண்டும் என்று விரும்புவார்.

— ரமா



16

ஸ்பைடர் லில்லி யின் காலம் மறுபடியும் பூத்து விட்டது. பார்த்திப னும் பிரகாஷும், காலையில் மீனாட்சி பஸ்ஸில் கரூர் செல்ல ஆரம்பித்தார்கள். பார்த்திபன் பள்ள பட்டி பிரிவில் பஸ் ஏறுவான், பிரகாஷ் சின்னதாராபுரத்தில். கரூர் பஸ் ஸ்டாண்ட் வர மணி ஒன்பது போல் ஆகிவிடும். அங் கிருந்து 'தாந்தோணி மலை' டவுன் பஸ் ஏறி கல்லூரிக்குப் போக வேண்டும். ஒன்பது மணியின் கரூர் பஸ் ஸ்டாண்ட், மாணவ மாணவிகள் குழுமி கதம்பப் பூக்களின் வனம் போல் இருக்கும். பல்வேறு பள்ளிகள், அரசு கலைக் கல்லூரியின் மாணவ மாணவிகள் இது தவிர பெண்களுக்கேயான கல்லூரியான 'சாரதா' மாணவிகள், நன்கு வெளிறிய வயலட் நிறத்தில் 'சாரதா'வின் சீருடை. அரசு கலைக் கல்லூரிக்குச் சீருடை கட்டுப்பாடு இல்லை. வழியெங்கும் நிறுத்தங் கள் உள்ளது பேருந்து. மனங்கவர்ந்தவர்கள்

க.சீ. சிவகுமார்

ஏறுகிறார்கள் அவ்வப்போது. பார்த்திபனைக் குறி வைக்கிறோம் என்கிற பிரக்ஞையோடு அல்லது பிரக்ஞையில்லாமல் பல பெண்கள் இந்தப் பேருந்திலும் வழியிலும் வகுப்பிலும் எதிர்படுகிறார்கள்.

சின்னதாராபுரம், எல்லமேடு, அணைப்பாளையம், தும்பிவாடி என பல நிலைகளில் பெண்கள் பஸ் ஏறினாலும் இப்போது காச்சினாம்பட்டி பிரிவில் பஸ் ஏறுகிற பெண்தான் பார்த்திபனைக் கவர்கிறாள். இந்தக் கவர்ச்சியின் பெயர் காதலல்ல என்றிருக்கலாம். இதே கவர்ச்சி தொடர்ந்தால் அது காதலாகலாம். அவளது உடை 'சாரதா' கல்லூரி என தெரிவிக்கிறது. கூந்தல் வளைவில் எழிற்கோல சரிவில் அவளது கர்வம் அழிகிறது. மாநிறத்திற்கு சற்றுக் கூடுதல் நிறம் குவிந்திருக்கும் போது சிறிய தாய் காணும் உதடுகள் சிரிக்கும் போது நீர்ச்சறுக்கைப் போல ஈரப் பளபளப்புடன் தோன்றுகின்றன. ஒரு தோழியின் அழைப்பில் 'மகேஸ்வரி' என தெரிகிறது. மனசுக்குள் 'மகி' என்று அழைத்துப் பார்த்தான். கண்கள் செவ்வரியோடி உள்ளன. பெரிய வாய் பேதமை செய்யும் கண்கள். நெற்றியில் பாம்பு பொட்டு வைத்திருந்தாள். இந்தப் பொட்டினை எங்கேயோ பார்த்திருக்கிறோம் பார்த்திருக்கிறோம் என்று யோசித்து கடைசியில் சப்தஸ்வரங்களில் நடுவராய் வந்த அனிதா ரத்னத்தின் நினைவு வந்து விட்டது. (இரும்பவும் அனிதா!)

மகேஸ்வரியுடன் பேசினால் தேவலை என்று நினைத்தான். அவள் கல்லூரி மாறி பார்த்திபனின் காலேஜுக்கு வந்தால்தான் ஆயிற்று. அதே தடத்தில் பெரியநாதம் பாளையத்தில் வேறொரு பெண் பஸ் ஏறுகிறாள் விஜயலட்சுமி. அதே பஸ்ஸில் ஏறுகிற அவள் பார்த்திபனின் அதே வகுப்பில் படித்தாள். மூன்றாம் நாள் பயணத் திற்குப் பார்த்திபனை பார்த்துப் புன்னகை செய்தாள். புன்னகைத்த விஷயத்தை பிரகாஷிடம் சொன்ன போது, ''ஐயோ டேய் உரிச்சுருவானுகடா'' என்றான். விஜயலட்சுமியின் ஊர் ஓர் அலாதியான கிராமமாய் இருந்தது. அடிக்கடி விழாக்கள் நடத்தும் தோற்றம் அதற்கு. கூடவே ஒவ்வொரு விழாவின் போதும் ஏதாவது ஒரு வெளியூர் இளைஞனை ரத்தம் வர அடித்துப் புரட்டுவது என்பதை ஊர்க் கொள்கையாக வைத்திருந்தார்கள்.

டெம்போவிலிருந்து இறங்கி வேடிக்கை பார்த்த வெளியூர் பொம்பளை, "செருப்பில்லாதவனெல்லாம் அந்த ஊர்க்காரங்க, அடையாளம் பார்த்து சாத்துங்கடா'' என அடித்து விரட்டியது. ஊரில் ஒருநாள் வெளியூர்க்காரனின் அனாதைப் பிணம் கிடந்தது என பெரியநாதம்பாளையம் சரித்திரப் பிரசித்தி பெற்று விளங்கியது.



வெளியூர் ஒற்றையர்களை அடித்து நொறுக்குவதற்குப் பள்ளிக்கூடத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் காலி மனை ஒன்று இருக்கிறது. அந்த தொடக்கப் பள்ளியில் காலையில் குழந்தைகள் 'இந்தியர் அனை வரும் சகோதரர்கள்' என உறுதி அளித்தனர்.

இந்த ஊரில் இருந்து வந்து காதலிக்கிற பெண், காதலனின் உயிருக்கு உலை வைக் கிறாள் என்றே அர்த்தப்படும். விஜயலட் சுமிக்கு காதல் இருக்கிறது. பார்த்திபன் மேல். கொஞ்சம் நெடு நெடு என்று ஒல்லி யாக இருந்தாள் விஜயலட்சுமி. எலுமிச்சை நிறத்தில் சூரியப் பருக்கள் விரவிய முகத் தோடு தாவணியிலும் புடவையிலுமாக அவள் கல்லூரிக்கு வந்தாள்.

பார்த்திபனோடு கல்லூரியிலிருந்து தாந்தோணி மலை பெருமாள் கோவிலுக்குக் காலாற நடந்து போக வேண்டும் என நினைத்தாள்.

புதிதாய்ப் பார்த்தவுடன் தோன்றுகிற உணர்ச்சி என்ன? ஒருவன் அல்லது ஒருத்தி யின் குணநலன் தெரியாது; குணக்கேடு தெரியாது; ருசி தெரியாது; பசி தெரியாது; ஆனாலும் பிடித்துப் போய் விடுகிறது. ஃபஸ்ட் சைட் இல்லாவிட்டாலும் இரண்டா வது அல்லது மூன்றாவது 'சைட்'டிலாவது காதல் அல்லது காதலுக்கான மூல வஸ்துக்களில் ஒன்று தோன்றிவிடுகிறது. விஜயலட்சுமி விஷயத்தில் வேப்பமரத்தின் கொடுப்பினை எவ்வளவு என்று தெரிய வில்லை. கல்லூரியின் மைதான வளாகம் வேப்ப மரங்கள் நிறைந்தது. இங்கு தோன்றுகிற ஒவ்வொரு காதல் ஜோடியும் முதல் மூன்று மாதங்களுக்குள் தங்களுக் கான வேப்பமரத்தை ஆர்ஜிதம் அல்லது ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும். 'அது அவர்கள் மரத்தடி' என உறுதியாகி விட்டால் யாரும் பிறகு குறுக்கிடமாட் டார்கள். அவர்களுக்கான போதி மரமாய் அதன் கீழ் அவர்கள் ஞானமோ காதலோ பெறலாம். காதலை இழந்து ஞானம் பெற்றவர்கள் அனேகம். மரத்தின் தண்டுகளில் நிறைய இனிஷியல்களும் பெயர்களும் தனித்தனியாகவும், கூட்டு இணையாகவும் பொறிக்கப்பட்டிருக் கின்றன. இவர்கள் மன்னர் காலத்தில் பிறந்திருந்தால் கல்வெட்டுகளை நிறுவி யிருப்பார்கள் என்ற நம்பிக்கையை தரும் விதமாய் மர எழுத்து முயற்சி. இந்தப் பெயர் பொறிக்கும் வைபவத்தில் நாலணா காசுகள் பெருமளவு உதவின. நாலணா காசை தியேட்டர் கவுண்டரில் துளை போட, மரங்கிறுக்க என்றே அரசு தயாரித்து வருகின்றது. மற்றபடி பின்ன அளவுகளில் பஸ் டிக்கெட் வாங்கவும் பயன்படுகின் றது.

ஒரே பேருந்து நிலையத்தில் பஸ் இறங்கி ஒரே கல்லூரிக்குப் போகிறவர்கள் ஒரே டவுன் பஸ்ஸை பிடிக்க தொண்ணூறு விழுக்காடு வாய்ப்பிருக்கிறது. விஜயலட்சுமி, பிரகாஷோடும் பார்த்திபனோடும் பய ணித்து வந்தாள். டவுன் பஸ் நோக்கி பார்த்திபன் வந்து கொண்டிருந்த தருணத்



தில் விஜயலட்சுமி, "நீங்க ஸ்கூல் எங்கே முடிச்சீங்க?" என்றாள்.

"சின்னதாராபுரம்."

முதல் நாள் உரையாடல் இந்த அளவில் முடிந்தது.

பெண்களை எதிர்கொள்வதில் பெரும் சிக்கல் பிரகாஷுக்கும், பார்த்திபனுக்கும் இருந்தது. குறிப்பாக முதல் ஆண்டு படிக் கும் பெண்களை. 'நீ' என்று அழைப்பதா 'நீங்க' என்று அழைப்பதா என்கின்ற குழப்பம். சில பெண்கள் ஐம்பது கிலோ வுக்கும் அதிகபட்ச தாஜ்மகாலாகவும், 'நீங்க' என்று அழைக்க நியாயம் உள்ளவர் போல இருந்தார்கள். பத்தாம் வகுப்பு படிக்கும் தோற்றமுடையவர்கள் வரும் போதுதான் அவர்களை 'நீங்க' என்றழைக்க சிரமமாய் இருந்தது. செகண்ட் இயர், தேர்ட் இயர் அக்காக்கள் அதிகம் பேசுவதில்லை. இனி பேசுவார்களாய் இருக்கும்.

இரண்டாம் மூன்றாம் வருடம் படிக்கும் மாணவர்கள், 'ராக்கிங்' செய்து கொண் டிருந்தார்கள். அவர்களுக்கு ஃபஸ்ட் இயர்

பையன்கள் மீது கவனமும், பெண்கள் மீது சலனமும் இருந்தது. 'ராக்கிங்' செய்பவர்கள் 'ராக்கிங்'கிலாவது மதுரை, சென்னை போன்ற மாணவர் லெவலுக்கோ, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் லெவலுக்கோ முன்னேறி விட வேண்டும் என பெருமளவு முயற்சித்துப் பரிதாபமாகத் தோற்றுக் கொண்டிருந்தார்கள். 'ராக்கிங்' காட்சிகள் வந்த சினிமாக்களும் போதுமான அளவு கற்பனையைத் தூண்டவில்லை.

பார்த்திபனை ஒருவன் மண்டி போட்ட வாறு தேசிய கீதம் பாடச் சொன்னான். தேசப்பற்றுமிக்க இந்தக் காரியம் எப்படி 'ராக்கிங்' ஆகும்? பிரகாஷை ஒருவன் காதல் கடிதம் எழுதச் சொன்னான்.

> **''அடுத்த ஜன்மத்துலயாவது தலைவி வீட்டுல நான் நாயா பிறக்க ஆசைப்படறேன்னு அந்த முன்னாள் அமைச்சர் உணர்ச்சி பொங்க சொல்லி யிருக்காரே?''**
>
> **''சும்மாவா! நாய்க்காக மட்டும் மாசத் துக்கு மூணு லட்சம் செலவு பண்றாங் களே!''**
>
> **— சீர்காழி ரேவதி**

'உன் குளத்தில் நான் தூண்டிலா? தூண்டில் புழுவா?' என ஆரம்பித்து அவன் எழுதிய கடிதம் மூத்த மாணவர்களை மண்டியிட வைத்தது. இதன் மூலம். பிரகாஷ் அடுத்த மூன்று வருடத்திற்கும் இரு பதுக்கும் குறையாத காதற் கடிதங்களை பினாமியாக எழுத வேண்டிய அபாயக் கட்டுப்பாட்டிற்கு ஆளானான்.

இன்னொரு நாள் வகுப்பில் விஜய லட்சுமி, பார்த்திபனிடம் "இந்த சர்ட் உங் களுக்கு சூப்பரா இருக்கு" என்றாள். ஒரு சந்தோஷ புளகாங்கிதத்துடன் அந்தப் பாராட்டை ஏற்று வாங்கினான். கைமாறாக, 'உங்களுக்குக் கனகாம்பரம் நல்லாயிருக்கு' எனச் சொல்லலாமா என யோசித்தான். சொல்லவில்லை. கனகாம்பரம் அழகாய்த் தெரிய ரொம்ப நாள் பிடிக்கும்.

விஜயலட்சுமியின் தீர்மானம்தான் என்ன என்பது புரிந்தது போலவும் இருந் தது. புரியாத மாதிரியும் இருந்தது.

"அடுத்த வாரம் நாங்க சினிமாவுக்குப் போறோம்."

நாங்கள் என்பது பிரமீளா தலைமை யிலான ஐவர் அணி. "நீங்களும் வர்றீங் களா?" என்கிற அளவுக்கு பிரகாஷையும் பார்த்திபனையும் அருட்செல்வனையும் கேட்டுமிருக்கிறாள் பிரமீளா. அது நிச்சயம் காதல் இல்லை என்று மெழுகுவர்த்தி தீபம் கற்பூரம் என எரியும் பொருட்கள் எதையும் அணைத்து சத்தியம் வைக்கலாம். ஆயின் விஜயலட்சுமி அவ்விதத்தில் இல்லை.

வகுப்பில் மதிய உணவு இடைவேளை அரட்டைகளில் சூரியனின் கீழ் உள்ள அனைத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருந் தார்கள். அவரவர் அறிவுக்கும் தடைகளுக்கும் தக்கபடி - சூரியனையும், பாடத்தையும் தவிர.

பாடங்கள் எப்போதும் சூரியனுக்குக் கீழே வருவதில்லை.

ஸ்கூலில் அமர்ந்திருந்த மாதிரியான ஒரு இடத்தில்தான் கல்லூரி வகுப்பிலும் பார்த் திபன். பிம்பம் கொள்ளுவதற்காக கடி காரத்தை உபயோகிக்கும் எண்ணம் பார்த் திபனுக்குத் தோன்றவில்லை.

தோடு சரிசெய்யும் பாவனைகள் ஏது மின்றி மிக நேரிடையாக அவ்வப்போது பார்த்திபனை, விஜயலட்சுமி பார்க்கிறாள். அவளது மண் வாகில் உரமும் தைரியமும் செயலும் செல்வாக்கும் அப்படி.

பூத்த ஸ்பைடர் லில்லி காய்ந்து விட் டது போல் தண்டு சருகாகிக் கொண்டிருக் கிறது.

கல்லூரி முடிந்து வெளிவருகிறபோது களைத்து, விஜயலட்சுமி சோர்வின் அழ கோடு தெரிகிறாள். சூரிய பருக்களின் மீது சபேஸியஸ் எண்ணெய் படிந்து வடிந்து மினுக்கும் இந்நிலையில் மாலை வெயில் மஞ்சளின் ஒரவஞ்சனையில் சோபை மங்கிக் கொண்டிருக்கும் பேரெழில் ஓவியம் போல் அவள். அதிக நாள் தாக்குப்பிடிக்க மாட்டாள். வெடித்து வெளிவரும் தருணம் எல்லா முட்டைக்கும் இருக்கிறது. அந்த மத்தியானம் பார்த்திபன் வெளியே சென்று டீ குடித்துவிட்டு வரும்போது விஜயலட்சுமி கூப்பிட்டாள். ''உங்ககிட்டத் தனியா பேசணும்."

"சரி போவோம்" என்றவாறு வேப்ப மரத்தடி பார்த்து நடந்தான். அவன் இலக்கு வைத்த அதே மரத்தைத்தான் முன் எதிர் பார்ப்பில் அவளும் தேர்ந்திருந்தாள். யாரும் சொல்லிக் கொள்ளாமல் இப்படி எல்லாம்

நடக்கிறது. ரதிமதனின் சாம்ராஜ்ஜியத்தில் கணக்குப் புத்தகங்கள் உண்டா தெரியவில்லை. ரொம்ப நேரம் ஏதேதோ பேசினாள். அவனும் பதில் கூறிக் கொண்டிருந்தான். எல்லாமே இனிய சூனியங்கள். ஸ்வீட் நத்திங்ஸ்.

வேப்பமர நிழலிலிருந்து ஒரு காக்கையின் நிழல் கடந்து போகிறது.

"பார்த்தி உங்கள எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு."

"................"

"காதலிக்கிறேன்."

காக்கையின் நிழல் இப்போது வேறெங்கோ போய் விட்டிருந்தது. வண்ண நிலவும் வானவில்லும் பெண்ணுருவில் வந்து நிற்கிறபோது, பதிலென்ன சொல்வது இப்போது. உலகில் மகத்தான கேள்விகள் தான் விடையற்று உலவுகின்றன. சிலுவையடிக்கு முந்தைய தீர்ப்புச் சபையில் 'உண்மைதான் என்ன' என்ற கேள்வி உலவியது போல் பார்த்திபனின் மனம் குழம்பிக் கொண்டிருந்தது. விஜயலட்சுமிக்குப் பதில் சொல்லும் முன் ஆகி வந்தது அவனுக்கு ஒரு கேள்வி.

அந்தக் கேள்விக்கு முன் மனத்தின் குழப்பப் பெருந்திரையில் ஸ்பைடர் லில்லி. அனிதா, லசீம் ஆட்டம், வித்யா, தங்கராஜின் சைக்கிள், அமராவதி, கோதாவரி, வெப்பிலி மேடு, சுட்ட பஜ்ஜிகள், காத் திருப்புகள், கடிகார பிம்பம், கரிச்சுவர் எழுத்து, தீக்குச்சி வெளிச்சத்தில் உன்னையும் ஏமாற்றிட்டா, கொடுமுடியில் எஸ்.ஐ., தேவதாஸ், அன்வர், டெய்சி லீலா, குமாரசாமி, மீனாட்சி பஸ்ஸில் காச்சனாம்பட்டி பிரிவில் ஏறும் மகி, பரமத்தி ஸ்கூல் கிரவுண்டில் நல்ல வெயிலில் 'உலகம் எல்லோருக்காகவும்தான்' என்ற ரவி, ...முன்பின் சிதறிய அடுக்கில், போன வாரக் கனவு போல மங்கல் ஞாபகத்தில் வந்து தீண்டியது. குனிந்து ஒரு கல்லை எடுத்து கீழே போட்டான். "விஜயலட்சுமி வாழ்க்கை இவ்வளவுதான்." அவன் எதுவுமே புரியாமல் அவனைப் பார்த்த போது பதில் கூறச் சிரமமான கேள்வியைக் கேட்க ஆரம்பித்தான்.

"காதல்னா என்ன?"

(முற்றும்)



ஜிகினா ஆட்டம்!

இரவு. அந்தக் கிராமத்தின் மொத்த ஜனங்களும் வட்டமாய்க் குழுமியிருக்க தொடங்குகிறது ஆட்டம். ஜிகினா உடைகள் மூடிய உடலோடு, நாதஸ்வரம் மற்றும் மிருதங்கத்திலிருந்து வரும் தாளத்திற்கு ஏற்ப வளைந்து நெளிந்து ஆடுகிறார்கள் அந்தக் குமரிகள் தலையில் கரகத்தோடு.

ஆடிமுடித்த அடுத்த நொடி, ஏராளமான விசில் சத்தம். பொக்கைவாய் பெரிசுகள்கூட ஜீவனற்றத் தங்கள் கைகளைத் தூக்கி தட்டுகிறார்கள்.

"இதுதான் எங்கள் வெற்றி. ஆபாசமாக பார்க்கப்படும் இந்தக் கரகாட்டத்தை, ஒரு கலையாகப் பார்க்கிறோம் நாங்கள். அதனால்தான் அதை ஜீவனோடு செயல்படுத்த முடிகிறது'' என்கிறார்கள் அந்தக் குமரிகளான விஜித்ராவும் ஜெகதாம்பாளும்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி புதுப்பட்டியைச் சேர்ந்த இந்த சகோதரிகள் எம்.ஏ. வரை படித்திருக்கிறார்கள்.

"எங்கம்மா கலைமாமணி கல்யாணி தான் எங்கள் குரு. நாங்க கரகாட்டத்துக்கு வர்றதுல அவங்களுக்கு ஆரம்பத்துல இஷ்டம் இல்ல. வேற ஏதாவது வேலை பார்க்கணும்னுதான் ஆசை. ஆனா கரகாட்டத்து மேல எங்களையறியாமலேயே ஒரு ஈர்ப்பு வந்துட்டுது. இதுல ஏன் சாதிக்கக் கூடாதுன்னு தோணிச்சு. ரெண்டு பேரும் அம்மாட்ட சொன்னோம். எங்களோட வைராக்கியம் அவங்களை இளக வச்சுது. ஆட்டம் படிச்சோம்'' என்று சொல்லும் இவர்கள் கரகாட்டத்தைத் தங்களது முழு நேரத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் தற்போது.

"வர்ற வீட்டுக்காரர் எங்களைக் கரகாட்டம் ஆட அனுமதி தந்தாதான் கல்யாணமே. இன்னும் இனிமையா, வித்தியாசமா எப்படியெல்லாம் கரகாட்டத்தை வளர்க்கலாம் என்பதுதான் எங்களோட இப்போதைய பேச்சு மூச்செல்லாம்'' என்கிறார்கள். இந்த சகோதரிகளுக்கு, சிலம்பம், கத்தி சண்டையெல்லாம் அத்துபடியாம்!

— கி. சிங்காரவடிவேல்.

தரமான ஜாதிகற்கள் கிடைக்கும்

5th Anniversary Sale



- முத்து, பவளம், குந்தன்,
- பிறந்த நாள் ராசி கற்கள்,
- ஜெய்பூர் மாலைகள்,
- அமெரிக்கன் டைமண்ட் நகைகள்,
- Oxidised Jewellery
- Coral Flower sets
- Gold Wax Jewellery
- Hyderabad Gold Foil Beads
- Imported Beads in all colours
- Jade, Ruby, Emerald & Blue Sapphire-Necklace sets

இவை அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்

உங்கள் வாழ்க்கையில் எதிர்காலம் வளம் பெற!

அதிர்ஷ்ட கற்கள் அணிவதன் மூலம் தீர்வு பெறுவீர்.

[illegible] ரூ. 101/-. [illegible] US 10 $ [illegible] ரூ. 45/- [illegible] ரூ. 400/- D.D or M.O. [illegible] K.V. Narayana [illegible]

ரூ 1000க்கு மேல்
நகை வாங்குவோர்க்கு
பஞ்சலோக கொலுசு
அல்லது Coral Flower Studs
இலவசம்

Offer
10% to 20%
Discount till Diwali

பாரம்பரியம்மிக்க கைராசியான ஸ்தாபனம்

NARAYANA PEARLS, GEMS & JEWELS

"SUDHAS PARADISE" 62, Pondy Bazaar, (Opp. Mays's Plaza),
Below Karur Vysya Bank, T. Nagar, Chennai - 600 017.
Tel : 432 2644, 433 1060. • Sundays also open (11 am to 4 pm)

அதிர்ஷ்ட கல் அணிந்து பயனடைவீர்.

★ மரகதம் ★ வைரம் ★ முத்து ★ கனக புஷ்பராகம்

★ கோமேதகம் ★ நீலம் ★ வைடூரியம் ★ பவளம் ★ மாணிக்கம்

ONLINE

வட்டமேஜை

அந்தோ பரிதாபம்!

தவறாக எழுத வேண்டாம்!

✉ அமெரிக்காவில் தம்மை ஒரு ஆர்.எஸ்.எஸ். தொண்டன் என பிரதமர் கூறியதில் தவறோ, வியப்போ ஏதுமில்லை. நாட்டுப் பற்றையும், சேவா மனப்பான்மையையும், நல் ஒழுக்கத்தையும் புகட்டும் புனிதப் பள்ளி ஆர்.எஸ்.எஸ். மதங்களைக் கடந்த மனித நேயம் மிக்க அமைப்பு. உயர்ந்த கல்லூரிகளில் படித்தவர்கள் பின்னாளில் தாங்கள் அந்தக் கல்லூரியின் மாணவன் என தலை நிமிர்த்திச் சொல்வதைப் போலதான் பிரதமர் தாமும் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் என்று கூறிக் கொண்டார். தனது கடமைகளை அது வீட்டுக்கோ, நாட்டுக்கோ - யாரையும் எதிர்பார்க்காமல் சுயமாகவே செய்பவன்தான் சுயம்சேவக். தயை செய்து இனியாவது ஆர்.எஸ்.எஸ்.ஸைப் பற்றித் தவறாக எழுத வேண்டாம்.

தூத்துக்குடி, கே. சுதர்ஷன்

புதியமுகம்!

✉ ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஆர்.எஸ்.எஸ். பற்றி வாய் திறக்காத வாஜ்பாய், அமெரிக்கா போய்ச் சேர்ந்ததும் புதிய முகத்தைக் காட்டிய விஷயம் ஏற்படுத்தியிருக்கும் ஆச்சர்யத்தை தலையங்கமும் உறுதிப்படுத்துகிறது.

மயிலாடுதுறை, ரஜினி ராம்கி

பாராட்டுக்குரியவர்!

✉ 'நாட்டியம்' என்னும் அற்புதக் கலையை மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகளுக்கு ஈடுபாட்டுடன் சொல்லித் தரும் அம்பிகா காமேசுவர் உண்மையிலேயே பாராட்டுக்குரியவர். வளர்க அவரது சேவை.

மதுரை, என்.பாலகிருஷ்ணன்



✉ வீரப்பனை பிடிக்க தாங்கள் போட்ட காமெடி நாடகத்தை, படித்து, சிரித்து, களித்தோம். கடைசியில் வீரப்பனைப் பிடிக்க, தேவாரத்தையும், சுப்பிரமணிய சுவாமியையும் அனுப்பியது மிகப் பெரிய ஜோக்.

திருவண்ணாமலை, ஸ்ரீநிவாஸ்

இன்னும் விளக்கமாக...!

✉ புகழுக்குப் புகழ் சேர்க்கும் கிராஃபிக்ஸ் என்கிற தலைப்பில் எடிட் பாயிண்ட் மீடியா கிராஃபிக்ஸ் பிரிவு ஆலோசகர் ஹரிஷ் அளித்த பேட்டியைப் படித்தேன். சூப்பர் இம்போஸ், டிஸால்வ் கம்பாசிட்டிங், டிஜிட்டல் குனோவிங், அனிமேஷன் போன்ற சினிமாத்துறை சம்பந்தப்பட்ட தொழில் நுட்பங்களைப் பற்றி அறிய முடிந்தது. இன்னும் கொஞ்சம் விளக்கமாகக் கூறியிருந்தால் முழு திருப்தி ஏற்பட்டிருக்கும்.

லால்குடி, இராஜேந்திரன்

அருமை!

✉ பெ.நாயகியின் 'இரண்டாம் பாகம்' சிறுகதை இன்றைய காலகட்டத்தில் தனிமனித எண்ணவோட்டங்களின் அருமையான பிரதிபலிப்பு! பிரசுரித்த 'கல்கி'க்கு நன்றி!

தஞ்சாவூர், ராகவ், மகேஷ்

பரிதாபம்!

✉ சரத்குமாரிடம் தாங்கள் வினவிய 'ஒரு கோடி ரூபாய் பரிசு சூதாட்டம் இல்லையா?' என்ற வினாவெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். முதலில் தினம் ஒரு கோடியையோ அல்லது வாரம் ஒரு கோடி ரூபாயையோ யாருக்கும் அளித்துவிடப் போவதில்லை. "கோடீஸ்வரன்" என்று நிகழ்ச்சி பெயரை வைத்துக் கொண்டு தினம் சில ஆயிரங்களை மட்டுமே செலவழித்து நன்றாக விளம்பர வருமானம் ஈட்டப் போகிறது. பார்க்கும் பொது ஜனத்தின் நிலை. வழக்கம் போல் அந்தோ பரிதாபம்தான்.

பூனாம்பாளையம், ஆர்.பி. ஜெயச்சந்திரன்

பண்பாடும் பாடகர்!


✉ பார்வையற்றோர் நடத்திய இசை நிகழ்ச்சியில், 'முடியாது போனால் கூட வருவேன்' என்று கூறியதன் மூலம் தான் ஒரு 'பண்' பாடும் பாடகன் மட்டுமல்ல பண்பட்ட மனிதரும்கூட என்பதை நிரூபித்துள்ளார் எஸ்பிபி!

பொன்மலை, ஆர்.பிரகாஷ்

திண்ணை பெஞ்சில் நாலைந்து பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர் மட்டும் சோர்ந்துபோய், ஒடுங்கியபடி படுத்திருந்தார்.

டாக்டர் ஐயா, கையிலிருந்த ஈரத்தை வெள்ளை மேல்துண்டால் துடைத்துக் கொண்டே தம் பழைய நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டார்.

"உடம்பு குணமாயிட்டுது, டாக்டர் ஐயா. அதைச் சொல்லிட்டுப் போவலாம்னுதான் வந்தேன்!'' என்றார் கந்தசாமி.



"அதுக்காகவா இவ்வளவு தூரம் வந்தீங்க? ஊட்டுலயே இருந்திருக்கக் கூடாது?" என்று அன்புடன் கடிந்து கொண்டார் டாக்டர் ஐயா. அவர் பேசும்போது அவர் அணிந்திருந்த, மெல்லிய கம்பி போன்ற ஃபிரேமில் ஆன மூக்குக் கண்ணாடி, மேலும் கீழும் மெதுவாகக் குதித்துக் குதித்து ஆடியது.

"அங்க யாரு சுருண்டு படுத்திருக்கறது?'' என்று வலது கையை உயர்த்திக் கண்ணுக்கு மேல் பிடித்துக் கொண்டு கேட்டார்.

"செம்பான், டாக்டர் ஐயா. சளி, இருமலு, காய்ச்சல்னு ரெண்டு நாளா சுருண்டு சுருண்டு படுத்திடறான்..."

டாக்டர் ஐயா அவன் அருகே குனிந்து நாடியைப் பிடித்துப் பார்த்தார். "பாரங்காதி கஷாயம் தரேன். எல்லாம் சரியாப்பூடும்."

டாக்டர் ஐயா மெதுவாக நடந்து போய், மூடாமலே இருந்த பழைய அலமாரி ஒன்றிலிருந்து, ஒரு பாட்டிலை எடுத்து வந்து பழைய செய்தித்தாள் ஒன்றைக் கிழித்து, அதில் வைத்துச் சுருட்டி, மேலும் கீழும் அதிகமாய் இருந்த தாளைச் சுருட்டி மடித்துவிட்டுக் கொடுத்தார்.

உள்ளேயிருந்து ஏதோ குரல் வந்த மாதிரி இருந்தது.

"இப்ப வரேன்!" என்று எழுந்து கொண்டார் டாக்டர் ஐயா. மெதுவாக நடந்து உள்ளே போனார். எங்கே விழுந்து விடுவோமோ என்று பயந்தபடி அவர் நடப்பது மாதிரி இருந்தது.

டாக்டர் ஐயா அதிக உயரமில்லை. அதிகப் பருமனும் இல்லை. உள்ளூர் சலவைக்காரர் வெளுத்த வெள்ளைச் சட்டையும்,

சாருகேசி



டாக்டர் ஐயா

வேட்டியும்தான். பெரும்பாலான நாட்களில், அதில் இஸ்திரி போட்ட மடிப்போ அடையாளமோ தெரியாது. தோய்த்து வெறுமனே மடித்த மாதிரிதான் இருக்கும்.

உள்ளே போன டாக்டர் ஐயா, பத்து நிமிடம் கழித்துத்தான் திண்ணைக்கு வந்தார். மேல்துண்டால் அவர் கண்களைத் துடைத்துக் கொண்டே வந்தாற் போலிருந்தது.

"ஆரு, பெருமாள் சாமியா?" என்று மெதுவாக விசாரித்தார் டாக்டர் ஐயா, நாற்காலியில் மறுபடி வந்து அமர்ந்தவுடன்.

"ஆமா டாக்டர் ஐயா, நாந்தான்!" என்றார் பெருமாள்சாமி.

"இன்னும் போகலியா? மருந்து குடுத்திட்டேன்ல?"

பெருமாள்சாமி கூனிக் குறுகின மாதிரி உடலை வளைத்துத் தலையைக் குனிந்து கொண்டார். "ஊட்டுல ஒரு குந்துமணி நெல் இல்லைய்யா. சாப்புடலே. நேத்திக்கும்... இன்னிக்கும்..."

டாக்டர் அதிர்ந்து போன மாதிரி நாற்காலியில் உட்கார்ந்தார். மேசை இழுப்பறையைத் திறந்து அதில் இருந்த பத்து ரூபாய் நோட்டு ஒன்றை மடிப்பு நீக்கி நீட்டினார் பெருமாள்சாமியிடம்.

"இன்னிக்கு இதை வச்சுக்குங்க. அரிசி வாங்கி, மோர் சாதமாவது சாப்பிடுங்க. வெறும் வயிறா இருக்காதீங்க!"

பெருமாள்சாமியின் கை நடுங்கியது. பத்து ரூபாய்த்தாளை வாங்கத் தயங்கியது.

"நாளைக்கே எதானும் வரும்படி வரும். வாங்கிக்குங்க... என்னிக்கும் இப்பிடியேவா

உட்டுடுவான் மேல இருக்கறவன்? கபிலர் பாட்டு ஒண்ணு சொல்றேன்.

கண் நுழையாக் காட்டில் கருங்கல்
தவளைக்கும்,
உண்ணும்படி அறிந்து ஊட்டுபவர் -
நண்ணும் நமக்கும் படி அளப்பார்;
நாரி ஓர் பாகர் தமக்குத் தொழில்தான்
என்னே?

போங்க. தைரியமாப் போய் வாங்க!''

பெருமாள்சாமி இறங்கிப் போகும்வரை டாக்டர் ஐயா எதுவும் பேசவே இல்லை.

மேலெல்லாம் சொறிச்சல் என்று சொல்லிக் கொண்டு வந்து நின்ற தம்புவுக்கு கண்டூகர கஷாய சூர்ணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு மறுபடி நாற்காலியில் வந்து அமர்ந்தார்.

"டாக்டர் ஐயா வைத்தியராப் போவ வேண்ணா, தமிழ்ப் பண்டிதராத்தான் போயி ருப்பீக!" என்றார் சிவஞானம். எனக்கு ஐயா பேச்சைக் கொஞ்ச நேரம் கேக்கணும்னு தோணிச்சு. அதான் இங்கன வந்தேன். மருந்து மாயம் எதுவும் வேணாம் டாக்டர் ஐயா... ஒடம்புக்கு ஒண்ணுமில்லே!''

டாக்டர் ஐயா குலுங்கக் குலுங்கச் சிரித் தார். "நானா? தமிழ்ப் பண்டிதனா?" மூக்குக் கண்ணாடியும் கூடச் சேர்ந்து குதித்தது. "நான் யாரு உங்களைக் குணமாக்க? ஔவையார் மூதுரை கேட்டிருக்கீங்களா? சொல்லட்டா?''

"சொல்லுங்க!''

"உடன்பிறந்தோர் சுற்றத்தார் என்றிருக்க
வேண்டா;
உடன்பிறந்தே கொல்லும் வியாதி -
உடன் பிறவா மாமலையில் உள்ள
மருந்தே பிணி தீர்க்கும்;
அம்மருந்து போல் வாரும் உண்டு."

"நாஞ் சொன்னதுல தப்பு இல்லீங்க டாக்டர் ஐயா. 'அம் மருந்து போல் வாரும் உண்டு'ன்னு சொன்னது உங்களை மாதிரி நல்லவங்களைத்தானே?''

டாக்டர் ஐயா மறுபடி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

உள்ளேயிருந்து ஏதோ சத்தம் வந்தது மாதிரி கேட்கவே, சட்டென்று எழுந்து கொண்டு உள்ளே போனார்.

வீட்டின் முன் பகுதியில் கூரைக்கு வேய்ந்த ஓலை காற்றில் படபடத்தது. பலத்த காற்று வீசி வீசி அடங்கிற்று. மழைத்துளி பட் பட்டென்று புள்ளி வைத்துச் சென்றது. வீட் டின் முன்னேயிருந்த தென்னையும் வேம்பும் ஆவேச ஆட்டமாய் ஆடின. பின்புறம் கொல் லையில் செழித்து வளர்ந்திருந்த மூலிகைச் செடிகள் விஸ் விஸ்...ஸென்று ஓசை எழுப்பின.

● யாராவது உன் மீது கோபப்பட்டால், அவனுடைய கோப அதிர்வுகளில் அகப்பட்டுக் கொள்ளாமல் விலகி நில். எந்த ஆதரவோ எதிர்ப்போ பதிலாகக் கிடைக்காததால் அவனுடைய கோபம் மழுங்கிப் போகும்.

– ஸ்ரீ அன்னை, புதுவை.
தகவல்: இரா பார்த்திபன்

நீலிபிருங்காதி தைலப் பாட்டில்களை நிரப்பி அலமாரியில் வைத்துவிட்டு நாற்காலி யில் அமர்ந்தார் டாக்டர் ஐயா. தெருமுனை யில் இருந்த கமலம் கேட்டிருந்தாள். மழை நின்றதும் வந்து வாங்கிக் கொண்டு போவாள்.

ரெயில்வே லைனை ஒட்டிய குப்பத்தி லிருந்து ஏழை பாழைகள் கும்பலாக வரு வார்கள். பைசா வாங்கிக் கொள்ளாமல் மருந் தைக் கொடுத்து அனுப்புவார் டாக்டர் ஐயா. அவர்கள் நாலைந்து பேர் க்ஷீரபலா எண் ணெய் கேட்டிருந்தார்கள். தயாரித்து வைக்க வேண்டும். இது தருமம்தான். அவர்களும் தான் காசுக்கு எங்கே போவார்கள்?

"ஏதாச்சும் ரூபா வாங்கிட்டுக் கொடுக் கலாமே, டாக்டர் ஐயா?'' என்று கந்தசாமி கூடச் சொல்லிப் பார்த்தார்.

''இல்லாதவங்ககிட்ட யாரும் கேக்க முடியுமா கந்தசாமி? சிவவாக்கியர் பாடல் ஒண்ணு தெரியுமா?

'ஆடுமாடு தேடினும் ஆனைசேனை
தேடினும்,
கோடி வாசி தேடினும் குறுக்கே வந்து
நிற்குமோ?
ஓடிவிட்ட பிச்சையும் உகந்து செய்த
தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல் தருமம் வந்து
நிற்குமே!'ன்னு

பாடியிருக்காரு. முடிஞ்சா தருமம் செய்யி றது. அவ்வளவுதான்!'' என்று சமாதானம் சொல்லியிருக்கிறார் அவரிடம்...

இன்னைை விளக்கைப் போட்டுவிட்டு நாற்காலியில் அமர்ந்தபோது, உள்ளேயிருந்து ஏதோ குரல் கேட்டது.

உள்ளே போய் சுவாமி அறை விளக்கை ஏற்றிவிட்டு வந்து அமர்ந்தார்.

வானம் மேக மூட்டத்துடன் சற்றே இடி இடித்தது. அருகே இருந்த முருகன் கோயிலில் இருந்து மணிச் சத்தம் கேட்டது.



பெருமாள்சாமி வந்து அமர்ந்தவுடன், அவரைத் தொடர்ந்து இன்னும் சிலர் பெஞ்சில் வந்து அமர்ந்து கொண்டனர்.

தருமனுக்கு வயிற்று வலி என்றான். மற்றவர்கள் யாருக்கும் மருந்து எதுவும் தேவையிருக்கவில்லை. டாக்டர் ஐயா பேசுவதை பிரசங்கம் மாதிரி கேட்க வேண்டும். இது கிட்டத்தட்ட தினசரி நடைமுறை மாதிரி ஆகிவிட்டது.

ஆனால் இன்று டாக்டர் ஐயா சுரத்து இன்றி இருப்பதுபோல் அவர்களுக்குப் பட்டது. "டாக்டர் ஐயாவுக்கு ஒடம்பு சொகமில்லையோ?" என்று கேட்டான் செம்பான்.

"ஏன், என்னப் பார்த்தா சொகமா இருக்கற மாதிரி தெரியலே?" என்று சிரித்தார் டாக்டர் ஐயா.

"ஏதும் பேசுங்க டாக்டர் ஐயா!" என்றான் முத்துசாமி அப்பாவியாய்.

"திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் பாட்டு ஒண்ணு சொல்றேன்.

'ஏது பிழை செய்தாலும்
ஏழையேனுக்கிரங்கி,
நிது புரியாத தெய்வமே -
நீதி தழைக்கின்ற போரூர்த் தனி முதலே,
நாயேன் பிழைக்கின்றவாறு நீ பேசு!'

இப்படி அவர் பாடின மாதிரி டாக்டர் ஐயாவைப் பேசச் சொல்லுறே நீ!" என்றபோது எல்லாரும் சிரித்தார்கள்.

"நான் மருந்து மட்டுமா தரேன்? அந்தப் பரம்பொருள்கிட்ட வேண்டிக்கறேன். நான் கொடுக்கற மருந்து, என்னை நம்பி வர நோயாளிகளைக் குணப்படுத்த வேணும் என்று கேட்டுக்கறேன். அந்த முருகப் பெருமான் செவியில் அது விழுது. அவன் என்ன சின்னப் புள்ளையா? அவனை ஒரு பக்தர் பாடியிருக்கற பாட்டுத் தெரியுமோ?"

"சொல்லுங்க டாக்டர் ஐயா!"

"முன்னம் நின் அன்னை அமுதூட்டி
மையிட்டு முத்தமிட்டுக்
கன்னமும் கிள்ளிய நாள் அல்லவே!
என்னைக் காத்தளிக்க
அன்னமும் மஞ்ஞையும் போல் இரு
பெண் கொண்ட ஆண் பிள்ளை நீ
இன்னமும் சின்னவன்தானோ செந்தூரில்
இருப்பவனே!

- பக்தர் நல்ல புலவரா இருந்துடவே, நல்லா பாடிட்டாரு! இல்லே?"

வாசலில் எல்லாரும் கூடியிருந்தார்கள். அத்தனை பேரும் டாக்டர் ஐயாவின் மருந்துக்கு மட்டும் அல்லாது, தமிழ்ப் பாட்டுக்கும் வரும் கூட்டம்.

மழை வரும்போல் பயமுறுத்திய கருமேகக் கூட்டமும் திரண்டிருந்தது.

வெளியில் நின்றிருந்த பலர் உள்ளே திண்ணைக்குப் போய் நின்று கொண்டார்கள்.

சிலர் உரிமையுடன் திண்ணையையும் தாண்டி உள்ளே சென்றனர்.

வெள்ளைத் துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு, குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தார் டாக்டர் ஐயா. இடையிடையே நிறுத்தி, கண்ணாடியைத் தூக்கி, கண்களைத் துடைத்துக் கொண்டார்.

கீழே டாக்டர் ஐயாவின் மனைவியின் உடல் குளிர்ந்து கிடந்தது. மெலிதாக மஞ்சள் பூசிய முகத்தில் சிவப்புக் குங்குமப் பொட்டு பளீரிட்டது.

நோயாளிகளைப் பரிசோதித்து மருந்து கொடுக்கும்போது, இனி உள்ளேயிருந்து கூப்பிட மாட்டாள். நாற்பது வருடமாகப் படுத்த படுக்கையாக இருக்கும் பெண் சாதியை, அவள் கூப்பிட்ட குரலுக்கு எல்லாம் ஓடோடிச் சென்று பரிவு காட்டி, சோறு முதற்கொண்டு ஊட்டி, மருந்து குழைத்துக் கொடுத்து பணிவிடை செய்த டாக்டர் ஐயா, உணர்ச்சியற்று மரம்போல நின்றார்.

"எங்க எல்லாருக்கும் நல்லது சொல்லுவீங்க. பாட்டுப் படிச்சு அருத்தம் சொல்லுவீங்க. நீங்க அழலாமா டாக்டர் ஐயா? பாடுங்க... உம்.."

ஒரு நிமிடம் டாக்டர் ஐயா ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றார். அந்த நிமிடத்தில் அவர் பழைய டாக்டர் ஐயா ஆகிவிட்ட மாதிரி இருந்தது.

"திருநெல்வேலி அழகிய சொக்கநாதப் பிள்ளை பாடின பாட்டு ஞாபகம் இருக்கு...

'கோடா வரும் எமனைக்கிட்ட வராதே,
தூரப் போடா என்றோட்டி உன்தன்
பொற்கமலத் தாள் நிழற்கீழ்
வாடா என அழைத்து வாழ்வித்தால்,
அம்ம! உனைக்
கூடாதென்று யார் தடுப்பார், கோமதித்
தாய் ஈசுவரியே!"

டாக்டர் ஐயா குரல் மெலிந்திருந்தது. அவர் பாட்டு அப்படியும் தெளிவாய்க் கேட்டது.

வந்தவர்களில் சிலர் இனி ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்கலானார்கள். ●



" உன் கணவர் இப்படி சில்லறை விஷயத்துக்கெல்லாம் கோபிச்சுக்கிறாரே, ஏன்?"

"பஸ்ல கண்டக்டரா இருக்காருல்ல!"

— பேர்ணாம்பட்டு
என். சலீம்பாஷா.



"உங்க பையன் நிறைய சினிமா பார்ப்பானா?"

"ஏன் சார் கேட்கறீங்க?"

"பாரதியாரோட முழுப் பெயர் கேட்டா சாயாஜி ஷிண்டேங்கிறான்!"

— வந்தவாசி பா. ஜெயக்குமார்

சிரிப்புச் சில்லறை!



"ஏன் சார்! கல்யாணச் சாப்பாடு பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை ஏதும் எழுதப் போறீங்களா?"

"ஏம்ப்பா இப்படிக் கேட்கிறே?"

"தொடர்ந்து நாலு பந்தியா உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கீங்களே!"

— கு. அருணாசலம்

"நீங்க டைலரா இருக்கலாம். அதுக்காக உங்க குழந்தைகளுக்கு 'காஜா' மொய்தீன், தையல் நாயகி, பட்டன் குமார்னு பேர் வெச்சிருக்கறது கொஞ்சம்கூட நல்லா இல்லே!"

— கொங்கணாபுரம்
வே. செந்தில்



'ஏர் பாக்கெட்!'



சமீபத்தில் சென்னையில் இருந்து, 197 பயணிகளுடன் சிங்கப்பூர் கிளம்பிய விமானம் நடுவானில் 'ஏர் பாக்கெட்'டில் சிக்கிக்கொண்டு துடாலடியாகக் கீழ் நோக்கிப் பாய்ந்தது அல்லவா! விமானி சமயோசிதமாகச் சமாளித்து விமானத்தை மீண்டும் மீனம்பாக்கத்துக்கே திருப்பிக் கொண்டு வந்து விட்டார். அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள் பயணிகள். இந்தச் சம்பவத்தைப் பற்றி விமான ஓட்டுதலில் வெள்ளி விழா அனுபவத்தைப் பெற்ற கேப்டன் ஜே. சம்பத்குமரனிடம் கேட்டோம்.

"'ஏர் பாக்கெட்' என்று சொல்வது எல்லோருக்கும் புரிய வேண்டுமென்பதற்காகத்தான். அது போன்று வானத்தில் நிகழும் சூழலை Clear Air Turbulence (CAT) என்று சொல்லுவோம். வானத்தில் 20,000 அடியிலிருந்து 40,000 அடி உயரம் வரை இந்த CAT இருப்பதற்கான வாய்ப்பு உண்டு. உயர் வேகம் + அழுத்தம் கொண்ட பெரிய காற்று மண்டலம் அண்ட வெளியில் உலவிக் கொண்டிருக்கும். இந்தக் காற்று மண்டலம் அப்படி உலவிக் கொண்டிருப்பதற்கான குறியீடுகள், விமானத்தின் காக்பிட்டிலோ அல்லது பூமியில் இருக்கும் கட்டுப்பாட்டு அறையிலோ தெரியாது. விமானம் அந்தக் காற்று மண்டலத்தைத் தொட்டவுடன் உண்டாகும் அதிர்ச்சியில் சில நொடித் துளிகளில் விமானி உணர்ந்து கொண்டு விமானத்தை வந்த வழியிலேயே திருப்பிச் செலுத்த வேண்டும். அதைத் தான் இந்த விமானியும் செய்துள்ளார்.

"சாலையில் செல்லும்போது சாலை பழுது என்றால் மாற்று வழியில் செல்லவும் என்று போட்டிருப்பார்கள். அது போன்று சில விமானங்கள் இந்தக் காற்று மண்டலத்தை விட்டு விட்டு diversion எடுத்துக்கொண்டு செல்வார்கள். அது மிகவும் ஆபத்தான செயல். ஏனென்றால் எந்த அளவுக்கு அகலம் மற்றும் உயரவாக்கில் அந்த உயர்வேகக் காற்று மண்டலம் பரவி இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. இந்தக் காற்று மண்டலத்தின் மேற்புறம் விமானம் உரசினால் அந்த அழுத்தத்தில் விமானம் இன்னமும் மேல்நோக்கிப் போகும். கீழ்ப்புறத்தில் மோதும்போது கீழ் நோக்கித் தள்ளப்படுகிறது. இந்தக் குறிப்பிட்ட விமானம் காற்று மண்டலத்தின் கீழ்ப்புறத்தில் மோதியதால்தான் 28000 அடியிலிருந்து 7000 அடிக்குக் குட்டிக் கரணம் அடித்திருக்கிறது.

"பொதுவாக பனிக்காலத்தில் இது போன்ற நிலை வானத்தில் நிலவும் வாய்ப்பு உண்டு. மூன்று வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் ஒரு விமானம் ஏர்பாக்கெட்டில் சிக்கிக்கொண்டு உடைந்தே போனது. இந்தக் குறிப்பிட்ட விமானம் உறுதியான ஏர் பஸ் ஆக இருந்ததால் விமானத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. பொதுவாக 20000 அடி உயரத்துக்கு மேலே பறக்கும் விமானங்களுக்கு இந்த ஆபத்து உண்டு. தப்பித்து வருவது என்பது விமானியின் புத்திசாலித்தனத்தையும், அதிர்ஷ்டத்தையும் பொறுத்தது."

— கௌசி

ஆண் பெண் மலடு நீங்கி குழந்தை பெற முக்கூட்டு மருத்துவம்

மருத்துவத்தில் இன்று எத்தனையோ விஞ்ஞான முன்னேற்றங்கள் இருந்தாலும், குழந்தைச் செல்வம் உண்டாவது என்பது 'இறைவன் கொடுத்த வரம்' போல் ஆகி விட்டது.

''குழந்தைப்பேறு இல்லாத தம்பதியரில், குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி, அவர்களை இயற்கையாகவே குழந்தைபேற்றுக்கு தகுதி உள்ளவர்களாக ஆக்கும் – பக்கவிளைவுகள் இல்லாத சிகிச்சை. நாங்கள் கடைப்பிடிக்கும் 'ஹோமியோபதி – சித்தா – ஆயுர்வேதம்' என்ற முக்கூட்டு மருத்துவ முறையாகும்'' என்று கூறுகிறார். 'நவீன வைத்தியாலயா' என்ற பெயரில் வந்தவாசியிலும், சென்னையிலும் சிகிச்சை நிலையங்கள் நடத்தி வரும் டாக்டர் ஏ. அர்ஜுனா.

''கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலான என் மருத்துவ அனுபவத்தில் ஆயிரக்கணக்கான தம்பதியர்களுக்கு சிகிச்சையளித்திருக்கிறேன்.

என்னிடம் வரும் தம்பதியரில் ஆண்களில் 70 சதவிகிதம் பேரும், பெண்களில் 30 சதவிகிதம் பேரும் குறைபாடு உடையவர்களாக இருக்கிறார்கள்'' என்று விவரம் தெரிவித்தார் அர்ஜுனா.



• உயிரணு உற்பத்தி ஆகியும், கருப்பை கோளாறுகள் நீங்கியும் குழந்தை பேறு உண்டான சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த ராஜா - அலமேலு தம்பதியர் உலகப் புகழ்பெற்ற மருத்துவ திலகம் டாக்டர் அர்ஜுனாவுடன்

குழந்தைப்பேறு இல்லாமல், குடும்பத்தில் பிரச்னைகள் ஏற்பட்ட காரணத்தால் தற்கொலைக்கு முயன்ற பெண்களை, தனது சிகிச்சை முறையில் தடுத்து நிறுத்தியிருப்பதாகக் கூறுகிறார் டாக்டர் அர்ஜுனா. அது போல், ''மனைவிக்குக் குழந்தை இல்லை என்பதற்காக மறுமணம் புரியவிருந்த கணவன்மார்களுக்கு நம்பிக்கையூட்டி, அவர்கள் குடும்பத்தில் குழந்தைச் செல்வம் உண்டாக்கி மகிழ்ச்சியூட்டியிருக்கிறேன்''என்கிறார் அவர்.

தனது சிகிச்சை முறைகளைப் பொறுத்தவரையில், பிற மருத்துவர்களோடு ஒப்பிடுகையில், சேவை மனப்பான்மையோடு மருத்துவம் செய்வதாகக் குறிப்பிட்டார்.

''எங்களிடம் வரும் தம்பதியரிடம் சிகிச்சைத் தொடங்கும் முன் கணவனின் உயிரணு உற்பத்தி சரியாக இருக்கிறதா என்பதைக் கண்டறிய விந்துப் பரிசோதனை செய்யச் சொல்வோம். அதில் குறைபாடு இருந்தால் எங்களது முக்கூட்டு மருந்துகள் மூலம் சரியாகும் வரை அவர்களுக்கு சில கட்டுப்பாடுகளுடன் சிகிச்சை அளித்து, உயிரணுக்கள் உற்பத்தி செய்து அணுக்களின் எண்ணிக்கை – உயிரோட்டத்தை அதிகரிக்கச் செய்து கருத்தரிக்கச் செய்கிறோம்.

பொதுவாக ஓர் ஆணின் உயிரணுக்களின் எண்ணிக்கை சராசரியாக 100 முதல் 150 மில்லியன் வரை இருக்கும். அந்த அணுக்களின் உயிரோட்டம் மொட்டிலிட்டி (Motility) 80 சதவிகிதத்திற்கு மேல் இருக்க வேண்டும்.

நாங்கள் சராசரிக்கும் குறைவாக உள்ளவர்களைக்கூட புத்திர பாக்கியத்திற்குத் தகுதி உடையவர்களாக ஆக்கியிருக்கிறோம். ஆண் தன்மை அறவே இல்லாத ஆண் மகனுக்கு ஆண் தன்மை உண்டாக்கி புத்திரபாக்கியம் உண்டாக்கியிருக்கிறோம்.

எங்களிடம் 4.12.99ல் செமன் டெஸ்ட் செய்து, சிகிச்சைக்கு வந்த ஒரு ஆண் மகனுக்கு மொட்டிலிட்டி 5%ம், கவுண்ட் 2 மில்லியனும் இருந்தது. அதே ஆண் மகன் ஒரு மாத காலம் எங்களிடம் சிகிச்சை பெற்றதில் 26.1.2000ல் மொட்டிலிட்டி 60%ம், டோட்டல் கவுண்ட் 128 மில்லியனும் ரிசல்ட் உயர்ந்து இருந்தது. இந்த நபர் இதைக் கண்டு சந்தோஷமும், ஆச்சரியமும் அடைந்தார்.

எங்களிடம் சென்னையில் சிகிச்சைக்கு வந்த இன்னொரு ஆணுக்கு 3.2.2000ல் கவுண்ட் 6 லட்சமும், மொட்டிலிட்டி 50%ம் இருந்தது. அவர் மருந்து சாப்பிட்டு ஒரு மாதத்திற்குள் செமன் டெஸ்ட் பரிசோதித்ததில் 26.2.2000ல் மொட்டிலிட்டி 80%ம் கவுண்ட் 50 மில்லியன் உயர்ந்திருக்கிறது. அடுத்து மருந்து சாப்பிட்டதில் மீண்டும் 31.3.2000 கவுண்ட் 110 மில்லியன் உயர்ந்திருக்கிறது. வேறு எங்கும் காண முடியாத இது ஒரு உலக சாதனையாகும்.

ஆண் மலட்டுத்தன்மைக்கான காரணங்கள் :

ஆண்களுக்கு இளம் வயதிலேயே புட்டாளம்மை வந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், விதைகளில் அடிபட்டிருந்தாலும், வெப்பம் அதிகமுள்ள இடங்களில் வேலை செய்வதாலும், இந்திரிய நரம்புகள் இல்லாமல் பிறந்திருந்தாலும், அவர்களால் புத்திர பாக்கியம் அடைய முடியாத நிலை உள்ளது.

சில ஆண்களுக்கு முறையற்ற சிற்றின்ப பழக்கங்கள், அதிகமான போதைப் பொருட்களின் பழக்கம், மற்றும் நீரிழிவு நோய் இருந்தாலும் குழந்தை பிறக்கச் செய்வதற்கான தகுதி இழந்து போகிறார்கள். அவர்களுக்கு எங்கள் முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திரபாக்கியம் அடையச் செய்ய முடியும்.

பெண் மலட்டுத்தன்மைக்கான காரணங்கள்:

பெண்களின் பிரச்னைகளைப் பொறுத்தவரையில், வளர்ச்சியே இல்லாமல் இருக்கும் பெண்களின் கர்ப்பப் பையை வளர்ச்சியடையச் செய்கிறோம். சில பெண்களுக்கு வீட்டு விலக்கு ஒழுங்கில்லாமல் இருக்கும். அதை ஒழுங்குபடுத்துகிறோம். சில பெண்களுக்கு மாதந்தோறும் வீட்டு விலக்கின் போது சூதக வயிற்று வலி வரும். இதனால் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போகும். இந்தக் குறையையும் எங்கள் முக்கூட்டு மருந்துகளால் குறைபாடுகளை நீக்கி கருத்தரிக்கச் செய்கிறோம்.

சில பெண்களுக்கு கருமுட்டை உற்பத்தி இருக்காது. எங்கள் முக்கூட்டு மருத்துவத்தால் கரு முட்டை உண்டாக்கி, கருவுறச் செய்கிறோம். இத்தகையவர்களை ஸ்கேன் மூலம் பரிசோதிக்கச் செய்து, கருமுட்டை உற்பத்தி நிலையை அறிந்து கருத்தரிக்கச் செய்கிறோம்:

பெண்களுக்குள்ள பிரதான பெரிய பிரச்னை, கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்படுவது. அதை முக்கூட்டு மருந்துகளால் கரைத்து அடைப்பை நீக்கி விடுகிறோம்.

கடந்த ஆண்டு துபாயில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. ராமேஸ்வரத்தில் சைக்கிள் கடை உரிமையாளர் ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த ஒரு தம்பதியர் குழந்தையில்லாதிருந்து எங்களிடம் வந்து சிகிச்சை பெற்றதில் முக்கூட்டு மருத்துவத்தால் ஆணுக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், பெண்ணுக்கு கருக்குழாய் அடைப்பு நீங்கியும் இப்போது அந்தப் பெண் கருத்தரித்துள்ளதாக முதலில் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார்கள். அடுத்து கடிதமும் எழுதியிருந்தார்கள்.

எதிர்புறம் படத்தில் உள்ள தம்பதிகளாகிய சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த ராஜா-அலமேலு தம்பதியர் திருமணமாகி நான்கு வருடங்கள் குழந்தை இல்லாதிருந்து, பல டாக்டர்களிடம் சிகிச்சை பெற்று பலனின்றி தோல்வியுற்ற பின்னர் என்னிடம் வந்தார்கள். தம்பதியரில் இருவருக்கும் குறைபாடுகள் இருந்ததால், அவர்களுக்கு முக்கூட்டு மருந்து கொடுத்து சிகிச்சையளித்ததில், திருமதி ராஜா தற்போது மூன்று மாத கர்ப்பவதியாக உள்ளார்.

தற்போது வேலூர் மாவட்டம் பணப்பாக்கத்தில் சுப்பிரமணியம்-பூங்கொடி தம்பதியினருக்கு எங்களது ஒரே மாத சிகிச்சையினால் 22.1.2000ல் பெண் குழந்தை பிறந்துள்ளது. மேலும் பெங்களூரில் வசிக்கும் தம்பதியினருக்கு 20ஆண்டு காலம் குழந்தை இல்லாமல் இருந்து முக்கூட்டு மருத்துவத்தின் மூலம் குழந்தை பிறந்துள்ளது. 4.12.99ல் கோயம்புத்தூரில் தங்கராஜ் தம்பதியினருக்கு ஆண் குழந்தை பிறந்து உள்ளது. மதுரையை சேர்ந்த அரசாங்கத்தில் பணி புரியும் ஒரு மாவட்ட அதிகாரிக்கு 23 ஆண்டு காலம் குழந்தை இல்லாதிருந்து எங்களிடம் சிகிச்சை பெற்ற அவரது மனைவிக்கு கடந்த 5.6.2000ல் பெண் குழந்தை பிறந்துள்ளது.

ஏழு ஆண்டு காலம் குழந்தை இல்லாதிருந்த சென்னை பூந்தமல்லியைச் சேர்ந்த முருகன் தம்பதியர் எங்களிடம் சிகிச்சை பெற்றதன் மூலம் திருமதி முருகன் தற்போது 8 மாத கர்ப்பிணியாக உள்ளார்.

எங்கள் மருத்துவமனையில், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும்; அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

என்னிடம் சிகிச்சை பெற்று கர்ப்பமடைந்தவர்கள் கர்ப்பமடைந்த பின் 6மாதம் வரை ஆங்கில மருத்துவர்களிடம் சென்று ஆங்கில மருந்து சாப்பிடக் கூடாது. அப்படி ஆங்கில மருந்துகளைச் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படவும் வாய்ப்புண்டு.

ஒரு ஜாதி மருந்துகளால் உருவாகும் கரு, வேறொரு ஜாதி மருந்தினால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. அதனால் பிரசவம் ஆகும் வரை உஷாராக இருக்க வேண்டும். அப்போதுதான் சுகப் பிரசவம் ஏற்படும்'' என்றார் **டாக்டர் அர்ஜுனா**. சுகப்பிரசவத்திற்கும் மருந்து உண்டு என்கிறார் அவர்.

நீங்களும் குறைந்த செலவில் புத்திர பாக்கியம் அடைய டாக்டர். **ஏ. அர்ஜுனா**, அவரது மனைவி டாக்டர். **வி.ஏ. ஆண்டாள்** அவர்களை அணுகவும்
:



• டாக்டர் அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா ஹோமியோபதி – சித்தா – ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம் நெ.9 நெற்குன்றம் பாதை, (டி.எஸ். கவுரி சங்கர் கல்யாண மண்டபம் எதிரில்) 100 அடி ரிங் ரோடு, வடபழனி, சென்னை – 600 026 போன் : 4833464 எஸ்டிடி. 044

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம் –

வீடு : நெ. 30, பிராமணர் தெரு, ஈஸ்வரன் கோயில் அருகில், வந்தவாசி,
திருவண்ணாமலை மாவட்டம் – 604 408
போன் : 25208, 26180 எஸ்டிடி. 04183

Visit us at :
www.naveenainfertilityhospital.com.
www.gemsassociates.com/infertility
e-mail.doctorarjuna @naveena infertilityhospital.com
e-mail.doctorandal @ naveena infertilityhospital.com.

ADVT

அகப்பட்டுக் கொண்டார் ஆட்டோ சங்கர்!



தடய அறிவியல் நிபுணர்

டாக்டர் பி. சந்திரசேகரன்

"இந்தப் பெண்மணியை உங்களுக்கு முன்பே தெரியுமா?" என்று நீதிபதி எதற்காகக் கேட்கிறார்? யோசித்தேன். புரிந்தது. அன்பு சார்பாக நான் ஆஜராகி கருத்துக் கூறி இருப்பதால் பாரபட்சம் இன்றி என் கருத்துகளை தெரிவித்திருப்பேனோ என்ற சந்தேகம் அவருக்கு வந்துவிட்டது.

''மைலார்ட்'' என்று மீண்டும் துவங்கினேன். "இந்த வழக்கில் மூன்று நிபுணர்கள் தங்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மூன்றுமே ஒன்றுக்கொன்று முரணாய் இருக்கின்றன. அன்பு, அவரது முன்னாள் மனைவியின் கையெழுத்தை மோசடி செய்திருப்பதற்கான வாய்ப்பே இல்லை. ஒரு அப்பாவி மாட்டிக் கொள்ளக்கூடாது என்ற நோக்கில்தான் என் கருத்தைத் தெரிவிக்க முன் வந்தேன். இந்தப் பெண்மணியை எனக்கு நன்றாகவே தெரியும்? ஏனென்றால் அன்புவுக்கும் இந்தப் பெண்மணிக்கும் சென்னையில் சுயமரியாதை திருமணம் நடந்தது. அந்தத் திருமணத்திற்கு இரண்டாவதாக சாட்சிக் கையெழுத்துப் போட்டேன் நான்'' என்று சொல்லி நிறுத்தினேன்.

''அப்போது முதல் கையெழுத்து போட்டவர் யார்?" என்றார் நீதிபதி. "முதல் கையெழுத்துப் போட்டவர் எங்கள் மாநில முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள்தான். அன்புவின் தந்தை திராவிட முன்னேற்றக் கழகத்தில் முக்கியமான உறுப்பினர்'' என்று சொல்லி முடித்தேன். "ஓ... உங்கள் முதல்வர் திருமணத்தில் சாட்சிக் கையெழுத்துப் போட்டாரா?" என்று வியப்புடன் கேட்டார் நீதிபதி.

தீர்ப்பு நாளும் வந்தது. தீர்ப்பில் நீதிபதி, ''இந்தியாவிலிருந்து வந்திருந்த நிபுணர் சந்திரசேகரனின் அறிக்கையும், சாட்சியமும் என் தீர்ப்புக்கு வலுவூட்டும் வகையில் அமைந்திருந்தன. அன்பு எந்தத் தவறும் செய்ததற்கான ஆதாரம் இல்லை. தவறான நோக்கத்தில் யோகாம்பிகா நாகராஜா பொய் வழக்கு போட்டிருக்கிறார்'' என்றார். அரங்கண்ணல் அவர்களுக்கு ஏக சந்தோஷம்.

ஒரு நபர் பல்வேறு கால கட்டங்களில் போடும் கையெழுத்து வேறுபட்டாலும் எழுத்துக்கள், எழுத்தின் நீளம், அகலம், இடைவெளி ஆகியவற்றைக் கொண்டு, இது இவரது கையெழுத்துதான் என்று தீர்மானிக்க முடியும். இது போன்ற பல வழக்குகளில் நான் சாட்சியம் சொல்லியிருக்கிறேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் காஷ்மீர் அரசின் அழைப்பின் பெயரில் இரண்டு வாரம் ஸ்ரீநகரில் இருந்தேன். அந்த மாநில தடய இயல் துறை மிகவும் சீர்கெட்டுப் போயிருந்ததால் அதை சரி செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று அரசு என்னிடம் கேட்டிருந்தது. நானும், காஷ்மீர் தடய இயல் துறையை சீரமைக்கும் விதத்தில் பெரிய அறிக்கை கொடுத்தேன். எனக்கு மிகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டு ரகசியமாக வைக்கப்பட்டேன். அப்போது காஷ்மீர் பல்கலைக் கழக துணைவேந்தர் என்னைச் சந்தித்து ஒரு விவகாரத்தில் கருத்தைச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார். விஷயம் இதுதான். ஒரு மக்கு மாணவன் குறிப்பிட்ட பரீட்சையில் 98 சதவிகிதம் மார்க் வாங்கியிருக்கிறான். அதே வகுப்பில் நன்றாகப் படிக்கும் மாணவன் 30 சதவிகிதம் தான் வாங்கியிருக்கிறான். மக்கு மாணவன்

பேப்பரை திருத்திய பேராசிரியர் ஏதோ 'கோல்மால்' செய்திருக்கிறார் என்று மற்ற பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சந்தேகம். இதை எப்படிக் கண்டுபிடிப்பது?

முதலில் கேள்வித் தாளை கொண்டு வரச் சொன்னேன். அப்ஜெக்டிவ் டைப் அது. (கோன் பனேகா குரோர்பதி போல) கேள்வித்தாளிலேயே கொடுக்கப்பட்டிருக்கும் நான்கு பதில்களுக்கு பக்கத்தில் உள்ள பாக்ஸில் சரியான விடையை ☒ இப்படி போட்டுக் குறிப்பிட வேண்டும். அந்தப் பேராசிரியரும், மக்கு மாணவனிடம் பதில் எதுவும் குறிப்பிடாமல் கேள்வித் தாளை blank ஆகக் கொடுக்கும்படி சொல்லியிருக்கிறார். அதில் நூற்றுக்கு நூறு சரியான விடைகளைக் குறிப்பிட்டால் சந்தேகம் வரும் என்று ஒன்றிரண்டு தவறான விடைகளைக் குறிப்பிட்டு விட்டு மற்றவற்றிற்குச் சரியான பதிலை அவரே ☒ இப்படிக் குறித்து 98 சதம் மார்க் போட்டு விட்டார்.

இதை எப்படிக் கண்டுபிடித்தேன்? அந்த மாணவர் முன்பே இது போன்று பரீட்சை எழுதியிருந்ததால் அந்தப் பேப்பரை கொண்டு வரச் சொன்னேன். சந்தேக ஊசி தொங்கும் பேராசிரியர், முன்பு திருத்திய பேப்பர்களையும் கேட்டேன். பையனின் பழைய பேப்பர்களில் உள்ள xக்கும், சமீபத்திய பேப்பரில் உள்ள xக்கும் வித்தியாசம் இருந்தது. இப்படி xவில் உள்ள ஒற்றுமைகளைக் கண்டுபிடித்து விசாரித்தவுடன் பேராசிரியர் மக்கு மாணவன் பேப்பரில் தாம் 'கோல்மால்' செய்து அதிக மார்க் போடப்பட்டதை ஒப்புக்கொண்டார். வேலியே பயிரை மேயலாமா?

கொலை வழக்குகளில் corpus detecti என்ற சொல் அடிக்கடி சொல்லப்படும். அப்படி என்றால் என்ன? கந்தன் என்பவனைக் கொன்றதாகக் கிருஷ்ணன் என்பவர் கைது செய்யப்படுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலில் கோர்ட்டில் நிரூபிக்க வேண்டிய விஷயம் கொலையுண்டவன் கந்தன்தான் என்பது. இதைத்தான் corpus detecti என்கிறார்கள். இறந்து போன கந்தன் உடல் அடையாளம் தெரியாத முறையில் சிதைக்கப்பட்டிருந்தால் சாட்சிகளின் உதவியுடன் அவன்தான் கந்தன் என்று நிரூபிக்கலாம். கொலை செய்யப்பட்டு எரிக்கப்படுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். வெறும் மண்டையோடு, எலும்புத் துண்டுகளை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? தடய இயல் ஆராய்ச்சியாளர்களைத் தடுமாறச் செய்த விஷயம் இது.

1883ல் வெல்கர் என்பவர் ஆராய்ச்சியில் இறங்கினார். முதலில் சதைப் பிடிப்புக்கும் உள்ளே உள்ள மண்டையோட்டுக்கும் இடையே உள்ள தொடர்பைக் கண்டு



பிடித்தார். பல நூறு பிணங்களைச் சோதனை செய்த பின், மண்டையோட்டின் அமைப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் வித்தியாசப்படும் என்பதைக் கண்டுபிடித்தார். 1934ல் பேராசிரியர் பிராஜ் என்பவர் ஒரு கொலை வழக்கில் இறந்தவரின் புகைப்படத்தைக் கொண்டு மண்டையோட்டோடு ஒப்பிட்டு, கொலையுண்டவர் 'அவர்தான்' என்பதைக் உறுதி செய்தார். அதன்பின் தடய இயல் வேகமாக முன்னேறியது. அதன் தொடர்ச்சியாக ஒரு நபரின் தலை ஏற்கெனவே எக்ஸ்ரே படம் பிடிக்கப்பட்டு வைத்திருந்து. அந்த நபர் பின்னாளில் கொலை செய்யப்பட்டு மண்டையோடு மட்டும் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், அதை வைத்துக் கொண்டு, தலை எக்ஸ்ரேயுடன் ஒப்பிட்டு கொலையுண்டவர் இவர்தான் என்று உறுதியாகக் கண்டுபிடிக்க முடியும் என்று நான் பல ஆராய்ச்சிகள் செய்து பின்னர் அறிவித்தேன். மண்டையோட்டில் உள்ள மூன்று இணை கோடுகளை ஆயிரக்

கணக்கான மண்டையோடுகளில் ஆராய்ச்சி செய்த பிறகே, என் கண்டுபிடிப்பை உறுதி செய்தேன். இதற்காகப் பல இடங்களுக்கு விஸிட் செய்து மண்டையோடுகளைச் சேகரித்தேன்!

"சிவனுக்கு கபால (மண்டை) பைரவன் என்ற பெயர் உண்டு. உன் பெயருக்கு ஏற்ப (சந்திரனை தலையில் தாங்கி இருப்பவர் சிவன்) மண்டையோடுகளைச் சேகரிக்கிறோம்'' என்று நண்பர்கள் கிண்டல் செய்தார்கள். ஆனால் தலை எக்ஸ்ரே முறை நடைமுறைக்கு ஒத்துவராது. ஏனென்றால் எல்லோரும் தலை எக்ஸ்ரே எடுத்துக் கொள்வதில்லை. எனவே வேறு பல வழிகளைத் தடய இயல் ஆய்வாளர்கள் யோசிக்க வேண்டியிருந்தது. இதில் ஒரு முறைதான் தலையின் புகைப்படத்துடன் மண்டையோட்டை பொருத்திப் பார்த்துக் கண்டு பிடிப்பது. கொலையுண்டவர் புகைப் படத்தை டிரான்ஸ்பரண்ட் பிலிமில் பதிவு செய்து, மண்டையோட்டையும் படம் எடுத்து, இரண்டையும் எக்ஸ்ரே பார்க்கும் மானிட்டரில் வைத்துப் பொருத்திப் பார்க்க வேண்டும். கண், உதடு ஆகியவை சரியாகப் பொருந்தி வந்தால், அந்த மண்டையோடு புகைப்படத்தில் இருப்பவனுடையது என்று சொல்லிவிடலாம். ஆனால் இந்தமுறை நூற்றுக்கு நூறு சரி என்று சொல்ல முடியாது. Full proof ஆக ஒரு முறையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

"என்னங்க இது.. ஒவ்வொரு கொலு பொம்மையும் ஒவ்வொரு பக்கம் திரும்பி இருக்கு...?"

"என் கணவர் ஒரு காங்கிரஸ்காரர் ஆச்சே. கொலு வைக்க ஹெல்ப் பண்ணினார்!"


- தஞ்சை தாமு



அந்தக் கால கட்டத்தில்தான் வீடியோ தொழில் நுட்பம் பரவலாக அறிமுகமாகி வந்தது. ஒரு உருவத்தில் மற்றொரு உருவம் கலந்து ஐக்கியமாவதும், ஒரு உருவத்திலிருந்து மற்றொரு உருவம் மீண்டும் வருவதும் வீடியோவில் சாத்தியமாயிற்று. மண்டையோட்டைப் புகைப்படத்தோடு பொருத்திப் பார்ப்பதில், வீடியோவை பயன்படுத்தி பிரான்சில் ஆராய்ச்சி செய்வதாகத் தகவல்கள் வந்தன. விவரங்கள் தெரியவில்லை. நான் என் ஆராய்ச்சியில் இறங்கினேன். நமக்குக் கிடைக்கும் சிறிய அளவிலான புகைப்பட முக அமைப்பை வைத்துக் கொண்டு நிஜ (life size) அளவில் அதை பெரிசுபடுத்த (enlarge) வேண்டும். அப்படி நிஜ அளவில் கொண்டுவரப்பட்ட புகைப் படத்தையும், மண்டையோட்டையும் வீடியோ கம்ப்யூட்டர் உதவியுடன் மானிட்டரில் கொண்டுவந்து பொருத்திப் பார்க்க வேண்டும். இந்தப் புதிய முறையில் மற்றொரு வசதியும் இருந்தது. கொலையுண்டவர் படம் பக்கவாட்டில் எடுக்கப்பட்டிருந்தால் அதையும் நேர்க்கோட்டில் கொண்டு வந்து பொருத்திப் பார்க்க முடிந்தது.

நான் கண்டுபிடித்த இந்த electronic skull identification device என்ற கருவியை வைத்து பல கொலை வழக்குகளில் அடையாளம் தெரியாத பிணங்களை அடையாளம் காண முடிந்தது. இந்த வகையில் ஆட்டோ சங்கர் கேஸ் மறக்க முடியாத கேஸ். ஆறு பேரை ஆட்டோ சங்கர் கொன்றதாக வழக்கு. அதில் லலிதா, சுடலை ஆகிய இருவரை திருவான்மியூரில் ஒரு வீட்டில் எரித்து புதைத்து விட்டதாகச் சொல்லப்பட்டது. தோண்டிப் பார்த்ததில் இரண்டு மண்டையோடுகளும், சில எலும்புகளும் கிடைத்தன. கைப்பற்றப்பட்ட மண்டையோடுகள் லலிதா, சுடலை ஆகியோருடையது என்று நிரூபிக்க வேண்டும். எப்படி நிரூபிப்பது? நல்லவேளையாக இருவரது புகைப்படங்களும் கிடைத்தன. பொருத்திப் பார்த்ததில் லலிதா, சுடலை ஆகியோருடைய மண்டையோடுகள் எனத் தெரிந்துவிட்டது. ஆனால் கோர்ட்டில் நீதிபதிகள் எங்கள் கண் எதிரில் அந்தக் கருவியை ஆபரேட் செய்து காட்டவும் என்று சொல்லிவிட்டார்கள். நான்

கருவியை எடுத்துக்கொண்டு உயர்நீதி மன்றத்துக்குச் சென்றேன். ஒரு ஹாலில் கருவியை வைத்து மானிட்டரில் மண்டை யோட்டையும், புகைப்படத்தில் பொருத்திக் காட்டினேன். ஆட்டோ சங்கர் வழக்கறிஞர் ''ஒரு மண்டையோட்டோடு வேறோர் புகைப்படத்தையும் பொருத்திப் பார்க்க முடியும்'' என்று வாதிட்டார். உடனே சுடலையின் படத்தை லலிதாவின் மண்டை யோட்டோடு பொருத்திப் பார்க்கச் சொன்னேன். கண்களும், உதடுகளும் சரியாகவே பொருந்தவில்லை. எனது கண்டுபிடிப்பை நீதிபதிகள் வெகுவாகவே பாராட்டினார்கள்.



''அந்த ஓட்டல்காரருக்கு ரொம்ப இளகிய மனசு!''
''எப்படிச் சொல்ற!''
''காபியில ஈ செத்துக் கிடந்தாகூட எழுந்து ரெண்டு நிமிஷம் மௌன அஞ்சலி செலுத்துவாரு!''
- கொங்கணாபுரம் வே. செந்தில்

கொலையுண்டவர்கள் யார் என்பதை நிரூபித்தாலும், அவர்கள் எரித்துக்



● ஆட்டோசங்கர்

கொன்றதற்கான சாட்சியம் கிடைக்காமல் போலீஸ் திண்டாடிக் கொண்டிருந்தது. எரிக்கபட்டதாகச் சொல்லப்படும் அறை புதிதாக டிஸ்டெம்பர் அடிக்கப்பட்டிருந்தது. சுவரில் உள்ள சுண்ணாம்பு படலை ஒரு சிறிய சதுரமாக வெட்டி எடுத்தேன். பக்க வாட்டில் ஆராய்ந்தபோது அந்தப் படலில் மூன்று layerகள் இருந்தன. முதலில் டிஸ்டெம்பர், அதன்பிறகு கருமையான புகை, மறுபடியும் டிஸ்டெம்பர். அறைச் சுவர்கள் புகையினால் கருமையாகிவிட்ட பிறகு மீண்டும் டிஸ்டெம்பர் அடித்திருக்கிறார்கள். மற்றொரு விஞ்ஞான அடிப்படையும் என் உதவிக்கு வந்தது. புகை எல்லா இடங்களிலும் ஊடுருவும் என்ற அடிப்படைதான் அது! மேலே தளத்தில் ஒயரிங் செய்த இடத்தை நீக்கி விட்டுப் பார்த்த போது புகை படிந்ததற்கான அடையாளம் நன்றாகவே தெரிந்தது. இந்தச் சாட்சியங்களெல்லாம் கோர்ட்டில் விரிவாக எடுத்துச் சொல்லப்பட, ஆட்டோ சங்கருக்குத் தூக்கு தண்டனை கிடைத்தது.

ஜெயலலிதா ஆட்சியில் தடய இயல் துறைக்குத் தேவையான பதவிகள் மற்றும் நிதி ஒதுக்குவது சம்பந்தமாகச் சொல்லியிருந்தேன் அல்லவா; அதன் தொடர்ச்சியாக வேறொரு கசப்பான விஷயத்தையும் சொல்லியாக வேண்டும். ராஜீவ்காந்தி கொலை (முழு விவரம் பின்னால் சொல்ல இருக்கிறேன்) வழக்கில் என்னுடைய உதவி தேவைப்பட்டதால் அரசு எனக்கு இரண்டு வருடம் பதவி நீடிப்பு கொடுத்தது. அப்படி பதவி நீடிப்பு கொடுக்கப்பட்ட ஆறு மாதத்திற்குப் பிறகு, கோட்டையிலிருந்து உள்துறை செயலாளர் கையொப்பமிட்டு எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் எனக்கு கோபம் கொப்பளித்து வந்தது.

(தொடரும்)



இடையில் நிற்பவர் நாகப்பா

நாகப்பா நாடகம்!

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கஜனூர் பண்ணை வீட்டிலிருந்து ராஜ்குமாரைக் கடத்திய போது, வீரப்பன் நாகப்பாவைக் கடத்த முற்படவில்லை. ஆனால் நாகப்பா பிடிவாதமாக ராஜ்குமாருடன் வந்தே தீருவேன் என்று சொன்னதால் வீரப்பன் அவரையும் அழைத்துச் சென்றான்! அப்படி பிடிவாதமாகத் தமது மாஸ்டருடன் சென்றவர், அவரைக் காட்டில் விட்டு விட்டு வந்தது ஏன்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

வீரப்பன், ராஜ்குமாருடன் தனியாகப் படுத்துக் கொண்டிருக்க சேத்துக்குளி கோவிந்தன் பாதுகாப்பிலிருந்த தாம், மஹாளய அமாவாசை இரவில் அவனை ஏமாற்றிவிட்டுத் தப்பியதாகவும், ஆனால் சிறிது தூரத்தில் தமிழ் தேசிய விடுதலைப் படையைச் சேர்ந்த மாறன் தடுத்ததாகவும் அவனைத் தாக்கி விட்டு ஓடி வந்து விட்டதாகவும் நாகப்பா சொல்லியிருக்கிறார்.

ஆனால் கர்நாடகா காவல்துறை வேறு விதமான தகவலைப் பரப்பி இருக்கிறது. வீரப்பனை அரிவாளால் தாக்கி, தப்பி வந்ததாகவும் அப்போது தடுக்க முயன்ற கோபாலுக்கும் வெட்டு விழுந்ததாகவும் அது சொல்கிறது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் என்பார்கள்.

நாகப்பா 'தப்பியது' பற்றி 'நக்கீரன்' வட்டாரத்திலும் ஆச்சர்யம் நிலவுகிறது. "காட்டிலுள்ள வழிகள் பற்றி நாகப்பாவுக்கு இத்தனை நாட்களுக்குள் பரிச்சயம் ஆகி இருக்க வேண்டும். ஆனால் அப்படி இருந்தாலும் இரவில் காட்டை விட்டு வெளி வருவது என்பது ஒரு புது மனிதரால் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. வீரப்பனின் கடத்தல் வரலாறுகளைப் பார்க்கும் போது நாட்கள் ஆக... ஆக ஒவ்வொருவராக விடுதலை செய்து விடுவான்" என்று சொல்கிறார்கள் அவர்கள்.

"கடந்த அறுபது நாட்களாக அந்தப் பகுதியில் போலீஸ் நடமாட்டமே கிடையாது. அந்த நிலையில் கோபால் நடுக்காட்டில் பேச்சு வார்த்தை நடத்தியதாக நாங்கள் கருதவில்லை. போக்குவரத்து உள்ள சாலையிலிருந்து அதிக பட்சமாக ஆறேழு கி.மீ தூரத்தில்தான் வீரப்பன் கடத்தப்பட்டவர்களோடு கோபாலுடன் தங்கிப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருவதாக நாங்கள் நினைக்கிறோம். எனவே நாகப்பா சுலபமாகத் தப்பிவர சந்தர்ப்பம் அமைந்திருக்கக் கூடும் என்கிறார்கள் உயர் போலீஸ் அதிகாரிகள்.

நாகப்பா தப்பி வந்தது நிஜம் என்றால் வீரப்பனின் கோபம் உச்சிக்குப் போவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவனைச் சமாளிப்பது கோபாலுக்குப் பெரிய பிரச்னையாக இருக்கும். ராஜ்குமார் விடுதலைகூட தாமதம் ஆகலாம். ராஜ்குமாரை விட்டு விடும் பட்சத்தில் இரு மாநில காவல் துறையினரின் ஆக்ரோஷமான தாக்குதலை உடனடியாகச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதும் வீரப்பனுக்கு நன்றாகவே தெரியும். எனவே அவன் தனது பழைய கோரிக்கையான 'பொது மன்னிப்பை' மீண்டும் வைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

துவக்கத்திலிருந்தே வீரப்பன் கடத்தல் விவகாரத்தில் அவிழ்க்கப்படாத பல மர்ம முடிச்சுக்கள் இருக்கின்றன. 'எப்படியும் ராஜ்குமாரை மீட்டு வர வேண்டும்' என்ற நல்ல நோக்கத்தில் பல திரைமறைவு வேலைகளும் இரு மாநில அரசுகளின் உதவியோடு நடத்தப்படுகின்றன. இந்த இதழ் வெளி வரும்போது கடத்தல் விவகாரத்தில் சுபமான முடிவு வந்திருக்கலாம். ஆனால் நாகப்பா 'மீண்டு' வந்தது உட்பட பல சங்கதிகள் குறித்த மர்மங்கள் அமுக்கப்பட்டால் ஆச்சர்யமில்லை.

- கௌசி

படம்: நன்றி: நக்கீரன்

மண்டியிட வேண்டாம்!

தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் 'ஈ-கவர்னன்ஸ்' எனப்படும் மின்னணு ஆளுமை தொடர்பாக தமிழக முதல்வரின் ஆலோசகராக டாக்டர் மு. ஆனந்தகிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருக்கிறார். தமிழக அரசில் இதுவரை இல்லாத புதிய பதவி இது.

"இந்தப் புதிய பதவியில் உங்களின் பணி என்ன?"

"தமிழகத்தில் மிக வேகமாக வளர்ந்து வருகிற இணையத் தொழில் நுட்பம், கணிப்பொறி ஈடுபாடு ஆகியவை மக்களுக்குப் பல வகைகளிலும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் தமிழக முதல்வர் ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறார். மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், 203 தாலுகாக்களிலும் இந்தத் தொழில் நுட்பம் விந்தைகளைப் புரிய முடியும். சாதி, வருமான சான்றிதழ்கள், ஓய்வூதியம் தொடர்பான படிவங்கள், நிலப் பட்டாக்கள், அரசு தரும் பல்வேறு உதவிகள் போன்றவை மக்களை விரைந்து சென்று அடையும். இடைத் தரகர்கள் இல்லாமல் போவார்கள். அவர்கள் இல்லையென்றால் ஊழலின் ஊற்றுக் கண் அனேகமாக அடைபட்டுப் போகும். இந்தச் சாதனையைப் புரிவதற்கு எத்தகைய தொழில் நுட்பம் தேவை, என்னென்ன மென்பொருள்கள் அவசியம் போன்றவற்றை முடிவு செய்தாக வேண்டும். இது தொடர்பாக நிபுணர்களிடையேயும், அரசு அதிகாரிகளிடையேயும் வேறுபட்ட கருத்துகள் நிலவுவதைத் தவிர்க்க இயலாது. இந்தக் கருத்துக்களை உள்வாங்கி தீர்மானமான ஒரு முடிவை முதலமைச்சர் எடுக்க வேண்டும். அதற்கு முதல்வருக்கு உதவியாக இருப்பது என் வேலை. என் அனுபவம், அறிவின் அடிப்படையிலும், இத்துறை நிபுணர்களிடம் நான் கலந்து ஆலோசிக்கும் போது எனக்குக் கிடைக்கும் விவரங்களின் அடிப்படையிலும் நான் முதல்வருக்கு யோசனை கூறுவேன்."



• ஆனந்த கிருஷ்ணன்



• பில் கேட்ஸ்

"தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத் துணைத் தலைவர், தமிழ்நாடு தகவல், தொழில் நுட்பப் பணி முனைப்புக் குழுவின் துணைத் தலைவர்' என்று ஏற்கெனவே இரண்டு முக்கியமான பதவிகளை வகித்து வருகிறீர்கள். இப்போது புதிதாக இது வேறு. தனியாளாக உங்களால் சமாளிக்க முடியுமா?"

"இதில் பிரச்னை இருக்காது. முதல்வரின் ஆலோசகர் பதவி என்பது ஒரு கோணத்தில் பார்க்கப் போனால், தகவல், தொழில் நுட்பப் பணி முனைப்புக் குழுவின் துணைத் தலைவர்



சக்தி ஸ்தலங்கள் மொத்தம் ஐம்பத்து ஒன்று. இவற்றுள் முதலாவது காஞ்சி. ஐம்பத்தோராவது திருமுல்லைவாயில். ஐம்பத்தோர் என்பதே இப்போது மாறி அம் பத்தூர் என்று வழங்குகிறது.

— வயலூர் மு. இராமசாமி

பணியின் விரிவாக்கமே என்று கூடச் சொல்லலாம்."

"நிறைய இடங்களுக்குப் பயணம் போக வேண்டி இருக்குமே?"

"தேவைப்பட்டால் போயாகத்தான் வேண்டும். தகவல் தொழில் நுட்ப விவகாரம் தொடர்பாக எல்லா நிகழ்ச்சிகளிலும் முதல்வரால் கலந்து கொள்ள இயலாமல் போகலாம். பல முக்கியமானவர்களைச் சந்திக்க நேரம் இல்லாமல் போகலாம். அது போன்ற தருணங்களில் அவரது சார்பாக அதிகாரபூர்வமாக நான் கலந்து கொள்ளக் கூடும்."

"சமீபத்தில் பில் கேட்ஸ் டெல்லி வந்திருந்தபோது அவரைச் சந்தித்தீர்களாமே?"

"ஆமாம். இந்தியாவின் பத்து முதலமைச்சர்களுக்கு பில் கேட்ஸ் டெல்லி மௌரியா ஷெராட்டன் ஹோட்டலில் விருந்தளித்து உரையாடிய நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டேன். ஆனால் மாநில அரசின் பிரதிநிதியாக அதிகாரபூர்வமாக அல்ல. நான் அப்போது டெல்லியில் இருந்தேன். தமிழக முதல்வர் கலந்து கொள்ள முடியாமல் போனதால், என்னைக் கலந்து கொள்ளச் சொன்னார்கள். கலந்து கொண்டேன்."

"உலகின் மிகப் பெரும் பணக்காரராக இதுவரை எவ்வளவோ பேர் இருந்திருக்கிறார்கள். பில் கேட்ஸுக்கு மட்டும் என்ன தனிச் சிறப்பு?"

"இதுவரை இருந்த உலகின் நெம்பர் ஒன் பணக்காரர்கள் எல்லாம் அந்த நிலைக்கு உயர்ந்தது எண்ணெய் வளத்தால் இருக்கும். அல்லது கனிமம், வைரம் போன்ற வர்த்தகம் தந்த செல்வமாக இருக்கும். இது எதுவுமில்லாமல் தன் அறிவை மூலதனமாகக் கொண்டு இந்த நிலைக்கு வந்த முதல் நபர் பில்கேட்ஸ்தான் என்பது அவரது தனிச்சிறப்பு. இவரும் ஒரு வர்த்தகர்தான். ஆனால் மக்கள் வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டு வந்த வர்த்தகர்..."

"அவரது வெற்றிக்கு என்ன காரணம்?"

"இரண்டு. முதலாவது காரணம், கம்ப்யூட்டரைக் கையாள்வதை எளிதாக்குவது. ஆரம்பத்தில் 'கமாண்ட்' எனப்படும் கட்டளைகளை எழுதினால்தான் கணிப்பொறி செயல்படும் என்று இருந்தது. கட்டளைகளை அகற்றிவிட்டு 'ஐகான்' (icon) எனப்படும் சின்னங்களை அறிமுகப்படுத்தியது பில்லின் சாதனை. ஐகான் மீது ஒரு 'கிளிக்' செய்தால் இப்போது நமக்கு வேண்டியது திரையில் விரிகிறதே!


இரண்டாவது காரணம் அவரது தீர்க்க தரிசனம். அடுத்த சில ஆண்டுகளில் அதிகமாகத் தேவைப்படுவது என்னவாக இருக்கும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து செயல்படுத்தி வெற்றி காண்பதில் அவர் இதுவரை தோற்றதே இல்லை."

"எனினும் அவர் எங்கே போனாலும் - குறிப்பாக இந்தியாவில் ஏதோ வானத்திலிருந்து குதித்தவர் போல அவரை வரவேற்கும் ஆடம்பரம் சற்று 'ஓவர்' போலத் தோன்றுகிறதே..."

"எனக்கும் அந்தக் கருத்து உண்டு. ஏதோ ஒரு நாட்டின் ஜனாதிபதி அல்லது பேரரசர் போன்று அவரைக் கொண்டாடுகிறார்கள். கம்ப்யூட்டர் துறையில் அசைக்க முடியாத ஒருவர் அவர். சந்தேகம் இல்லை. ஆனால் அடிப்படையில் அவர் ஒரு வர்த்தகர் என்பதையும் மறந்து விடக் கூடாது. அவருக்கு இந்தியர்களின் திறமை தேவை. இந்தியா என்ற விரிந்து பரந்த மார்க்கட் தேவை.

'மைக்ரோ சாஃப்ட்'டின் மென்பொருட்களை மட்டுமே வைத்துக்கொண்டு தமிழக மாவட்டங்களிலும், தாலுகா அலுவலகங்களிலும் நிர்வாக முறையை மாற்றிவிட முடியாது. நமது அணுகுமுறை, நம் தேவை, சூழ்நிலை ஆகியவற்றுக்கு ஏற்ற மாதிரி அந்த மென்பொருட்களைத் தேவையான அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு மேற்கொண்டு மாற்றங்களைத் தனியே செய்து கொண்டால்தான் முடியும். நம்மிடம் அதற்கான திறமை இருக்கிறது. முதலில் நமது பலத்தை நாம் உணர வேண்டும். பில் கேட்ஸை நாம் மதித்தே ஆக வேண்டும். சந்தேகமில்லை. ஆனால் அவரிடம் மண்டியிட வேண்டிய அவசியமில்லை."

சந்திப்பு: **ராணி மைந்தன்**



NAVAJEEVAN BLIND RELIEF CENTRE (REGD)

(FREE HOME FOR THE BLIND AND AGED)

2-21A, SAPTAGIRI ASHRAM, TIRUCHANOOR, TIRUPATI - 517503.

Ph: 08574-39992, 38623. E-mail:navajeevan@vsnl.com

Website: www.navajeevan.org

எங்கள் பிரார்த்தனை

ஹே பகவான், பிறவியிலேயே விழிகளை இழந்துவிட்ட எனக்கு நல்ல கல்வி அறிவையும், சங்கீதத்தையும் அளித்து ஒரு புதிய வாழ்க்கையைக் கொடு-காயத்ரீ 8 வயது நிரம்பிய ஒரு அழகான சிறுமியின் வேண்டுகோள்.

ஹே ஈச்வர், எல்லோரையும் இழந்து வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் எனக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தை அளித்து உன் திருவடிகளை அடைய வழிகாட்டு-லக்ஷ்மிபாட்டி 72 வயது ஒரு மூதாட்டியின் மனமார்ந்த பிரார்த்தனை.

ஹே கருணாமயி ஈச்வரி, என் குடும்பத்தினராலும் சமூகத்தினராலும் புறக்கணிக்கப்பட்டு நம்பிக்கையுடன் போராடி வரும் எனக்கு ஒரு புதிய பாதையை காட்டு-விஜயலக்ஷ்மி 23 வயது ஒரு அனாதைப் பெண்ணின் நீண்ட பிரார்த்தனை.

ஹே ஏழுமலையானே, ஏழ்மை முதுமை காரணமாக பார்வை குறைந்து பரிதவிக்கும் எனக்கு மீண்டும் ஒளி கிடைக்க அருள் புரிவாய் - நாராயணன் 80 வயது நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஏழை முதியவரின் ஈரமான வேண்டுகோள்.

இப்படியாக திருப்பதி நவஜீவன் ஆசிரமத்தில் புதிய வாழ்க்கை நவஜீவனம் பொருட்டு தொடர்ந்து பிரார்த் தனையில் குழந்தைகளும் முதியவர்களும் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த 21 வருடங்களாக கருணை உள்ளம் கொண்ட தமிழ் வாசக அன்பர்களின் தொடர் உதவியுடன் நூற்றுக்கணக்கான பார்வையற்ற குழந்தைகள் திக்கற்ற பெண்கள் மற்றும் ஏழை முதியோர்கள் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

எங்கள் வேண்டுகோள்

திருப்பதி புண்ய க்ஷேத்திரத்தில் செயல்பட்டு வரும் எமது சமூக நலத்தொண்டு என்கிற தொடர் வேள்வியில் கருணை உள்ளம் கொண்ட ஆஸ்தீக அன்பர்களையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

அன்னதானம்/நேத்திரதானம் தொண்டுகள்

1. ஒரு நாளில் ஒருவேளை 50 குழந்தைகளுக்கு அன்னதானம் வழங்க - நாராயண ஸேவை - ரூ. 500/-
2. Annadanam Endowment Scheme: பிரதிவருடம் ஒரு குறிப்பிட்ட நாள் / திதியில் தொடர்ந்து 15 வருடம் 50 ஏழை குழந்தைகள் / முதியோர்களுக்கு அன்னதானம் வழங்க - One time donation - ரூ. 5,000/-
3. நவஜீவன் இலவச கண் மருத்துவ மனையில் ஒருவருக்கு மீண்டும் பார்வை கிடைக்க IOL கண் ஆபரேஷன் செய்ய - நேத்திரதானம் - ரூ. 700/-
4. Netradan Endowment Scheme: பிரதி வருஷம் ஒரு குறிப்பிட்ட நாளில் தொடர்ந்து 10 வருடம் "காட்ராக்ட்" கண் அறுவை செய்ய - One time donation - ரூ. 7000/-
5. தீபாவளி போன்ற முக்கிய தினங்களில் விசேஷ அன்னதானம் வழங்க 100 inmatesக்கு - ரூ. 1000/-

---

மேற்படி தொண்டுகளுக்கு அனுப்பும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு. Contributions to "Navajeevan Blind Relief Centre, Tirupati", are eligible for tax relief u/s 35AC & 80G of Income Tax Act 1961. பிறந்த நாள், திருமணநாள் மற்றும் திதி போன்ற விசேஷங்களை குறிப்பிட்டால் அன்றைய தினம் நன்கொடை அனுப்பும் அன்பர்களின் சார்பாக ஸ்ரீ ஏழுமலையான் பத்மாவதி தாயாருக்கு பிரார்த்தனை பூஜை செய்வித்து பிர சாதத்துடன் விபரம் அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் தங்களின் நன்கொடைகளை By cheque/DD/MO வாயிலாக 'Navajeevan Blind Relief Centre, Tirupati' என்கிற பெயரில் மேற்குறிப்பிட்ட அட்ரஸுக்கு அனுப்பும்படி வேண்டுகிறோம்.

"யாதேவி சர்வ பூதேஷு தயா ரூபேண ஸம்ஸ்திதா"
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

நாராயண ஸேவையில்
கே.எஸ். ஆசார்யா
ஸ்தாபகர்.

நவஜீவன் ஆஸ்ரமம், திருச்சானூர், திருப்பதி - 517503.

அலை உறங்கும்

பா. ராகவன்

ஒருகணந்தான். உடலெங்கும் பரவிப் பெருகிய மின் உணர்வு, சிந்தனையின் பேரிரைச்சலில் சிதறுண்டு போனது. ராஜுவின் கட்சி ஆட்கள் நிறைந்த ஜீப்பில் அருள்தாஸ் எங்கிருந்து வர முடியும்? வெறும் தோற்ற மயக்கம். நிற்பதுவும் நடப்பதுவும் பறப்பதுவுங் கூட சொப்பனமாகத் தெரியத் தொடங்கியாகி விட்டது. பித்து நிலையின் ஒரு உச்சபட்ச சாத்தியத்தைத் தாம் எட்டிப் பிடிக்கப் போகிறோம். வெகு விரைவில் என்று எண்ணிய மாத்திரத்தில் தன்னிரக்கம் மிகுந்து அவள் விழிகளில் சுடுநீர் முத்துக் கோத்தது. யாருமற்ற தனிமையில் அமர்ந்து அனுபவித்து அழ வேண்டுமென்ற உணர்வு நெஞ்சில் ஒரு பந்தாகச் சுருண்டு எழ, அவசரமாகப் படியேறி வீட்டுக்குள் சென்று விட்டாள்.

அப்புசாமிக்கு வாசலில் யாரோ ஒரு பேச்சுத் துணை அகப்பட்டு விட்டது. நடந்த வாக்கிலேயே பின்புறம் தென்பட்டது. நீலுப் பாட்டி முற்றத்தில் இருந்தாள். யாரையோ சபித்தபடி விபூதியைச் சலித்துக் கொண்டிருந்தன அவளது கரங்கள்.

உமாவைக் கண்டதும், "பாருடி.. விபூதில கூட கலப்படம் பண்ணிடறான்கள் மகாபாவிகள். கலி முத்தியே போச்சு" என்று சொன்னாள்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. பாட்டியின் உலகுக்குக் கதவுகள் இல்லை. ஒரே ஒரு சாளரந்தான். காற்றும் உட்புக முடியாத அச்சாளரத்தினூடே கனவுகள் புகுந்து அவளை சுவாசித்துக் கொண்டிருக்கச் செய்கின்றன.

காதல் இல்லை. கவலைகள் இல்லை. பாசம், பிரியம் என்றேனும் ஏதாவது அவளுக்கு உண்டா என்றும் தெரியவில்லை. யாரும் விரும்பாத அவலச் சுவைமிக்க தன் பூசுங்களையும் ஆருடங்களையும் கேட்டாலும் கேட்காவிட்டாலும் ஒரு வானொலிப் பெட்டி போல ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறாள்.

பேச்சுக் கொடுக்க விருப்பமின்றிப் பின்புறம் சென்று கிணற்றடி துவைக்கும் கல்லின் மீது அமர்ந்தாள்.

பாதாம் மரத்திலிருந்தொரு மைனா கிக்கீ என்று குரல் கொடுத்தபடி நீளச் சென்று மறைந்தது. இலைகள் விழுந்திருந்த கிணற்றின் நீர்ப்பரப்பு வெகு ஆழத்தில் தெரிய, பேசாமல் இறங்கி விடலாமா என்று நினைத்தாள்.

அதுவும் ஒருகணந்தான். அகிலாவின் நினைவு வந்தது. முகமே அறியாத அவள் புருஷன். தானிறந்தால் கூட அப்பா அவனுக்குத் தகவல் தர மாட்டார் என்று உறுதியாகத் தோன்றியது. மனிதர்களுக்குள் இத்தனை வன்மமும் விரோதமும் சாத்தியந்தானா என்ன?

சந்தேகமில்லாமல் மனம் எப்போதும் அன்புக்கு ஏங்கித் தவிக்கிறது. ஒரு வைராக்கியத்துடன் உறவுகளை வெட்டியெடுத்துத் தூர வைப்பதெல்லாம் எப்படி முடிகிறது மனிதர்களால்? ஒரு காகம் செய்யுமா இதை? நாய் செய்யுமா? கழுதைக்கு இயலுமா?

இந்தக் கணம் அகிலா அருகில் இருந்தால் தன் சோகத்துக்கொரு சரியான வடிகாலாக இருக்கக்கூடுமென்ற உணர்வு ஒரு தன்னிரக்கமாகப் பரவி அவள் சிந்தனையைச் சுழற்றியடித்தது.

கண்களை இறுக மூடிக் கொண்டாள். பரவிய கருமையினூடே அருள்தாஸின் சிரித்த முகம் உதித்து உதித்து மறைந்தது. அவனது விசைப்படகின் நான்கு புறமும் நீல பெயிண்ட்டால் 'மரியே துணை' என்று எழுதியிருக்கும். மரி ஏன் அவனுக்குத் துணை புரியாமலிருந்து விட்டாள்?

அந்தோணியார் கோயில் வாசலிலிருந்த மாதாவின் கண்ணாடிச் சட்டமிடப்பட்ட உருவச் சிலை முன் நின்று, லுங்கியை உயர்த்தி, உள் நிஜாரிலிருந்து தீப்பெட்டியை எடுத்துக் கொளுத்தி, அவன் மெழுகுவர்த்தி ஏற்றுவதை உமா ஒருமுறை கண்டாள்.

"இந்த பீடிச் சனியன் மட்டும் வேணாமே!" என்று நிஜமான பரிதவிப்புடன் அப்போது சொன்னாள்.

"விட்டுடறேன் பொறு உமா. எனக்கு மட்டுந்தெரியாதா? அய்யரு பொண்ணைக் கட்டிக்கப் போறவன் இப்படி சொக்கலால் பீடி அடிக்கறது எனக்கே உறுத்தாமலா இருக்கும்?" என்றான் சிரித்துக் கொண்டே.

"உனக்கு உறுத்தறதோ இல்லியோ, எனக்கு நார்றது" என்று போலியாக முகம் சுளித்து, மூக்கைப் பொத்திக் கொள்வாள் உமா.



கடல்

யட்சமான மகிழ்ச்சியைக் கலந்து ஒரு குறுகுறுப்புடன் கூடிய சந்தோஷத்தை அனுபவித்த நாட்கள் நினைவுக்கு வந்தன. மறக்கவே முடியாத அந்தக் கடல் விழாவுங்கூட.

இதெல்லாம் அப்பாவுக்குத் தெரிந்தால் என்னாகுமென்ற மிதமான பயஉணர்வு நரம்புகளில் படர, அதன் மேல் தன் பிரத்தி

அந்தோணியார் தேவாலயத்துக்குச் சுண்ணாம்பு அடித்துக் கொண்டிருந்தார்கள். கடற்கரை மணலில் குவிந்திருந்த குப்பைகள்

அகற்றப்பட்டன. நீண்ட சணல் கயிறுகளில் வண்ணக் காகிதங்கள் கொடியாக ஒட்டப் பட்டு சாலைகளின் குறுக்கே கட்டப்பட்டன. வேர்க்கோடு போட்ஜெட்டி அருகே அவசர ஓலைப் பந்தல் வேய்ந்து, பளபளப்பான மைக்குகளின் பின்னே இசைக் குழுக்கள் பாட ஆரம்பித்த போது, சிறுவர்களின் உற்சாகக் கூக்குரலுடன் திருவிழா ஆரம்பமானது.

வேர்க்கோட்டுக் கடல் பரப்பு மனிதர் களால் நனைந்திருந்தது. உமா, அற்புதமேரியின் கையைப் பிடித்துக் கொண்டு மனத்துக்குள் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தாள்.

பூக்கள் அலங்கரித்த அந்தோணியார் சப் பரம் சந்துகளில், கூட்டத்தின் நடுவே மிதந்து வருகையில் அவள் தொலைதூரத்தில் ஒரு மாட்டு வண்டியின் மேல் அமர்ந்து கைதட் டிக் கொண்டிருந்த அருள்தாஸைக் கண்டாள்.

"அண்ணனுக்கு இப்பம் பெரிய அதிர்ஷ் டம்!" என்று அற்புதமேரி சொன்னாள்.

சப்பர ஊர்வலத்தின் இறுதியில் தேவரின் சிலுவையை ஒரு படகில் ஏற்றிக் கடலில் ஊர்வலம் விடுவார்கள். பரவசத்தின் பிரகாசம் விளக்கொளிகளாக வழிய, பெருமிதத்தில் திளைத்துத் ததும்பும் படகுகள்.

ஆரம்பக் காலங்களில் யார் படகில் ஏற்றுவது என்பதற்குப் பெரும் போட்டிகள் எழுந்திருப்பதாக அற்புதமேரி சொன்னாள்.

"அப்புறமெல்லாம் 'சிஸ்ட'மாக்கிட்டாக. சிட்டுக் குலுக்கிப் போடுவாக, கோயிலாண்ட. யார் போட்டு பேர் விழுதோ, அவுக போட் டுக்குத்தான் அதிர்ஷ்டம்."

அந்த முறை அருள்தாஸுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்திருந்தது. இரவு பத்து மணிக்குக் கடல் விழா. காலை ஆறிலிருந்தே அவன் பரபரப்பாகி விட்டான்.

படகைக் கழுவி, உட்புறம் பெருக்கித் துடைத்து, எஞ்சின் சரிபார்த்து, இருக்கை களுக்குப் பூ ஜோடித்து, வண்ணக் காகிதங்கள் ஒட்டி நிமிரும்போதே மணி நாலாகி விட் டிருந்தது.

அப்போதுதான் உமா புதுப் புடைவை சரசரக்க, அற்புதமேரியுடன் கரைக்கு வந்தாள்.

ஒருகணம் அவளைக் கண்டதும் சிறகடித்த அவன் முகம் சட்டென்று அடங்கி, தங்கை யைப் பார்த்தது.

மேரிக்கு அப்போது விஷயம் தெரியாது.

"ஆரு, திநெல்வேலியா?" என்று தெரியாதது போலக் கேட்டான் அருள்தாஸ்.

"ஆமா. ஊர்வலத்துல நாங்களும் உன் கூட வருவம்; இப்பமே சொல்லிட்டேன் கேட் டுக்கோ" என்றாள் மேரி.

"ஆரு வேணாங்குது? நல்லா வாங்களேன். அய்யரு பொண்ணு போட்டு ஏறுமா?"

அவன் சீண்டலை உமா ரசித்தாள்.

"ஏரோப்ளேனே ஏறும்" என்றாள் சிரித்துக் கொண்டே.

"ராத்திரும்ப நேரமாயிரும் மேரி. வீட்டுல சொல்லிட்டு வந்துட்டாக இல்லே?"

"அதெல்லாம் பரவால்ல" என்றாள் உமா.

"அப்பஞ்சரிதான்" என்றவன், "சப்பர ஊர் வலம் முடிய ஒம்பதாயிடும். பொறவு அது லேருந்து இறக்கிக் கொண்டாந்து போட்டுல ஏத்துவாக. மூணு கடல் மைல் போவம். நூறு போட்டு ஒரே சமயத்துல மோதி மோதி வெள் ளாடறது பாக்க எப்பிடி இருக்குந் தெரியுமா? நீ சொல்லிருக்கியா மேரி?" என்று கேட்டான்.

"பாக்கத்தானே போறா" என்றாள் அற்புத மேரி.

உமாவுக்குச் சிறகு முளைத்தாற்போலி ருந்தது. இது ஒரு சந்தர்ப்பம். இரு மனங்கள் தவிர யாருமே அறியாததொரு காதல் மொட்டு. அதை மலரச் செய்வதற்காகவே இத் திருவிழா நடப்பதாக உணர்ந்தாள் அவள்.

கொப்பளிக்கும் குறும்புடன் அருள்தாஸ் புன்னகை புரிந்து கொண்டிருந்தான். அடிக் கடி, "அதிர்ஷ்டக்கார ராசாத்தி" என்று தன் படகைக் கிள்ளி முத்தமிட்டான்.

"ஐயே, படகு பொட்டப் படகா?" என்றாள் உமா.

"பின்ன? எம் மொத மொத காதலி யாக்கும்" என்றான் அருள்தாஸ்.

"அப்ப ரெண்டாவது?"

பதில் சொல்ல முடியாமல் தன் தங்கை யைப் பார்த்தவன், "அய்யரு பொண்ணு கிட்டச் சாரமா இருந்திடணும் போல" என்றான். அற்புதமேரி விழுந்து விழுந்து சிரித்தாள். முதல் முதலாகப் படகேறிக் கடலுக்குள் செல்லவிருக்கிறோம் என்கிற எண்ணமே உமாவுக்குப் பரவசமாக இருந்தது. உடன் வருபவர்களெல்லோரும் சட்டென்று மாயமாய் மறைந்துபோக, தானும் அருள் தாஸும் மட்டும் முடிவற்ற பெருங்கடலின் எல்லைகள் வரை சென்று திரும்புவது போன்ற சொற்களற்ற உணர்வில் நீந்தித் திளைத்தாள்.



சரியாகப் பத்தரைக்கு வானில் வெடிச் சப்தம் கேட்டது. மத்தாப்புகள் விண்மீன்களாகச் சிதறி உதிர்ந்தன. சொற்கள் கரைந்து சப்தமாகி, சப்தமும் நீங்கி அலையோசையெனப் பெருகிய உற்சாகக் குரல்களின் சங்கமத்தின் நடுவே சிலுவை. அருள்தாஸின் படகில் ஏற்றப்பட்டது.

ஆரவாரங்களுக்கிடையே உமாவும் அற்புதமேரியும் படகில் ஏற அருள்தாஸ் உதவினான். அவன் கரத்தைப் பற்றி ஏறும் போது உமா ஒருகணம் அவன் முகத்தைப் பார்த்தாள். இருளிலும் சுடர்ந்து ஒளிர்ந்தன அவன் விழிகள்.

இறைவன் ஏறியிருந்த படகு அதுவென்ற உணர்வு, உடன் வந்த பிற நூறு படகுகளுக்குச் சில நிமிடங்கள்தான் இருந்தன.

யார் தொடங்கினார்கள் என்று தெரியவில்லை. திடும்மென்று படகுகள் போட்டி போட்டுக் கொண்டு வந்து அருள்தாஸின் படகின் மேல் மோதின.

"யேசுவே!" என்று நெஞ்சில் கை வைத்துப் பரவசமுடன் கண் மூடி அவன் பக்தியில் திளைப்பதை உமா ஆர்வமுடன் கவனித்தாள்.

"முட்டு! முட்டு!" என்கிற குரல்கள் உரக்கக் கேட்டன.

அரிசி களையும் சப்தம் போலவே கேட்டுக் கொண்டிருந்தது, அலைகளின் மிதப்பும் நகர்வும்.

டும் டும் என்று படகுகள் முன்னேறி வந்து வந்து மோதின.

அருள்தாஸின் படகின் வெளிப்புறம் மாட்டப்பட்டிருந்த லாரி டயர்கள் நசுங்கிக் கிழிந்தன. 'ஓ ஓ' என்று மகிழ்ச்சிப் பெருக்கில் மீனவர்கள் குதித்தாட, யேசுநாதனே என்னை ஆளும் நேசனே என்று அற்புதமேரி பாட ஆரம்பித்தாள்.

யாரும் கவனிக்கத் தயாரில்லாத ஒரு தருணத்தில் அருள்தாஸ் உமாவை இஞ்சின் அறைக்குக் கூப்பிட்டான்.

"எப்பிடி மோதுறாக பாத்தியா? ஒவ்வொரு முட்டும் ஒரு பாவங்கரைக்கிற விசயம். மனசு ரொம்பக் கேவி சந்தோசமாட்டிருக்கு உமா. ஒரு முத்தந்தரலாமா?" என்று கேட்டான்.

அவள் அதைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. மறுக்கத் தோன்றவில்லையெனினும் சரியென்று தலையாட்ட இயலாததொரு இன்பச் சிக்கலில் சுழன்றடித்தது அவள் மனம்.

இருள். அரை விநாடிக்கும் குறைவானதொரு மின்னல் கணத்தில் அவன் உதடுகள் ஒற்றி விலகின.

நாணத்தில் சாம்புதலுற்றுச் சிறிப் பாய்ந்து வெளியேறி மேரியினருகே சென்று நின்று கொண்டாள் உமா.

நாலாபுறமும் படகுகளிலிருந்து கேட்ட மேளச் சப்தம் தனக்காகவே ஒலிப்பதாகப் பட்டது அவளுக்கு. லவுட் ஸ்பீக்கர் கட்டிப் பாடிய பாடல்கள் தன் மனத்தின் உணர்வுகளையே மொழிபெயர்ப்பது போலிருந்தது. சாகரத்தின் மேனியெங்கும் படர்ந்து நீந்திய நிலவின் சாறெல்லாம் தன் மீது குளிர்ந்து இறங்குவது போல் உணர்ந்தாள்.

இரவு ஒரு மணிக்கு வீடு திரும்பிப் படுத்த போது உறக்கம் வரவில்லை. மானசிகமாக அவனை மீண்டும் அழைத்துத் தன்னுடன் இறுக்கிக் கொண்டாள்.

உயிரை உரசிப் பார்க்கிற இதமான தருணங்கள். அனிச்சையாக அவள் கரம் கன்னத்தைச் சென்று வருடியது. அன்று படர்ந்த ஈரம் இன்றும் உலராதது போலவே பட்டது.

கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

முற்றத்தில் பாட்டி விபூதி முழுவதையும் சலித்துச் சேர்த்து சம்புடத்தில் கொட்டிக் கொண்டிருந்தாள். இவளைப் பார்த்ததும், "நெஞ்சுக் கமறலா இருக்கு. கொஞ்சம் மிளகு கஷாயம் வெச்சுத் தரயா!" என்று கேட்டாள்.

மௌனமாகத் தலையாட்டி விட்டு சமையலறைக்குச் சென்றவள், வாசலிலிருந்து அப்பா அழைப்பதைக் கேட்டதும் மீண்டும் வெளியே வந்தாள்.

வீதியில் அற்புதமேரி நிற்கக் கண்டு, குழப்பமுடன் விரைந்தாள்.

"என்ன மேரி?" என்றாள், ஏதும் அசம்பாவிதமாயிருக்கக் கூடாதே என்கிற பரிதவிப்புடன்.

"ஒண்ணுமில்லை. என் கூட வாயேன் கொஞ்சம்" என்றாள் மேரி.

"என்னன்னு சொல்லேன்?"

சட்டென்று அவள் கரங்களைப் பற்றிக் கொண்டவள், அரைக்கணம் பேச்சற்று நின்றாள். பின், "அண்ணன் வந்துடுச்சி" என்றாள் கண்கள் பளபளக்க.

(தொடரும்)

"அடிக்கடி ஏப்பம் வருது டாக்டர்!"

"பைனான்ஸ் கம்பெனி ஆரம்பிக்கிற எண்ணத்தை அடியோடு மறந்துடுங்க! தானே சரியாயிடும்!"

- மெலட்டூர் விஸ்வநாதன்

இன்றைக்கு ஏனோ மனம் மிக மிக சந்தோஷமாக இருக்கிறது.

குழந்தைகள் 'மன்த்லி டெஸ்ட்'டில் நல்ல மார்க்கா?

ஊகூம்...

பொதிகையில் காலை ஐந்தரை மணிக்கு ப்ளுட் ரமணியின் 'சின்னஞ்சிறு கிளியே, கண்ணம்மாவா'

இல்லை.

நெடுநாள் பிரிந்த தோழி யாரையாவது பார்த்தோமா?

கிடையாது.

ஏதாவது லெட்டர்?

கடிதப் போக்குவரத்து அறவே நின்றுவிட்டது. உறவுக்காரர்கள் எல்லார் வீட்டிலும் ஃபோன்!

பிறகு எதுவாக இருக்கும்!

நானும் காலையிலிருந்து மூளையைக் கசக்கிக் கொண்டு இருக்கிறேன். ஒன்றும் தெரியவில்லை. ஆனால், மனம் மிக மிக சந்தோஷமாக இருக்கிறது என்பது நிஜம்.

நியாயம்





தரன்

கண், மண் தெரியவில்லை எனக்கு. நவராத்திரி, ப்ளஸ் தீபாவளிக்கு என்று, வாங்கிய இரண்டு செட் புடவைகளில், ஒன்றை இன்றே கட்டிக் கொண்டேன். என்னவோ தெரியவில்லை. தீபாவளிக்கு வேறொன்று வாங்கிக் கொண்டால் போகிறது. புதுப் புடவைக்கு மேட்ச்சாக ப்ளவுஸ் கிடைத்தது இன்னொரு சந்தோஷம்!

மேரிக்கு, அவள் விரும்பியபடி மதுரைக்கு 'ட்ரான்ஸ்பர்' கிடைத்துவிட்டதே? அதுவா?

அவளுக்கு, போன வாரமே ஆர்டர் வந்துவிட்டதே? இந்த சந்தோஷம் இன்று காலையிலிருந்துதானே!

'மேரேஜ் டேயா? பர்த் டேயா...?'

ஆளாளுக்குக் கேட்டார்கள். எல்லாவற்றுக்கும் சந்தோஷமாகத் தலையை அசைத்து வைத்தேன்.

'இன்றைக்கு ஏனிந்த ஆனந்தமோ', மெள்ள 'ஹம்' செய்தேன். அதனுடன் 'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா' என்ற கோபால கிருஷ்ண பாரதியின் பாடலும், 'மா தமதா, மத தஸ தமதா' என்ற ஆபோகி ராக வர்ணத்தின் சரணமும் அனிச்சையாகக் கலந்தது மற்றுமொரு சந்தோஷம்!

என்ன ஆகிவிட்டது எனக்கு?

மனத்துள் ஒரே சிரிப்பு பிரவாகம். ஜாலியாக அரை நாள் லீவு போட்டு, வீட்டுக்குப் போய் நான் முழுவதும் சிரிப்போமா?

பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்துக் கொள்ளப் போகிறார்கள், அக்கம், பக்கத்து வீடுகளில்!

'இன்னும் பத்தே நாட்களில் அரியர்ஸ் பணம் வரப் போகிறது என்ற எதிர்பார்ப்பிற்கு இன்னும் வலு ஜாஸ்தியாக இருந்தது. அதைப் போல, 'எதனால் இந்த சந்தோஷம்' என்று மனது மெள்ள, மெள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியாக அசை போடுகிறதே. அந்த அனுபவம், 'ஒரிஜினல்' சந்தோஷத்தைவிட, சந்தோஷமாக இருக்கிறது, எனக்கு!

என்னடா இது? வயது ஆக ஆக மறதி ஜாஸ்தியாகி விட்டதா? இன்னும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை? இவ்வளவு மோசமாகவா போய் விட்டேன்? ஞாபக சக்திக்கென்று, பள்ளிக்கூடத்தில் சர்டிபிகேட்டுகள் குவிந்த காலம், அந்தக் காலம்!

'ஏய் ஏதாவது மாத்திரை சாப்பிடறயா? வல்லாரை கீரை சாப்பிடறயா?' என்று தோழிகள் ஆவலுடன் வினவுவார்கள். அப்படி ஒரு ஞாபக சக்தி எனக்கு?

ஆனால் இன்று...

எல்லாமே பஸ்மமாய் போய்விட்டது. என் திறமைகள் எல்லாமே.

கல்யாணத்திற்குப் பிறகு; இவரைக் கைபிடித்த பிறகு.

மனுஷன் பல்வலி என்று என்ன பாடு படுத்திவிட்டார். பார்க்கப் போனால், அது பல்வலிகூட கிடையாது. ஈறுகளில் வலி, உப்பு, வெந்நீர் போட்டுக் கொப்பளித்தால் சரியாகப் போய்விடும். அதற்கு அவர் படுத்திய பாடு இருக்கிறதே. துளிக்கூட பொறுக்க முடியாத ஜன்மம்.

சின்னக் குழந்தை என்றால் இரண்டு அடி வைத்து விடலாம். இவ்வளவு பெரிய ஆளை என்ன செய்வது?

'நல்ல நாளிலேயே நாழிப்பால். இப்போது கேட்கவே வேண்டாம். பல் வலி என்று குப்புற படுத்துக் கொண்டு...ச்சே...'

இதையாவது பொறுத்துக் கொள்ளலாம். குழந்தைகள் டிங்குவும் டிட்டுவும் சுவாரசியமாக டீ.வி பார்த்துக் கொண்டு இருக்கும் போது, படீரென்று குழந்தைகள் முதுகில் அறைந்து... என்ன ஒரு காட்டுமிராண்டித்தனமான சுயநலம். தாம் கஷ்டப்படும்போது, எல்லாரும் மௌனமாக, துக்கம் காக்க வேண்டும் என்ற ஈனத்தனமான எதிர்பார்ப்பு.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல்... சப்பாத்தி கட்டையை டீ.வியின் மீது வீசி... சிலீரென்று ஸ்க்ரீனின் கண்ணாடித் துண்டுகள் ஹாலில் சிதற.

விக்கித்துப் போய் விட்டன, குழந்தைகள். ஏன், நானும்தான்.

''நமது மன்னரைப் பலவாறு வாழ்த்திப் பல பாட்டுப் பாடியும் எனக்குப் பரிசு கிடைக்கல!''

''ஏன்?''

''பதிலுக்கு அவர் பஞ்சப்பாட்டுப் பாடிட்டார்!''

— கொங்கணாபுரம் வே. செந்தில்



புதிதாக வாங்கிய கலர் டீ.வி.

அரியர்ஸ் பணத்தில் வாங்கியது.

இவருக்கு, வேலைக்குப் போய் சம்பாதித்து கொடுத்து, சமையலும் செய்து, குழந்தைகளுக்குப் பாடமும் சொல்லி தந்து...

ஆபீஸ் செல்லும் பெண்கள் எல்லாரும், போன்சாய் மரங்கள்தான். மரங்களைக் குறுக்கி, பழங்களைப் பறிப்பது போல, பெண்மை என்னும் மகா சக்தியைக் குறுக்கி, அவளிடமிருந்து பலன் பெறும் சுயநலமிகள் தானே இந்த ஆண்கள்.

தகப்பனாக... கணவனாக... மகனாக... அவளுக்கு எப்போதுமே, இந்த மூவரில் ஒருவரை சார்ந்து நிற்கும் நிலை.

போன மாதம் எனக்குக் கைகளில் நகச்சுற்று வந்தது. என்ன, ஏது என்று ஒரு வார்த்தை ஆதரவாகக் கேட்கவில்லை, மனிதர். வலியுடனே எல்லா வேலைகளும் செய்ய வேண்டி இருந்தது. லீவும் போட முடியாத சூழ்நிலை. இரண்டு பக்கமும் மண்டை இடி!

வாங்கி ஒரு வாரம்கூட ஆகவில்லை. 'ஜவா' கலர் டீ.வி. அதற்குள் படீர் என்று நெஞ்சில் அடி!

டீ.வி பெட்டியை உடைக்கும் அளவுக்கு என்ன ஒரு குரூரம்? பார்த்துக்கொண்டிருக்கும் குழந்தைகளின் மனநிலை எவ்வளவு தூரம் இதனால் பாதிக்கப்படும்?

இதைத்தான் 'வீட்டு வன்முறை' (டொமஸ்டிக் வயலன்ஸ்) என்று சொல்கிறார்களோ? பெண்கள், குழந்தைகளுக்கு எதிராக பலாத்காரம்.... வன்முறை... வீடுகளிலேயே நடக்கிறது. எங்கு செல்ல முடியும்? ஊமை அழுகையாய் அழுது, கரைந்து போக வேண்டியதுதானோ?

அட... சந்தோஷம்... ஞாபகம் வந்து விட்டதே!

காலையில் செய்தித் தாளில் படித்தது.

'மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில், பல்வலி தாங்க முடியாமல் போனதால், ஒருவன் தன் மனைவியை பெல்ட்டால் அடித்து நொறுக்க, விவகாரம் போலீஸ் வரை போக, அவனுக்கு எட்டு மாத சிறைத் தண்டனை,

எம் போன்ற பெண்களுக்கு, இந்த பிரபஞ்சத்தில் எங்கோ ஒரு மூலையில், ஏதோ ஒரு வகையில் ஒரு நியாயம் கிடைத்து விடுகிறதே! அட!

அந்தச் செய்திதான், என் ஜீவனில் கலந்து, என்னுள் பரவசம் உண்டாக்கி, அந்த ஆனந்தத்தை இத்தனை நேரமும் சுவாசித்து வந்திருக்கிறேனோ!

மனம் நிம்மதி கொள்கிறது. காரணம் தெரிந்த களிப்பில்.

மானம் காத்த மல்லேஸ்வரி!

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் பல சிறிய நாடுகள் கூட தங்கப்பதக்கம் பெற்று தலை நிமிர்ந்து நிற்கும்போது, தங்கம் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் வெண்கலப் பதக்கத்தைப் பெற்று இந்தியாவின் மானத்தைக் காத்திருக்கிறார் பளு தூக்கும் வீராங்கனையான கர்ணம் மல்லேஸ்வரி!

“பளு தூக்கும் சாம்பியனாக வர வேண்டுமென்றால் அதற்கு ஒரு வழி கடின உழைப்புதான். சாப்பிடும் நேரம் தூங்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஜிம்மே(GYM) கதி என்று கிடந்து பிராக்டீஸ் செய்ய வேண்டும். இவ்வளவு முயற்சி எடுத்து நாட்டுக்குப் பெருமை தேடிக் கொடுத்ததை நினைத்தால் மனம் மகிழ்ச்சியில் துள்ளுகிறது'' என்கிறார் மல்லேஸ்வரி.


ஆந்திரா - ஒரிஸ்ஸா மாநிலங்களுக்கிடையே உள்ள அமுதா வலாசாதான் மல்லேஸ்வரியின் (செல்லமாக மல்லி) ஊர். அப்பா மனோகர் ரயில்வே பாதுகாப்புத் துறை காவலர். மல்லியின் கூடப் பிறந்தவர்கள் ஐந்து பேர் நான்கு சகோதரிகள், ஒரு சகோதரர். மல்லியையும் சேர்த்து நான்கு சகோதரிகள், பளு தூக்கும் விளையாட்டில் பல்வேறு மாவட்டங்களில் சாம்பியன்களாக இருக்கிறார்கள். சகோதரிகளுக்கு முதலில் வழி காட்டியவர் மூத்த சகோதரி நரஸம்மாதான்.

1989ல் பெங்களூரில் பளு தூக்கும் பயிற்சி முகாமை வேடிக்கைப் பார்க்க மல்லேஸ்வரி சென்றிருந்தார். அங்கு அவர் காட்டிய ஆர்வத்தைப் பார்த்த தேசிய பயிற்சியாளர் சியாம்லால் சால்வன், மல்லியையும் முகாமில் சேர்த்து பயிற்சி கொடுத்தார். அதற்குப் பிறகு தேசிய அளவில் நடந்த பல பளு தூக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு மல்லி பரிசு பெற்றார்.

மல்லேஸ்வரி இப்போது ஹரியானாவில் இந்திய உணவுக் கழகத்தில் துணை மேலாளர் பொறுப்பில் இருக்கிறார். விளையாட்டு வேலை வாங்கி கொடுத்து இருக்கிறது. கணவர் ராஜேஷூம் ஒரு பளு தூக்கும் வீரர்தான்.

மயிரிழையில் தங்கப்பதக்கத்தை மிஸ் செய்திருக்கிறார் மல்லேஸ்வரி. இவர் தூக்கிய எடை 240 கிலோ கிராம். தங்கமும், வெள்ளியும் வாங்கிய சீனா, ஹங்கேரிய வீராங்கனைகள் தூக்கிய எடை 242.5 கிலோ கிராம்! பயிற்சிகளின்போது இதைவிட அதிக எடைகளைத் தூக்கிய மல்லி, போட்டியின் போது சற்று அசந்து போனது பெரிய துரதிருஷ்டம்' என்கிறார் பயிற்சியாளர் சால்வன்.

“பத்து பதினைந்து ஆண்டுகளாக, பளு தூக்கும் பயிற்சி, போட்டிகள் என்று வெறித்தனமாக ஈடுபட்டது போதும் என்று நினைக்கிறேன். என் குடும்பத்துக்காகவும் நான் வாழ வேண்டும். இப்படிச் சொல்வதால் நான் ஓய்வு பெறப் போகிறேன் என்று பொருளல்ல. ஆந்திராவிலோ அல்லது ஹரியானாவிலோ ஜிம் நிறுவி நிறைய இளைஞர், இளைஞிகளுக்குப் பளு தூக்கும் பயிற்சி கொடுப்பதுதான் என் லட்சியம். எதிர்காலத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் பளு தூக்கும் போட்டிகளில் நமது நாடும் தங்கப் பதக்கம் பெற வேண்டும் என்பதே என் ஆசை'' என்று சொல்கிறார் மல்லி.



— கௌசி

'சோட்டா'க்களிடையே



• முன்பு 'பாய் - பாய்' இப்போது 'பை-பை'

மும்பையின் அண்டர் வர்ல்ட் ஓய்ந்துவிட்டது என்று எப்போது நினைத்தாலும், அது பொய்யான நிம்மதி என்பதைப் பறைசாற்ற ஏதாவதொரு சம்பவம் நிகழ்ந்தே தீரும். அண்மையில், மும்பையின் பிரபல 'டான்' சோட்டா ராஜனை, தாவூத்தின் வலது கையான சோட்டா ஷகீல், பாங்காக்கில் வைத்து தீர்த்துக்கட்ட முயற்சிக்க அவன் எப்படியோ தப்பித்துவிட, கூட இருந்த ரோஹித் வர்மா சுடப்பட்டு வீழ்ந்தான்.

வர்மாவும் மும்பையில் பல கொலைகளில் சம்பந்தப்பட்டிருந்தவன்தான்; முக்கியமானது – ஈஸ்ட் வெஸ்ட் ஏர்லைன்ஸ் எம்.டி. தக்கியுத்தின் வாஹித்!

சோட்டாராஜன் பாங்காக்கில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கையில், தாய் போலீஸ், கொலை தொடர்பான மூன்று பாகிஸ்தானியரையும் ஒரு தாய்லாந்து ஆசாமியையும் கைது செய்தது. அவர்களில் ஒருவனான ஷேர்கானின் ஃபோட்டோவைப் பார்த்த மாத்திரத்திலேயே, 'இது பாகிஸ்தானியே அல்ல; மும்பை 'டான்' சோட்டா ஷகீலின் அடியாள் 'முன்னா ஜிங்கடா' என்பதை மும்பை போலீசார் உறுதிப்படுத்தி விட்டனர்.

தனக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு சோட்டா ராஜன் நிச்சயம் பழி வாங்குவான் என எதிர்பார்த்து, மும்பை போலீஸ் தன்னைத் தயார் நிலையில் வைத்திருக்கிறது. ஏனென்றால், சோட்டாராஜனின் சரித்திரம், 'ரத்தத்துக்கு ரத்தம்' 'பழிக்குப் பழி' என்ற வகையிலானது.

அறுபது – எழுபதுகளில், மும்பையின் அண்டர்வால்ட் கள்ளக் கடத்தலில் மட்டுமே ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில், தாவூத்தும் சோட்டாராஜனும் நகமும் சதையுமாகத்தானிருந்தார்கள். எண்பதுகளில், பில்டர்களின் ஆதிக்கம் பெருகியபோது, அவர்கள் பண்ணிய ஏராளமான பணம், அண்டர் வர்ல்டை அவர்கள் பக்கம் ஈர்த்தது. அவர்களும், வேண்டாதவர்களை அகற்ற, இவர்களை உபயோகித்துக் கொண்டார்கள். மும்பையில், ஃப்ளாட்டின் விலை, மன்ஹாட்டனிலுள்ள விலையையே விழுங்கியபோது, அண்டர்வால்ட் விழித்தெழுந்தது.

பில்டர்களை ஏகமாகச் சுரண்டத் துவங்கவே அவர்கள் தாங்கள் பிழைக்க வென்று, இவர்களுக்குள்ளேயே கலகமூட்டி விட்டார்கள்.

இப்படித்தான், 1992ல் சோட்டாராஜனின் நெருங்கிய நண்பர்களான நரேஷ் ஜீக்கரும் மச்சிபாலாவும் போலீஸ் என்கௌண்டரில் மரித்தபோது, சோட்டாராஜன் வெகுண்டான். போலீசுக்குத் தகவல் சொன்னது, தாவூத்தின் சார்பாக மும்பையில் 'அஃப்தா' வசூலித்துக் கொண்டிருந்த ஹீம் பகதூர் தப்பா என சந்தேகித்து, அவனைத் தீர்த்துக் கட்டினான்.

இது தாவூத்தைச் சினம் கொண்டு எழ வைத்தது; தன் கையாள் சவுத்யா மூலம், ராஜனின் ஆட்கள் மூவரை தீர்த்துக் கட்டினான். உடனே சோட்டா ராஜன் சவுத்யாவைக் கொல்ல... இப்படியே இரண்டு பக்கமும் மாற்றி மாற்றிக் கொலைகள்... கிட்டத்தட்ட நூறு பேர் உயிரிழந்திருப்பர்.

அதன் பிறகு மார்ச் 1ல், 1993 குண்டு வெடிப்பு, இவர்களை நிரந்தர எதிரிகளாக்கியது. சோட்டா ராஜன், வெறியின் உச்சியில், "தேசத் துரோகிகளை ஒழித்தே தீருவேன்" என வீர முழக்கம் செய்தான். தாவூத்தைக் குறி வைத்து ஒரு தற்கொலைப் படையைக் கூட கராச்சிக்கு அனுப்பி வைத்தான். ஆனால் அது பிசுபிசுத்து விட்டது. இந் நிலையில் தாவூத் தன் அடியாளான சோட்டா ஷகீலை இவர்

கள் மீது ஏவ, சோட்டாராஜனுக்கும் சோட்டா ஷகீலுக்குமான சச்சரவுகள் தொடர்ந்தன; இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நமது போலீஸ் என்ன செய்து கொண்டிருக்கிறது என்ற கேள்வி எழலாம். சென்ற சில வருடங்களில், 'என்கௌண்டர்' என்ற போர்வையில், 'காங் வேண்ட்' ஆசாமிகள் பலரை அவர்கள் முடித்திருக்கின்றனர். ஆனாலும் தலைவர்களின் தலை தப்பி விடுவதால், அபாயம் மடியாமல் உயிர்ப்பித்தெழுந்து விடுகிறது.



கொலையுண்ட ரோஹித் வர்மா



• கொலையை ஒட்டி கைதான சோட்டா ஷகீல் ஆட்கள்

நமது இன்டலிஜென்ஸ் ப்யூரோவும், அண்டர்வர்ல்ட் டான்களுக்கிடையே நிலவும் பகைமையைச் சாதகமாக்கி, ஐஎஸ்ஐ தாவூத்துக்குப் பாதுகாப்பளிப்பது போல், சோட்டா

டார்' மோதல்!

ராஜனுக்கு இவர்கள் கை கொடுத்து, அவன் வாயிலாக அண்டர்வர்ல்டை நசுக்க முயற்சி செய்கிறார்கள்.

ஆனால் மும்பையின் பிசினஸ் வட்டாரங்களில், பெரிய ஜுவல்லர்கள், கார்மெண்ட் எக்ஸ்போர்ட்காரர்களிலிருந்து தெருவோர 'வடா பாவ்'காரர் வரை, எல்லோரும் ஏதோ ஒரு டானுக்கு 'அஃப்தா' அழுவது தொடர்ந்து கொண்டு தானிருக்கிறது. துபாய், கராச்சி, லண்டன், ஹாங்காங் என்று இந்த என்ஆர்ஐ டான்களைச் சந்திக்க, பல பெரிய புள்ளிகள் அலைவதும் உண்மைதான். சிலர் இந்த டான்களின் அடியாட்களையே தங்களிடம் வேலைக்குச் சேர்த்துக் கொண்டு விடுகிறார்கள். அவர்கள் மூலம் தலைவனைப் பிடித்து விடலாமே?

'நாங்கள் என்ன செய்வது? நாங்கள் உயிரோடிருக்க வேண்டாமா? போலீசால் எத்தனை பேருக்குப் பாதுகாப்பளிக்க முடியும்? எனக் கேள்வி எழுப்புகிறார்கள் வியாபார வர்க்கத்தினர். "ஒரு வேண்டாத குடித்தனக்காரரைக் காலி செய்யச் சொல்ல வேண்டும் என்றால்கூட, கோர்ட்டுக்குப் போனால் குறைந்தது பத்து வருஷம் ஆகும்; ஒரு 'பாய்' (டான்)யைத் தேடிப் போனால் பத்து நிமிஷத்தில் காரியம் முடிந்து விடுகிறது - 'பாய்'களிடம் மக்களுக்கு அவ்வளவு பயபக்தி" என்கிறார்கள்.

உண்மைதான்; செஷன்ஸ் நீதிபதி ஜே.டபிள்யூ. ஸிங், தமக்குச் சேர வேண்டிய 40 லட்சம் ரூபாயை ஒரு சிட் ஃபண்ட் முதலாளியிடமிருந்து வசூலிக்க, சோட்டா ஷகீலை நாடவில்லையா? "நீதிபதிக்கே இந்தக் கதி என்றால், சாதாரணவர்களின் நிலை...?" என்கின்றனர் பொதுமக்கள்.

இந்த விஷயம் இங்கே அதிக அலைகள் எழுப்பவில்லை என்பதே, மும்பையின் பொருளாதாரத்தில் அண்டர்வர்ல்டும் பின்னிப் பிணைந்திருப்பதை மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்றுதானே உணர்த்துகிறது?

இந்த "ஈஸி மணி"க்கு ஆசைப்பட்டுக் கொண்டு, பல நடுத்தர வர்க்கத்துப் பிள்ளைகள் சீரழிவதும், படித்தவர்களே, 'டான்'கள் போல் வேஷம் போடுவதும் தான் பரிதாபத்திற்குரிய விஷயங்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அண்மையில் வெளிவந்து வெற்றி நடை போட்ட 'வாஸ்தவ்' திரைப்படத்தை எடுத்தது, தீபக் நிகல்ஜே- சோட்டாராஜனின் சொந்த உடன் பிறப்பு! இது ஒரு அண்டர்வர்ல்ட் ஆசாமியின் படத்தில் சஞ்சய் தத் சொந்த வாழ்க்கையை அப்படியே படம் பிடித்திருக்கிறது. முடிவில், சஞ்சய் தத்தை சுட்டு வீழ்த்துவது, அவனது தாய் - போலீஸில்லை!

— ஜெ.ஆர்

அக்டோபர் 4 முதல் 10 வரை

அக்னிசர்மா பக்கம்

நடக்குமென்பார் நடக்கும்

மேஷம் : குரு, சூரியன், ராகு எல்லாரோட பார்வையும் உங்களை நோக்கி இருக்கறதால உங்கத் திறமை வெளிப்படும். ஏதாவது சாதனை புரிய சந்தர்ப்பம் இருக்கு. பணவிஷயத்துல பிரச்னை இல்லை. திடீர் அதிர்ஷ்டம் காத்திருக்கு. புதிய பதவி பட்டங்கள் கிடைக்கலாம். வெளியூர் பயணம் போக வேண்டி வரும். எதிர்ப்புகள் இருக்காது. கடன் தொல்லை குறையும். சில சின்ன சின்னப் பிரச்னைகள் வரலாம். பொறுமையா கையாளுங்க. வியாபாரம் பண்றவங்க எச்சரிக்கையா இருக்கறது நல்லது.

ரிஷபம் : எதிலயும் எச்சரிக்கையா இருங்க. முக்கியமா உடல் நலன்ல கவனம் வேணும். மனசில ஏதாவது சஞ்சலம் இருந்துட்டே இருக்கும். அதைப் பத்திக் கவலைப்படாதீங்க. அலைச்சல் அதிகமா இருக்கும். நினைச்ச காரியங்களை திட்டமிட்டபடி நிறைவேற்றதுல பிரச்னைகள் வரலாம். புதியவங்ககிட்ட ஜாக்கிரதையா பழகுங்க. யார்ட்டயும் வெளிப்படையா பேசாதீங்க. எதிலயும் அவசரம் வேண்டாம். கலைத் துறையைச் சேர்ந்தவங்க கொஞ்சம் அதிகமா உழைக்க வேண்டி வரும். வீண் வாக்குவாதம், சண்டை சச்சரவுகள்ல தலை காட்டாம இருக்கிறது நல்லது.

மிதுனம் : மனசுல தன்னம்பிக்கையும் துணிவும் பிறக்கும். எதிர்ப்புகள் இருக்காது. வீடு, மனை ஏதாவது வாங்க சான்ஸ் இருக்கு. எந்தக் காரியத்தை எடுத்தாலும் இந்த வாரம் வெற்றிதான். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயம் இருக்கு. பெண்களுக்கு இது உற்சாகமான வாரம். மனசுக்குப் பிடிச்ச பொருட்களை வாங்குவீங்க. கொஞ்சம் செலவு எகிறும். கவனமா இருங்க. ஜாலி டூர் அடிக்க வாய்ப்பிருக்கு. நண்பர்களால் சில பிரச்னைகள் வரலாம். எச்சரிக்கையா இருங்க. உடல் ஆரோக்கிய விஷயத்துல கவனம் முக்கியம்.

கடகம் : உங்க முகம் அழகா தெரியும். அடிக்கடி கண்ணாடி பார்ப்பீங்க. அரசியல்வாதிகளுக்கு மதிப்பு அந்தஸ்து உயருகிற மாதிரி வாய்ப்புகள் அமையும். பொருளாதார பிரச்னை இருக்காது. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டத்துக்குச் சான்ஸ் இருக்கு. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி ஒண்ணு வரலாம். திருமணமாகாதவர்களுக்கு அதற்கான சூழ்நிலை ஏற்படும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு யோக வாரம் இது. பெண்களுக்கு உற்சாகமான வாரம். புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்குவாங்க. செலவு கொஞ்சம் அதிகமா இருக்கும். பர்ஸை பத்திரப்படுத்தறது நல்லது. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரவாய்ப்பிருக்கு.

சிம்மம் : கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டு மழை பெய்யும். மனசுக்குத் தெம்பான செய்திகள் வந்து சேரும். வெளியூர் பயணத்தால நல்ல விஷயம் நடக்கும். ஏற்றுமதி இறக்குமதி பிஸினஸ் பண்றவங்களுக்கு லாபத்துக்குக் குறைவில்லை. எதிலயும் அவசரம், பதற்றம் வேண்டாம். நிதானமா செயல்படுங்க. இயந்திரத்துல வேலை பார்க்கறவங்க, இன்ஜினீயர்களுக்கெல்லாம் சின்ன சின்னத் தொல்லைகள் ஏற்படும். பக்குவமா சமாளிங்க. பொருளாதாரம் சம்மந்தப்பட்ட விவகாரங்கள்ல எச்சரிக்கை அவசியம். புதிய முயற்சிகள்ல இப்ப இறங்க வேண்டாம். வீண் செலவுகளைத் தவிர்த்திடறது நல்லது.

கன்னி : உங்க மதிப்பு, அந்தஸ்து உயரும். திறமை பளிச்சினு வெளிப்படும். நல்லவங்க உங்களுக்கு உதவுவாங்க. பொருளாதாரம் பிரச்னை இல்லை. நீங்களே ஷாக் ஆகற மாதிரி திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு சான்ஸ் இருக்கு. விருந்து ஜாலி சுற்றலுக்கு இந்த வாரம் வாய்ப்பு உண்டு. பயணத்தால நல்ல காரியம் நடக்கலாம். பேச்சாற்றல் அதிகரிக்கும். நானா இப்படி பேசறேன்னு

நீங்களே அசந்து போவீங்க. மற்றவங்க உங்களை புகழ்ந்துப் போற்றுவாங்க. வெட்கத்தால தலை குனிவீங்க. உஷ்ணம் சம்மந்தமான உபாதைகள் வர வாய்ப்பிருக்கறதால வெளியில சுத்தறதைக் குறைச்சுடுங்க.

துலாம் : உங்க மனசுக்கு இனிமையான சம்பவங்கள் நடக்கும். புதுசா பொருட்கள் வாங்க வாய்ப்பிருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு பாராட்டுப் புகழ் கூடும். பொருளாதாரப் பிரச்னை இருக்காது. பல வழிகள்ல இருந்து பணம் வரும். மத்தவங்க ஆச்சர் யப்படும்படி சில சாதனைகள் பண்ணுவீங்க. அரசியல்வாதிகள் பொறுப்போடு செயல்படறது நல்லது. அடக்கி வாசிங்க. சின்ன சின்னக் குறுக்கீடுகள் வரலாம். அதைப் பத்திக் கவலைப்படாதீங்க. எல்லாம் சுமுகமா முடியும்.

விருச்சிகம் : உங்க திட்டங்கள் நிறை வேறும். வேலை இல்லாதவங்களுக்கு வேலை வாய்ப்பு தேடிவரும். எதிர் பார்த்துட்டு இருங்க. சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் வர வாய்ப்பிருக்கு. அரசியல்வாதிகளுக்குப் பாராட்டு விழா மேடை கிடைக்கும். பெயரும் புகழும் ஜில்லுனு ஏறும். கொடுக்கல் வாங்கல்ல ஆதாயம் வரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு உயர்வு நிச்சயம். பயணத்துல எச்சரிக்கையா இருங்க. திருட்டு நடக்க வாய்ப்பிருக்கு.

தனுசு : உங்க அறிவாற்றல் பளிச்சிடற நேரம். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்குங்க. அரசியல்வாதிகளுக்குச் செழிப்பானப் பாதை இருக்கு. எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் நினைச்சது நடக்கும். சிலருக்குப் புதிய பதவிகள் வரலாம். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை இருக்கு. மகிழ்ச்சிக் கரைபுரண்டு ஓடும். புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்க வழியிருக்கு. சின்ன சின்னப் பிரச்னைகள் அப்பப்பத் தலைதூக்கும். பொறுமையா சமாளிங்க. கலைத் துறையினருக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகம் உண்டு.

மகரம் : உங்க புத்திசாலித்தனம் வெளிப்படற நேரம். இதுவரை கண்டுக்காம போனவங்க தேடி வந்து பேசுவாங்க. பொருளாதார நிலை திருப்தியா இருக்கும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. கொடுக்கல் வாங்கல்ல ஆதாயம் இருக்கு. வீட்ல விசேஷ காரியங்கள் நடக்க சந்தர்ப்பம் வரும். எதிர்ப்புகள் இருக்காது. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரும். மதிப்பும் செல்வாக்கும் எக்கச்சக்கமாக உயரப் போகுது. ஆயுதங்கள், மின்சாரம் போன்றவற்றைப் பயன்படுத்தும்போது கவனமா இருங்க. வீண் வாக்குவாதம் சண்டை சச்சரவுகள், நடந்தா ஒதுங்கிப் போறது நல்லது. வீடு, வாகனம் வாங்கற ஐடியா இருந்தா இப்ப வேண்டாம்.



மிதுன ராசிக்காரரான திருப்பூர் கிருஷ்ணனுக்கு ஜாலி டூர் அடிக்க வாய்ப்பு இருக்கிறதாம்!

கும்பம் : உங்க தோற்றம் திடீர்னு அழகா தெரியும். உங்களையே உங்களால் நம்ப முடியாது. பக்தி மார்க்கத்தில மனசு திரும் பும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டு உண்டு. உடல் நலன்ல கவ னம் வையுங்க. எதிலயும் எச்சரிக்கையா இருப்பது அவசியம். வெளியூர் பயணம் போறதா இருந்தா இப்ப வேண்டாம். எதில யும் அவசரம், பதற்றத்தை தவிர்த்துடுங்க. எல்லார்ட்டயும் சுமுகமா பழகுங்க. புதிய முயற்சி எதுவும் இப்ப வேண்டாம். இயந் திரப் பணியாளர்கள் இன்ஜினியர்களுக் கெல்லாம் இது சோதனை நேரம். ரொம்ப கவனமா வேலை பாருங்க.

மீனம் : உங்க ஆற்றல் வெளிப்படற நேரம். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க வெற்றி நடை போடுவாங்க. குடும்பத்துல மகிழ்ச்சி குதூ கலிக்கும். பண நடமாட்டத்துக்குப் பஞ்ச மில்லை. எதிர்ப்புகள் இருக்காது. கணவன் மனைவி உறவு திருப்தியா இருக்கும். சின்னதா வாய் சண்டை வரலாம். விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. வீண் அலைச் சலைத் தவிர்த்திடுங்க. உடல் ஆரோக்கியத் துல கவனம் வையுங்க. இப்ப வெளியூர் பயணம் வேண்டாம். பொருளாதாரம் சம் மந்தப்பட்ட விவகாரங்கள்ல ஈடுபட்டிருக்கற வங்க எச்சரிக்கையா இருக்கறது நல்லது.

அம்மி மிதித்து –
அருந்ததி பார்த்து –
என் மனக் கோப்பையில்
கனவுகள் வழிய வழியத்தான்
நடந்தேறியது
எனது கல்யாணம்

சின்ன வெங்காயம் உரிக்கையில்
பெரிதாகக் கண்ணீர் கண்டாலே
வேட்டி முனை
நீட்டித் தருகிற கணவன்;
பெற்ற மகளைவிட
பத்துமடங்கு பரிவுகாட்டும்
மாமி மாமனார்
சந்தோஷம்
மனம் முழுக்க சந்தோஷம்!

புத்தம் புது பூவாய்
பூப்பெய்தியதிலிருந்து
மாதா மாதத்தில் அனுபவிக்கிற
சுகமான அவஸ்தை;
என்
ஒவ்வொரு உயிர் முடிச்சிலும்
முட்டிக் கொண்டு நிற்கும்
தாம்பத்ய சிலிர்ப்பு
எல்லாம் இருந்தும்
எல்லாம் இருந்தும்
தாய்மை என்கிற கனவு
தள்ளிக் கொண்டு போகிறது...!

அன்புக் கணவனின்
நண்பர்கள் தந்த
விஞ்ஞான மருத்துவ
விலாசங்கள்...

மாதங்கள்
வருடங்களாகிப் போனதில்
வருத்தப்பட்ட
தூரத்து உறவுகள் சொன்ன
தெய்வ சன்னதிகளெல்லாம்
தொடர்ந்து தட்டியும் –
தாய்மை என்கிற
தங்க இடம்
இன்னும்
வெற்றிடமாகத்தான் இருக்கிறது!

விரைகிற பஸ்சில்
திருவிழா நெரிசலில்
எங்கோ
ஏதோவொரு பெண்
அழுகிற குழந்தைக்கு
ரவிக்கை விலக்கிக் கொடுக்கையில் –
பொங்கித் ததும்பும் ஏக்கமறிந்து
என் கையை
அழுந்தப் பற்றுகிற கணவனை
நினைக்கையில்
மறந்து போன உண்மை
மறுபடியும் ஞாபகத்தில் வருகிறது.

எனக்கும்தான் இருக்கிறது
முப்பதியெட்டு வயதிலொரு குழந்தை!

– க. சந்திரகலா



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered
No. TN / Chief PMG-141 / 2000 * Licensed to post without prepayment under PMG's
Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka.